1087
No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1350 ரமலான் 1932 பிப்ரவரி மீ | இதழ் 2

உள்ளடக்கம் — பக்கம்

4 FEB 1932

1. ஸூரயே இன்ஷிராஹ் ... 49
2. நாயக வாக்கியம் ... 52
3. நமது சங்கம். ... 53
4. பெண்ணுலகத்திற்கு ரசூலுல்லாஹ்வின் (ஸல்.) உதவிகள் ... 56
5. இஸ்லாத்திற்குமுன் ஹிந்துக்களின் நிலைமை ... 59
6. பெலூஜிஸ்தான் முஸ்லிம்கள் ... 61
7. ஆங்கில சமூக வாழ்க்கை ... 65
8. நாயகம் (ஸல்.) சந்ததிகள் ... 69
9. சுகாதாரம்—புகைக்குடி ... 72
10. அகில உலக முஸ்லிம்மகாநாடு ... 75
11. கொழும்பில் புதியபள்ளிதிறப்பு விழா ... 79
12. லைலத்துல் கத்ர் ... 83
13. பித்று ஸதக்கா ... 84
14. ஈதுப்பெருநாள் தொழுகை ... 85
15. புகழுரை ... 87
16. ஆராய்ச்சிமேடை ... 88
17. பா. தா. வின் கொள்கை வெளியாய் விட்டது ... 93
18. காலண்டர்கள் வரவு ... 94
19 சிலோன்நேயர்கட்கு நன்றிபாராட்டுதல் ... 95
20. ஆசிரியர் குறிப்பு ... 96

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா 3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	„ 4 0 0
தனிப் பிரதி	...	„ 0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 3	ஹிஜ்ரி 1350 ரமலான் மீ 1932ஆ பிப்ரவரி மீ	இதழ் 2

24 FEB 1932

ஸூரயே இன்ஷிராஹ்.

(1) உமக்காக உம்முடைய நெஞ்சை நாம் விலாசமாக்கி வைக்கவில்லையா?

(2) மேலும் உம்மைவிட்டும் உம்முடைய சுமையை நாம் இறக்கிவிடவில்லையா?

(3) உம்முடைய முதுகை ஒடித்து விடுவதற்கு தயாராக இருந்த சுமை.

(4) மேலும் உம்முடைய பதவியை உமக்காக நாம் உயர்த்தவில்லையா?

(5) ஆதலின் நிச்சயமாக கஷ்டத்துடன் இலேசிருக்கின்றது.

(6) நிச்சயமாக கஷ்டத்துடன் இலேசிருக்கின்றது.

(7) ஆதலின் (கட்டளையை அறிவித்து வைப்பதினின்று) நீர் ஒழிந்தபோது அமர்ந்து விடுவீராக.

(8) மேலும் உம்முடைய நாயனின் பக்கல் மனதை திருப்பி விடுவீராக.

[அதாவது தெய்வீக அறிவிப்பின் பளுவை சுமந்து கொள்வதற்காகவும் ஆண்டவனது இரகசியங்கள் அடங்கி இருக்கும்படியான புதையலாக இருப்பதற்காகவும் மானிடர்களை சன்மார்க்கத்தின் பக்கல் அழைப்பதின் நோக்கம் அதில் ஏற்பட்டிருப்பதாலும் இம்மை மறுமை ஆகிய இருலோகத்தின் கவலைகள் அதில் ஏற்படுவதாலும் கல்வி என்னும் பிரகாசம் நிரம்பி இருக்கவேண்டும் என்பதைக் கருதியும் உம்முடைய பிரயோசனத்திற்காகவே நாம் உம்முடைய நெஞ்சை விசாலமாக்கி வைத்தோம். அதனால் உம்முடைய முதுகை ஒடித்துக் கோணலாக்கிக் கொண்டிருந்த சுமையை நாம் இறக்கி விட்டோம். இக்கியாதி ஏற்பட்ட பின் உமக்கு மேன் பதவியை அளித்துள்ளோம். ஆதலின் ஒவ்வொரு கஷ்டத்திற்குப்பின் சுகமும், துக்கத்திற்குப்பின் சந்தோஷமும் ஏற்படுவதைக் காணலாம். உம்மை ரஸூலாக அனுப்பப்பட்ட வேலையாகிய பிரசாரத்தில் முற்றுப்பெற்ற பின் ஆண்டவனை வணங்குவதற்காக நின்று விடுவீராக. அதற்குப்பின் உம்முடைய நாயன் பக்கல் மனதைத் திருப்பிக் கொள்வீராக என்பதாகும்.]

இத்திருவத்தியாயம் மக்கியாம். இதில் நபிய்யகரீம் (ஸல்) அவர்களின் நெஞ்சு விஸ்தீரணமாய் ஆண்டவனது தஜல்லியாகிய பிர

காசத்தினால் கல்ப் நிரம்பப் பெற்றிருக்கும் விஷயமாகக் கூறப்பெற்றிருப்பதினால் இஃது ஸூரயே இன்ஷிராஹ் (விசாலமான மனதை குறிப்பிடும் அத்தியாயம்) என்னும் பெயரோடு வழங்கப் பெறுகின்றது.

சில விரித்துரை கர்த்தாக்கள் கூறுமாப் போன்று இவ்வத்தியாயம் அருளப்பட்டதின் காரணமாவது:— ஒரு நாள் எம்பெருமானார் நபிய்ய கரீம் (ஸல்) அவர்கள் ஆண்டவனது சந்நிதானத்தில் "ஏ! நாயனே! நீயோ ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கட்கு "தோழர்" என்னும் உயர்பதவி அளித்திருக்கின்றாய். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கட்கு "கலீம்" திருவசனம் புரிபவர் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டு சங்கைப் படுத்தி இருக்கின்றாய்; ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கட்கு இரும்பு மலை இவைகளை வசப்படுத்திக் கொடுத்திருக்கின்றாய்; ஹஸ்ரத் சுலைமான் (அலை.) அவர்கட்கு மனிதர்கள் ஜின்கள்மீது அதிகாரம் கொடுத்து, நெருப்பு காற்று இவைகளை வசப்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு மகிமை அளித்திருக்கின்றாய். எனக்காக தனிப்படயாது வஸ்துவை அளித்திருக்கின்றாய்" எனக் கேட்டார்கள். இதற்கு விடையாக ஆண்டவன் இவ் வத்தியாயத்தை இறக்கி வைத்தான். இவ் வத்தியாயம் மிஃறாஜ் ஷரீப் ஏற்படுவதற்குமுன் இறக்கிவைக்கப் பெற்றதாக தெரிகின்றது. மிஃராஜ் ஷரீபில் ஆண்டவன் நாயகம் (ஸல்.) அவர்களின் கீர்த்தியை மிக மிக உயர்த்தி எந்த ரசூல்மார்களுக்கும் அளித்திராத அவ்வளவு பாக்கியத்தை அளித்து, பெரும் கியாதியை உண்டு பண்ணி இருக்கின்றான் இதில் பத்திலொரு பங்கு மகிமைகூட எந்த நபிமார்களுக்கும் கிடைத்ததில்லை.

இதன் முதலாவது வாக்கியத்தில் "உம்முடைய நெஞ்சை விசாலமாக்க வில்லையா? என வினவப்பட்டிருக்கிறது. இரு முறை நாயகம் (ஸல்.) அவர்களின் நெஞ்சை மலக்குகள் பிளந்து ஒளிவினாலாய தட்டத்தில் கல்பை வைத்துக் கழுவினார்களென்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. அதில் முந்தியது நாயகம் (ஸல்.) அவர்களின் பாலியப் பருவத்தில் ஹலீமா அவர்களிடம் வளர்ந்துக் கொண்டிருக்கும் சமயம் ஏற்பட்டதாகும். இரண்டாவது மிஃராஜ் ஷரீபுக்குச் சென்ற காலத்தில் ஏற்பட்டதாகும். நான்கு முறை ஏற்பட்டதென்பதாகவும் சிலர் கூறுகின்றனர். இதன் காரணமாக இவ்வுலகமும் அதில் காணப்படும் வஸ்துவும் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு கொசுவின் இரக்கைக்கு சமமானதாக யிருக்கவில்லை. துக்கமோ அன்றி சந்தோஷமோ ஏற்படும் நேரங்களில் அவர்களில் எவ்வித வித்தியாசத்தையும் காண முடியாது. உலக மடங்கலையும் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்னும் எண்ணத்தோடு அவ்வேலையில் முற்படுவதும், உலகத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கும் ராஜாங்கத்தை அகற்றுவதற்கு முயற்சிப்பதும் அவர்களிடம் ஒரு பெரிய காரியமாக இல்லாதிருந்தது. முடிவாக நாயகம் (ஸல்.) அவர்கள் விசாலமான மனதோடு தங்கள்மீது கடமையாக்கப்பட்டிருந்த காரியாதிகளை இனிது நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்

இதன் இரண்டாவது மூன்றாவது வாக்கியத்தில் உம்முடைய முதுகை ஒடித்துக் கொண்டிருந்த சுமையை கல்ப் விசாலமாயிருப்பதின் காரணமாக நாம் நீக்கிவிட்டோம் எனக் கூறுகின்றான். ஆண்டவன் மானிடனின் ஆத்மாவில் எவ்வளவு சக்தியை ஏற்பத்தி இருக்கின்றானோ அவைகளைத் தேடுவதில் அவன் முயற்சிப்பது சகஜமாகும். அவைகளை சமாளித்து நிறைவேற்றுதற்கு அவனுக்கு சக்தி போதாமலிருக்குமாயின் அஃதே அவனுக்கு பெருங் கஷ்டமாகத் தோன்றும் அதனால் அவன் பெரும் சங்கடப்படும்படி நேரிடுகிறது.

உதாரணமாக ஒருவன் தான்மாபெரும் தலைமைத்தனம் பெறவேண்டு மென்பதை விரும்புகின்றான்: அல்லது இராஜனாய் விடவேண்டுமென்று நினைக்கின்றான். இவை பெரும் திரவியத்தை செலவு செய்வதன்றியும் பெரும் கஷ்டத்தை அனுபவிப்பது மன்றியும் கிடைக்க மாட்டாது. அதற்காக சரீரப் பிரயாசையும் ஆத்ம கஷ்டமும் அடையும்படி நேரிடுவதுடன் மனோசங்கடமும் ஏற்படுகிறது. ஆனால் மனோவிசாலம் ஏற்பட்டிருக்குமானால் எவ்வாறான கஷ்ட சங்கடங்கள் ஏற்பட்ட போதிலும் அவற்றை ஒரு பொருட்டாக மதியாமலும் மனச் சங்கடம் ஏற்படாமலும் அக் காரியத்தை நிறைவேற்றி விட

முடியும். எக் கஷ்டமும் வெகு சுளுவாகத் தோன்றும். அத்தன்மை போன்று சகல நிறை பூரணங்களையும் அடைய வேண்டுமென்னும் தைரியம் உமக்கு உண்டாகின்றது; மனதின் ஊசாட்டமானது அவற்றை நிறைவேற்ற ஏலாது செய்துக் கொண்டிருந்தது; கோரிய காரியத்தை செய்து முடிப்பது பெரும்பளுவான சுமை போலிருந்தது. ஆதலின் நாம் உம்முடைய கல்பை விசாலமாக்கி வைத்து விட்டதின் காரணமாக இவைகளை நிறைவேற்றி வைப்பது வெகு சுளுவான காரியமாய் விட்டது. இஃது கல்ப் விசால மானதற்குள்ள முதல் அடையாளமாகும்.

இதன் நான்காவது வாக்கியத்தில் உம்முடைய பதவியை உயர்த்தி இருக்கின்றோம் எனக் கூறி இருக்கின்றான். அதாவது அல்லாஹ் தஆலாவின் திரு நாமம் கூறப்படும் இடங்களிலெல்லாம் நாயகம் (ஸல்.) அவர்களின் திரு நாமத்தைச் சேர்த்தே சொல்லப் படுகிறது. ஒரு நாள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களைப் பார்த்து என் பெயர் எவ்வாறு உயர்த்தப்படுகின்றது எனக் கேட்டதற்கு தங்களுடைய திருநாமத்தை பாங்கு, தக்பீர், அத்தஹிய்யாத், குத்பா, கலிமா முதலியவைகளிலும், ஆண்டவனுக்கு வழிப்பட்டு நடக்கும் விஷயத்தையும் மாறுபட்டு நடக்கும் விஷயத்தையும் கூறப்படுமிடத்திலும், ஆண்டவனது திரு நாமம் எங்கு கூறப்பட்டிருக்கின்றனவோ அத்துடன் தங்களைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது என ஜிப்ரயீல் (அலை) கூறியதாக சஹீஹான ஹதீதில் கூறப்பட்டிருப்பது காணலாம். இஃது கல்ப் விசாலமானதற்குள்ள இரண்டாவது அடையாளமாகும்.

இதன் ஐந்தாவது வாக்கியத்தில் கஷ்டத்துடன் இலேசு உண்டாயிருக்கிறதென கூறப்பட்டிருக்கிறது. அதாவது நாயகம் (ஸல்.) அவர்கட்கு கல்ப் விசாலமாய் அதன் காரணமாக அவர்கள் மீதிருந்த பளுவு குறைந்து போயும், அவர்களின் பதவி மேன்பட்டும் போனதானது, சாமான்யமாக கிடைத்தவையன்று, அஃது மாபெருங் கஷ்ட சங்கடத்திற்கு பின் கிடைத்தவைகளே யாகும். இதற்காகத்தான் ஒவ்வொரு கஷ்டத்திற்குப் பின் சௌகரிய மிருக்கிறதென கூறி இருக்கின்றான். எது பொழுது மானிடன் கஷ்டம் பிரயாசை இவைகளைச் சுமந்து கொள்கிறானோ அதற்கு அடுத்தபடியாக உடனே சந்தோஷம் ஏற்பட்டு வருகிறதென்பதைக் காண்கின்றான். இவ்வாக்கியத்தில் ஆண்டவனை பயந்து நடந்தோர்களுக்கு அவர்களின் அரிய தொண்டிற்காக இருபதியிலும் தக்க சன்மானம் உண்டென நன்கு அறிவிக்கப்பட் டிருப்பதைக் காணலாம். மனோ சங்கடத்திற்குபின் சந்தோஷமும் துக்கத்திற்குபின் சுகமும் ஏற்படுவது சகஜமாய் இருப்பதினால் அதை மறுபடியும் திரும்பச் சொல்லி இருக்கின்றான். நாம் இவ்வுலகினை நோட்ட மிடுவோமாயின் வேளாமை செய்கிறவன் தன் தொழிலுக்குள்ள கஷ்டத்தை அனுபவித்து முடிந்த உடனே தானியங்கள் உற்பத்தியாகிற சந்தோஷத்தைக் காண்கின்றான். கல்வி பயில்வதிலோ அன்றி தொழில் முறையைத் தேடுவதிலோ கஷ்டப்படுபவன் கூடிய சீக்கிரம் தன் பிரயாசைக்குப் பின் பிரயோசனத்தை அடைகின்றான். இவ்வாறே சாலிஹான மனிதன் தன் மனோ இச்சையினை யடக்கி ஆண்டவனுக்கு வழிபட்டு தன் மீதுள்ள கடமையை நிறைவேற்றுதற்கு பிரயாசை எடுத்துக் கஷ்டம் அனுபவிப்பானாகில் அதற்குப்பின் இவ்வுலகத்திலோ அன்றி அவன் மரணித்தவுடனோ அதி தீவிரமாக அதன் தக்க பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்வான்.

நாயகம் (ஸல்.) அவர்கட்கு ஆண்டவனால் கிடைக்கப்பெற்ற நிஅமத்—காருண்யங்களை எடுத்துக் காட்டியபின் அவைகளுக்கு நன்றி பாராட்டும்படி கட்டளை யிடுகின்றான். அதாவது உமக்கு ஆண்டவனால் கிடைக்கப்பெற்ற மாபெரும் பதவிகளாகிய, நபிப்பட்டம், நேர்வழி, ஆண்டவனை அறிந்து கொள்ளல், கிலாபத், தீர்ப்பு அளிக்கும் அதிகாரம், மார்க்கக் கட்டளை இடுதல் முதலிய பதவிகளுக்கு நன்றி செலுத்தியபின் ஆண்டவனை ஞாபகிப்பதற்கு முற்படுவீராக. எந்த ஒரு நபிக்கும் ரசூலுக்கும் கிடைக்காத அவ்வளவு உயரிய அந்தஸ்த்தை அளித்துக் காப்பாற்றிய ஆண்டவன்பக்கல் மனதைத் திருப்புவீராக என இதன் எட்டாவது வாக்கியத்தில் கூறியிருக்கின்றான். (அல்லாஹ் அஃலம்)

நாயக வாக்கியம்.

எம்மனிதனில் கீழே குறிப்பிடப்படும் மூன்று காரியங்கள் காணப்படுகின்றனவோ, அன்னோன் நிறைபூர்ணமான மூமினாகயிருக்கும். (1) அல்லாஹ்வுக்காக செய்கிற காரியங்களில் யாருக்கும் பயப்படாமலிருப்பது. (2) எக்காரியம் செய்வதானாலும் மனிதர்களது தாக்ஷணியத்திற்காக செய்யாதிருத்தல். (3) இம்மை சம்பந்தமான காரியமும் மறுமை சம்பந்தமான காரியமும் ஏற்பட்டுவிடுமோயின் மறுமை சம்பந்தமான காரியத்தையே தெரிந்து அதைப்புரிவது.

இம்மூன்று காரியங்களும் மானிடன் பரிபூர்ண மூமினாய் விடுவதற்கு அடையாளங்களாகும். மானிடன் இவைகளை அனுஷ்டித்து நடப்பது கொண்டு பரிபூர்ண ஈமானுடையவனாகின்றான். இப்பூவுலகில் பரிபூர்ண ஈமான் ஏற்படுவதைப் பார்க்கினும் மேலான யாதொரு வஸ்துவும் கிடையாதென்பது திண்ணம். ஆதலின் அதைப் பெற்றுக் கொள்ளும் பாதையில் எவ்வளவு கஷ்டம் சங்கடம் ஏற்பட்டபோதிலும் அவைகளை பொருட்படுத்தாமல் நாயக கட்டளைக்கேற்ப மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று காரியங்களையும் அனுஷ்டித்து வருவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

(1) அல்லாஹ்வுக்காக செய்யும் காரியங்களில் யாவருக்கும் பயப்படாமலிருத்தலின் கருத்தாவது:—மானிடன் அல்லாஹ்வுக்காக செய்யவேண்டிய தொண்டில் மனிதர்களின் பகைமையோ, விரோதமோ பலவகையான நஷ்டமோ ஏற்பட்டபோதிலும் சரியே, உண்மையை வெளிப்படுத்துவதில் அதிகாரி அல்லது சக்கிரவர்த்தி முதலியவர்களின் பொருத்தத்தை இழக்கும்படி நேரிட்டு பல்வகையான சங்கடமடைந்து கெட்ட பெயர் உண்டாயினுஞ் சரியே, அவையாவையும் பொருட்படுத்தாது அல்லாஹ்வுக்காக வென்றே அக்காரியத்தைச் செய்து முடிப்பதாகும் என்பதே.

(2) எக்காரியத்தைச் செய்வதில் முகத்தாக்ஷண்ணியம் ஏற்படுமோ அதை விட்டுத் தவிழ்ந்துகொள்ள வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. முகத்தாக்ஷணியமானது ஒரு பெரும் கெட்ட வியாதியாகும். மானிடன் வயது முழுவதிலும் செய்த வணக்கங்கள் யாவற்றையும் ஒரே நிமிஷத்தில் அது அழித்துவிடக்கூடியதாயிருக்கிறது. ஆண்டவனுக்காக வணக்கம் புரிவதும், அவனைப் புகழ்வதும், மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காக செய்யப்படின் அதை அல்லாஹ் தஆலா எவ்வாறு பொருந்திக்கொள்வான். இவ்வாறான சம்பவத்தை ஒரு மானிடன்கூட சகித்துக் கொண்டிருப்பது முடியாதகாரியமாகும். உதாரணமாக ஒரு மனிதன், தான் அளவற்ற பிரீதி கொண்டிருக்கும் மற்றவன் தன்னிடம் சரியான பிரீதி கொள்ளாமல் மனதை வேறிடம் செலுத்திக் கொண்டிருப்பதைக் காண்பானாயின் அதுபொழுதே தான் அவன் மீது வைத்திருக்கும் அன்பை நீக்கிக்கொள்கின்றான். மானிடனின் விஷயம் இவ்வாறாக இருக்கும்பொழுது மறைவுதலான இரகசியங்கள் யாவற்றையும் அறிந்துள்ள அல்லாஹ் தஆலா வாகிறவன் வெளிப்பார்வைக்கு தனக்காக வணக்கம் புரிவதாக தெரிவித்து அதனால் மானிடர்கள் தன்னை பெரும் வணக்கவாளி என்றும், கொடை வள்ளலென்றும் மதித்து உலகத்தில் தன் கியாதியை அதிகரிக்கச் செய்யும் நாட்டத்துடன் புரியப்படும் வணக்கத்தை எவ்வாறு பொருந்திக் கொள்வான். ஒருக்காலுமில்லை என்பது திண்ணம். ஆதலின் இதை விட்டுந் தவிழ்ந்து நடப்பது பரிபூர்ணமான ஈமான் ஏற்படுதற்கு அத்தியாவசியமாகும்.

(3) மறுமை சம்பந்தமான வேலைகளை உலக சம்பந்தமான காரியாதிகளைப் பார்க்கினும் முற்படுத்தி வைத்தல் தகைமை உடையதாகும். இவ்வாறு செய்யாமல் உலக சம்பந்தமான காரியாதிகளை முற்படுத்தி வைப்பானாகில் அவனுக்குப் பரிபூர்ண ஈமான் கிட்டாதென்பது திண்ணம். எவ்வகையிலும் மேலே கூறப்பட்டுள்ள மூன்று காரியங்களையும் நிறைவேற்றுவது கொண்டு மானிடன் பரிபூர்ண ஈமானுடையவனாக ஆய்விடுவதுடன் சதாகாலத்தின் லாபத்தைப் பெற்றுக் கொள்பவனாகவும் ஆய்விடுகின்றான்.

صحيفة الإسلام مدراس

நமது சங்கம்

சோதரர்! நமது சங்கம் ஏற்பட்டு ஈராண்டுகள் பூர்த்தியாய்விட்டன. இதனிறுதியில் தமிழ் நாட்டில் அது செய்துவரும் அரும் பெரும் தொண்டை அறியாதாரில்லை என்றே கூறுவது மிகையாகாது. இஸ்லாத்தின் தத்துவங்கள் அதன் உயரிய கொள்கைகள் முதலியவற்றை மக்கள்பால் எடுத்தோதி வருவதில் அதிகப் பிரயத்தனம் செய்து வருகிறது. இஸ்லாத்திற்கு முரணான கொள்கைகளையும் அது முரண்படுவதன் காரணங்களையும் தக்க அத்தாக்ஷிகளோடு மக்கள் பால் வெளியிட்டுக் காண்பித்து வருகிறது. இச்சங்கம் ஏற்பட்டதிலிருந்து நந்தமிழ் மக்களிடையே ஓர் பூத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதெனக் கூறுவது மிகையாகாது. முஸ்லிம்களின் நிர்ணயம், மார்க்க பக்தி முதலியவற்றைப் பொருத்து நம் தமிழ் நாட்டை யாவரும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

காதியானி—அஹ்மதியாக் கொள்கைகள் நம் மார்க்கத்திற்கு முற்ற முற்றமுரணானதென்பது யாவருமறிந்ததே. இக் கொள்கைகள் குலாம் அஹ்மத்கானைப் பின்பற்றியதாகும். காதியானி வகுப்பார் குலாம் அஹ்மதை நபி என்றே கூறுகின்றனர். அஹ்மதிய வகுப்பினர் குலாம் அஹ்மதை வாக்குச்சொல்லப்பட்ட ஈஸா வென்றும்; மஹ்திய முஜத்திதென்றும் கூறியதுமல்லாமல் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் பற்பலவாரான தப்பர்த்தங்கள் செய்து அநேக நூல்களை வெளியிட்டனர். அக்கோஷ்டியினரின் கொள்கைகளுக்கு அப்போதைக்கப்போது தக்க வாயாப்புக் கொடுக்கப்பட்டு வடதேசத்தில் ஓரளவு அதனைப் பின்பற்றியவர்களிடமே அக்கொள்கையிருந்து வருகிறது. இக்கெட்ட கொள்கைகளை விட்டு நம் தமிழ்நாடு வெகுநாளாக மிக பரிசுத்தமாகவே இருந்தது. தாருல் இஸ்லாம் பத்திராதிபர் துண்டுப் பிரசுரம், தத்துவ இஸ்லாம், தாருல் இஸ்லாம் இவைகள் மூலமாய் அக் கெட்ட கொள்கைகளை தமது தீய பிரசாரம் மூலம் மக்களிடையே பரத்தி வந்தார். அதனால் நம்மவரிடையே இம் முரண்பட்ட கொள்கைகள் பரவலாயிற்று. இயேசுவின் இரகசியம்., ஜவாஹிருல்புர்கான் முதலிய நூல்களை அஹ்மதிய்யாத் தலைவரான முஹம்மத் அலீயால் எழுதப்பெற்ற நூல்களிலிருந்து மொழி பெயர்த்து வெளியிட ஆரம்பித்தார். இவைகளைப்படித்து நம் மக்களிர்ச் சிலர் வழி தவறி நடக்கவும் ஆரம்பித்துவிட்டனர். மேலும் தத்துவ இஸ்வாம், தாருல் இஸ்லாம் மூலமாக மக்களின் மார்க்க பக்தியைக் குலைக்கும்படியான அநேக வியாசங்களையும் வரைந்து வெளியிட்டார்; வெளியிட்டுக் கொண்டும் வருகிறார். இதனாலேயே தொன்று தொட்டு முஸ்லிம்கள் அதைக் கண்டித்து வருகின்றனர். திருக்குர்ஆனின் வியாக்கியானமென்று ஜவாஹிருல் புர்கானின் பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கின்றார். அது காதியானி முஹம்மதலியின் பயானுல் குர்ஆன் என்னும் நூலின் மொழி பெயர்ப்பேயன்றி வேரில்லை. அதில் எண்ணத் தொலையாத தவறுகள் காணக் கிடக்கின்றன. அவற்றிலநேகக் கொள்கைகள் திருக்குர்

ஆனுக்கே முற்ற முற்ற முரண்பட்டதாகவே இருக்கின்றது. அவைகளை யாரேனும் நிர்ணயங் கொள்வாராயின் நிச்சயமாய் காபிராய் விடுவாரென்பது திண்ணம். இதற்கு குர்ஆனின் வியாக்கியானமென்று பெயரிடப்பட்டிருப்பதுதான் ஆச்சரியத்தினும் பெரும் ஆச்சரியமாக யிருக்கின்றது. கிறிஸ்துவர்களின் கொள்கையான சிலுவைக் கொள்கையை இந்த ஜவாஹிருல்புர்கான்தான் ஸ்திரப்படுத்துகின்றது. திருக் குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அற்புத நிகழ்ச்சிகளை யெல்லாம் அது மறுக்கின்றது. அநேக மார்க்கக்கட்டளைகளை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருவாக்கியத்திற்கு முரணாக புறட்டிக் கூறுகின்றது. இம்மாதிரியான நூல்கள் நம் முஸ்லிம் மக்களிடையே இருக்குமாயின் எவ்வாறான விபரீதம் ஏற்படுமென்பது நேயர்கள் அறிந்தவையே.

இதுமட்டுமா? நாயக வாக்கிய மென்றொரு புத்தகத்தை வெளியிட்டு விற்பனை செய்து வருகிறார். அதனை கவனிக்கப்புகின் எம்பிரான் (ஸல்.) அவர்களின் மாட்சிமையை குறைக்கும்படியான வியாசங்களை கைகூசாது அதில் வரைந்து வைத்திருக்கிறார். இந்த லக்ஷணத்தில் இன்னூலுக்கு நாயக வாக்கியமென்றும் பெயர் வைத்துக்கொண்டார். இயேசுவின் இரகசியத்தை எடுத்துக் கொள்வோம் அதில் கூறப்பெற்றிருக்கும் அபாண்டக் கூற்றுகளை விவரிக்கப்புகின் அப்பப்பா? இவ்வேடடங்கா? ஈஸா (அலை.) அவர்கள் சம்மந்தமாகவும் மர்யம் (அலை.) அவர்கள் சம்பந்தமாகவும் திருக் குர்ஆனின் அநேக இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. மர்யம் (அலை.) அவர்களின் கற்பின் தூய்மையைப்பற்றி அநேக அத்தியாயங்கள் வலியுறுத்துகின்றது. மரியம் (அலை.) அவர்கள் யூசுப் நஜ்ஜாருடன் சம்மந்தப்பட்டு ஈஸா (அலை.) அவர்களைப்பெற்று விட்டார்களென்று யூதர்கள் கட்டிவிட்டனர். இப்பொய்க்கூற்றை திருக்குர்ஆன் மறுத்து அவர்கள் அல்லாஹ்வின் (குத்ரத்) தத்துவத்தைக்கொண்டே பிறந்தார்களென்று நிரூபித்து விட்டது. அவதூரான இக்கெட்ட கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஈஸா (அலை.) அவர்கள், ஈசுப் நஜ்ஜாருக்குப் பிறந்தவர்களென்று இயேசுவின் இரகசியம் என்னும் நூலில் வரையப்பட்டிருக்கின்றது. பரிசுத்த நபீ அவர்கள் சிலுவையில் அறைபட்டார்களென்றும், காஷ்மீரத்தில் அடக்கப்பட்டிருக்கிறார்களென்றும் அதில் எழுதப்பட்டிருக்கிறது. ஈதெல்லாம் அஹ்மதீயாக்களின் கொள்கையேயன்றி வேறு யாருடைய கொள்கை.

இவைகளை நம் சங்கத்தார் பரிசீலனை செய்து இதுவரை நூற்றுக் கணக்கான தவறுகளை தக்க ஆதாரங்களோடு நிரூபித்துக்காட்டினர். அவைகளை ஒப்புக்கொண்டு திருத்தி அமைத்து விடுவதாக பா. தா. பஹிரங்க அறிக்கை வெளியிட்டார். அப்படி அறிவித்து வருஷம் இரண்டாகின்றது. அவ்வாறு ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. காலாவதி டைம் நெருங்கி விட்டதால் முஸ்லிம் உலகம் இதனை மறந்திருக்குமென்றெண்ணி எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 14-வது ஆண்டில் கால் வைத்துவிட்டதாகத் தானே வெற்றிமாலை சூட்டிக்கொள்கிறார் ஆஹா? இதுவன்றோ வெற்றி.

மேலும் பா. தா. தொன்று தொட்டே அஹ்மதிய இயக்கத்தில் சம்மந்தப்பட்டு அக்கோஷியார்களிடம் ஊதியமும் பெற்றுவந்தார் என்பதை தாருல் இஸ்லாத்திலிருந்தே பன்முறையும் விளக்கிக் காண்பித்திருக்கின்றோம். இக்கோஷ்டியினரால் வெளியிடப்பெறும் பத்திரிகைகளை ஒருங்கேசேர்த்து "பைகாமெசுல்ஹில்" அச்சிடப்பெற்றிருந்ததை நாம் எடுத்துப் பிரசுரித்திருந்தது

நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதில் தாருல் இஸ்லாமும் சேர்க்கப்பட்டிருந்தது யாவருமறிந்ததே. 24-12-31-ல் வெளியான லைட் பத்திரிகையில் அஹ்மதியாக்களால் பற்பல பாஷைகளிலும் வெளியிடப்படும் 22 பத்திரிகைகளின் புகைப்படம் பிரசுரமாயிருப்பதாகவும் அதில் தாருல் இஸ்லாம் சேர்க்கப் படாமலிருப்பதால் தான் அஹ்மதி யல்லவென்று பா. தா. வரைகின்றார். ஏற்கெனவே தாருல் இஸ்லாத்தின் புகைப்படம் பிரசுரிக்கப் பட்டிருந்தபோது தமது அனுமதியன்றி அவர்கள் பிரசுரித்து விட்டதாக தப்புக்காரணங் கூறினர். லைட் பத்திரிகையில் இப்பொழுது தமது பத்திரிகையின் படம் பிரசுரிக்கப்படாமைக்கு தாம் அக்கோஷ்டியில் சேராமைதான் காரணமென்று வரைகின்றார். அஹ்மதியாக் கொள்கைகள் கெட்டதென நம் சங்கத்தாரும் இதரர்களும் எடுத்துரைத்ததின் பயனாய் அக்கெட்ட கொள்கையைவிட்டு விலகிக்கொண்டார் போலும். அக் கெட்ட கொள்கையை விட்டுவிட காரணஸ்தர்களாக இருந்தவர்கட்கு பா. தா. நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார் ஆனால் இக்கெட்ட கொள்கையாகிய அஹ்மதிய்யா இயக்கத்தைவிட்டு விலகிக் கொண்டதாக பேனாமுனையால் கிறுக்கி விடுவதுமட்டும் போதாது செய்கையிலும் அதைக் காட்டியே தீர வேண்டும். மேலேகூறியவண்ணம் ஜவாஹிருல் புர்கான், இயேசுவின் இரகசியம் நாயகவாக்கியம் முதலிய நூற்கள், காதியானி—அஹ்மதியாக் கொள்கையால் நிரப்பப்பட்டிருப்பதால் அவைகளைத்திருத்தி ஒழுங்குபடுத்த வேண்டும். அது சம்மந்தமாய் தத்துவ இஸ்லாம், தாருல் இஸ்லாம் பத்திரிகையின் மூலம் வெளியிட்டிருக்கும் கொள்கைகளை மறுத்து பஹிரங்க அறிக்கை வெளியிட வேண்டும் அவ்வாறு செய்தால்தானே உண்மையாக அவர் அஹ்மதிய இயக்கத்தை விட்டு விலகிவிட்டதாக முஸ்லிம் உலகம் நம்பமுடியும்.

இங்கு மற்றோர் விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டி யிருக்கிறது அதாவது லைட் பத்திரிகையானது அஹ்மதிய்யாக்களுடையதென்று ருஜுவாய்விட்டது; அதில் கூறப்படும் மார்க்க சம்பந்தமான விஷயங்கள் விடைகள்யாவும் அஹ்மதியர்களின் கொள்கை என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். மார்க்க வினாவிடைகளென்று பா. தா. தப்புந்தவறுமான விஷயங்களை வெளியிட்டு வந்தாரென்பது யாவருமறிந்ததே. போதாக்குறைக்கு அஹ்மதியக் கொள்கைகளை வெளியிட்டுவரும் லைட் பத்திரிகையிலிருந்து வினாவிடைகளைப் பிரசுரித்துக் கொண்டு வருகிறார் அவைகள் முஸ்லிம்களால் ஒப்புக்கொள்ளக்கூடியவை அல்லவென்பதை நேயர்கள் உணர்வார்களாக. லௌகீக ராஜீ விஷயங்களில் 'லைட்'டிலிருந்து விஷயங்களை எடுத்துப் பிரசுரிப்பதில் எமக்கொன்றும் ஆக்ஷேபனையில்லை. மார்க்க விஷயத்தில் முஸ்லிம்கள் அஹ்மதியாக்களைப் பின்பற்றுவது தகைமை யுடையதாகா வென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட அஹ்மதிய்ய இயக்கம் இவ்வாறு நசுக்கப்பட்டுப் போய் தம் பத்திரிகையின் அவயமும் குன்றி நிறம் மாறி சக்ராத் நிலைமைக்கு வந்து விட்டதால், தனக்கு அறிவுறுத்தி இவ்வாறு சீர்த்தமடையு மாறுசெய்துகொண்டிருக்கும் அரும்பெரும் பத்திரிகைகள் மேல் மூச்சு விட்டுக்கொண்டு சக்ராத்திலிருக்கிறதென்றும், அவ் வியக்கங்களை எல்லாம் தகர்த்து தாம் ஜெயமடைந்து விட்டதாகவும் உளறிக் கொட்டியிருக்கின்றார். தம்முடைய பத்திரிகை நாளுக்கு நாள் க்ஷீணதிசையடைந்து வருவதையும் தமது நூல்களின் இரகசியம் வெளியாகி அவைகள் விற்

பணேயாகாமலிருப்பதையும், தமக்கெதிரிடையாக வுள்ள பத்திரிகைகள் தினேதினே அபிவிர்த்தியடைந்து வருவதையுங் கண்டு மனம் சகியாதவராய் அழுக்காறு கொண்டு அவ்வாறு கூறத் துணிந்தார் போலும். இக் கூற்றுக்களே எல்லாம் ஒருக்காலும் முஸ்லிம் உலகம் ஏற்றுக் கொள்ளாதென்பதைத் தெரிந்திருந்தும் அவர் தம் பத்திரிகை வாயிலாய் இவ்வாறு அபாண்டமாகப் புழுக முற்பட்டிருப்பது தான் பேராச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய கூற்ருக இருக்கிறது.

நம் முஸ்லிம் சோதரர்கள் இவ்வாருன கெட்ட கொள்கைகள் நம் தமிழ் மக்களிடையே பரவாதிருப்பதற்கு சகல துறைகளிலும் முயற்சித்து அவைகளே அகற்றுவதற்கு வழிதேடுவார்களாக. பா.தா-வும் அஹ்மதியாக் கொள்கைகளே அகற்றி உண்மையை எடுத்துக்கூற முற்படுவாராக.

பெண்ணுலகத்திற்கு ரசூலுல்லாஹ்வின் (ஸல்.) உதவிகள்.

ஹஸ்ரத் சர்வரே ஆலம் ரஸூலேகரீம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகத்தின் கண்ணுள்ள சகல ஜீவராசிகள் அனேத்திலும் முக்கியமாக பெண்களின் உரிமை விஷயத்திலேயே அதிக கவனஞ் செலுத்தியிருக்கின்ருர்கள். அது விஷயமாக அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருப்பதாவது :—

"என் சுபாவமானது மூன்று வஸ்துக்களின் மீது அளவு கடந்த பிரீதியும் அன்பும் உடையதாய் இருக்கிறது. (1) பெண்மணி (2) நறுமணம், (3) தொழுகை."

நாயகம் (ஸல்.) அவர்கட்கு மாதர்கள் பால் அத்தியந்த அன்பும் அனுதாபமும் ஏற்படுவதற்கு காரணமாய் இருந்தவை எவை என்று அவர்களின் ஜீவிய சரித்திர வாயிலாக நாம் ஆராய்ந்து பார்க்கின் நான்கு முக்கிய சம்பவங்களேத் தெரிந்து கொள்கிருேம்.

(1) நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திரு அவதாரம் புரிவதற்கு முன்னமேயே அவர்களின் தந்தையார் காலஞ் சென்று விட்டனர். இதன் தாத்பரியமாவது நாயகம் (ஸல்.) அவர்கள் நெறியுடன் வளர்ந்து சீருஞ் சிறப்பும் எய்திய பெருமைக்கு தாயாரைப்போல் தந்தையாரும் உடன் படாமலிருக்கவேண்டு மென்று ஆண்டவன் நாடினன் என்பதே.

(2) வாலிப பருவத்திற்குப் பின்னர், நாயகம் (ஸல்.) அவர்கள் வியாபாரஞ் செய்வதற்கு எண்ணங்கொண்ட சமயத்தில் அவர்கட்கு உதவிசெய்ய முன்வந்தவர் ஆண்பாலரன்று. ஆனல் பெண்மணியே முன்வந்தார். அப் பெண்மணி தம்மிடமுள்ள பணத்தை நாயகம் (ஸல்.) அவர்களிடம் கொடுத்து என் பணத்தைக்கொண்டு வியாபாரம் செய்ய விரும்புவீர்களாயின் இரண்டுபங்கு லாபம் தருவதாகக் கூறினர்கள். (இம்மாது ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்களாகும்.)

(3) நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் நபித்துவத்தை வெளியிட்டபொழுது முதன் முதல் ஹஸ்ரத் கதீஜாநாயகி அவர்களே ஈமான் கொண்டார்கள்.

(4) நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்விகத்தை விட்டு நீங்குஞ் சமயத்தில் அவர்களின் திவ்விய சிரசானது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மடிமேல் இருந்தது.

இந் நான்கு காரணங்களினலேயே உலகத்திற்கெல்லாம் கடைசி தீர்க்கதரிசியாகிய முஹம்மத் (ஸல்.) அவர்களின் மூலமாக பெண்ணுலகத்தாருக்கு சிறப்பும் பெருமையும் கிடைத்தது. அவர்களாலேயே பெண்களின் நிலேமை மிக்க உயர்பதவிக்கு வந்தது. இவ்விஷயத்தில் ஆண்கள் பெண்களேப்போல் அவ்வளவு உரிமை பாராட்ட முடியாது. பெண்களுடன் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் இணையற்றதாய் இருப்பதுபோல் பெண்பாலருக்கு நாயகம் (ஸல்.) அவர்கள்

கொடுத்தருளிய உரிமைகளும் அவர்களை பாதுகாக்கவேண்டிய கடமைகளும் நிகரற்ற தாய் இருக்கின்றன.

இஸ்லாத்திற்குமுன் பெண்கள் நிலைமை.

நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் இப்பூ உலகின்கண் ஜனிப்பதற்கு முன்னர் மாதர்களின் நிலைமை எவ்வாறிருந்தது? உலகத்தின் ஒவ்வொரு தேசத்திலும் பெண்களின் மதிப்பானது ஒரு கைதி அல்லது அடிமை என்பதை விட அதிகம் உயர்ந்ததாய் இருக்கவில்லை. பெண்வர்க்கத்தார், ஆண்வர்க்கத்தார் அனந்தரம் கொள்ளும் வஸ்த்துவென்றே கருதப்பட்டனர். ஒரு பெண்ணின் சொந்தக்காரன் இறந்து விடுவானுயின் அப்பெண்ணுனவள் பிதுரார்ஜிதம் போல் வாரிசுக்காரரின் பங்கில் சேர்க்கப்படுவாள். நீதி விசாரணை மன்றங்களில் பெண்களின் சாட்சியம் ஒப்புக்கொள்ளப்படாமலிருந்தது. மத அனுஷ்டானங்களில் பெண்களுக்கு சமவுரிமை அளிக்கப்படவில்லை. ஒரு விக்கிரகத்தின்மீது பெண்ணின் கையானது பட்டுவிட்டால் அவ்விக்கிரகம் அசுத்த மாகிவிட்டதென்று கருதும் காலமாக இருந்தது. அரப் நாட்டிலும் ஹிந்துஸ்தானத்திலும் குற்றமற்ற சிறுமிகள் உயிருடனேயே புதைக்கப்பட்டு வந்தார்கள். புருஷன் இறந்தால் மனைவியையும் உயிருடனே அப்புருஷனேடு உடன் கட்டையில் ஏற்றி எரித்துப்போடுவார்கள். பெண்களுக்கு சொத்து வைத்துக்கொள்ள உரிமை கிடையாது. அவர்கள் தேடிச் சம்பாதித்த பொருள்கள் ஆண்பிள்ளையின் கையில் போய்விடும். அநேக பெண்மணிகள் பாலருந்தும் பாலைப் பருவத்திலேயே மணமுடிக்கப் பெற்றுக் கொண்டிருந்தனர். இன்னும் அப்பாலைப் பருவத்திலேயே விதவைகளாகப் போய்க்கொண்டு மிருந்தனர். மறு விவாகஞ் செய்வதற்கு அவர்கட்கு உரிமை அளிக்கப்படாமலிருந்தது. ஆண் வர்க்கத்தாருள் ஒவ்வொருவனும் 10, 20, பெண்களை மண முடித்துக் கொள்வதற்கு பூரண சுதந்தர முடையவனுய் இருந்தான். சில சமயங்களில் 10, 20 புருஷர்கள் ஒரே மனைவியை சிற்றின்ப நுகர்ச்சிச்சாக உபயோகித்துக் கொண்டிருந்தனர். புருஷன் தான் இஷ்டப்பட்ட சமயத்தில் தனது மனைவியை விவாக பந்தத்திலிருந்து விலக்கிவிடுவான். மனைவியானவள் எவ்விதக் கொடிய கஷ்டத்திற்குள்ளாயினும் புருஷனை விட்டு நீங்குவதற்கு உரிமை இல்லாதவளாய் இருந்தாள்.

இஸ்லாம் மத ஸ்தாபகரின் ஜீவகாருண்யம்.

நாயகம் (ஸல்.) அவர்களின் உயரிய போதனைகளும் தத்துவங்களும் உலகமக்களுக் கிடையே புதியதோர் சகாப்தத்தை உண்டு பண்ணியதுபோல் விசேஷமாகபெண் வர்க்கத்தாரின் நிலைமையிலும் ஒருபொழுதுமில்லாத ஒரு புதிய முன்னேற்றத்தை உண்டு பண்ணிற்று. மடமையே குடிகொண்டிருந்த முற்காலத்து மனிதருள் எவரும் கனவிலுங்கூட நினைப்பதற்கரியதான அத்துணை உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. நாயகம் (ஸல்.) அவர்கள் தோன்றிய காலந் தொடுத்து பெண்களின் கௌரவம் என்னும் கதிரவன் உச்சிவரை வந்து சேர்ந்துவிட்டது. ஆடவர்களின் பெருந் தன்மையை வேறுபடுத்தி விளக்கிக் காட்டக்கூடிய உரை கல்லைப் போன்றிருக்கும்படியான அத்துணை உயர்ந்த நிலைமைக்கு முன்னேற்றப்பட்டனர். அதாவது ஆடவர்களின் நற்குண நல்லொழுக்கத்தைப்பற்றி திட்டமாகத் தெரிந்துக் கொள்ள வேண்டுமானுல் அவர்கள் தங்கள் பெண்டீர் களுடன் எவ்வளவு தூரம் தயவு, அபிமானம் தூய்மை, அன்பு, காதல், முதலிய சற்குணங்களோடு நடந்துக்கொள்கின்றனர் என்பதிலிருந்தே தீர்மானித்தல் வேண்டியதாயிற்று. நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் தங்கள் சஹாபாக்களைப்பார்த்து மிகத் தெளிவான முறையில் பொதுவாக "எவரொருவர் பெண்கள், பிள்ளைகள், உற்றூர், உறவினர்களுக்கு மிக்க நல்லவராய் இருக்கின்ருரோ அவரே உங்களில் மிகச் சிரேஷ்டமானவர். யான் எனது குடும்பத்தினர்களை நல்ல விதமாய் பரிபாலித்து வருகிறேன்." என்று கூறி இருக்கின்ருர்கள். இத் திருவாக்கியத்தினல் நாம் அறியக் கூடியது யாதெனில் ஆடவர்களின் உயர்த்திக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரு காரணமாய் பெண்கள் இருக்கின்றனரென்பதே. ஒருவர் இறைவனுக்கும் அவனது திருத்தூதருக்கும் முன்னுல் தம்மை ஓர் உண்மை முஸ்லிம் என்பதாக நிரூபிக்க முன் வரவேண்டுமானுல் அவர் பெண்களை ஆதரிக்கும் விஷயத்தில் தக்க பொறுப்பு வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

நபிபெருமானாரின் சீரிய வாழ்க்கை.

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் தங்களின் பெண்சாதிமார்களுடன் எவ்வாறு பரிசுத்த வாழ்கையை நடத்தினார்கள் என்பதை அறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவ்விஷயமாய் சில உதாரணங்களை ஈண்டு கவனிப்பாம் :—

(1) நாயகம்(ஸல்) அவர்கள் தங்களுடைய 25-வது வயதில் ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்களைத் திருமணஞ் செய்து கொண்டார்கள். அவ்வமயம் அம்மங்கையர்க்கரசி 40 வயதுடையவராயும் இருமுறை விதவையாகியும் சில குழந்தைகளுக்கு மாதாவாயும் இருந்தார்கள். இவ்வாறு வயதில் எவ்வளவோ வித்தியாச முடையவராய் இருந்தும், நாயகம்(ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்கள் மீது அளவற்ற அன்பு வைத்து பரிசுத்த வாழ்க்கை நடத்திவந்தார்கள். ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்கள் 65 வயது வரை ஜீவித்திருந்தார்கள். அவர்கள் உயிரோடு இருக்கும் வரை நாயகம் (ஸல்) அவர்கள் வேறு விவாகம் புரிந்துக்கொள்ளவில்லை. மதினமா நகர் வந்து வேறு பெண்களை விவாகஞ் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தும் போதும் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்கள்மீது கொண்டிருந்த அன்பை மறந்துவிடவில்லை. எப்போதாவது நாயகம் (ஸல்) அவர்களின் சமுகத்தில் ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்களின் ஞாபகம் செய்விக்கப்படுமாகில் தங்கள் நேத்திரங்களிலிருந்து கண்ணீர் வடிப்பார்கள். வெளி இடங்களிலிருந்து நல்ல அருமையான பொருட்கள் வருமாகில் அவற்றில் ஒரு பாகத்தை ஹஸ்ரத் கதீஜா நாயகி அவர்களின் தோழிமார்களுக்கு அனுப்பிவைப்பார்கள்.

(2) ஹஸ்ரத் ஸபிய்யா நாயகி அவர்கள் ஒட்டகத்தின் மீது யாத்திரை செல்ல நாடினால், அவர்கள் ஒட்டகத்தின் மீது ஏறுவதற்கு, நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் முழந்தாளைக் கொடுத்துதவுவார்கள். அதுபோது ஹஸ்ரத் ஸபிய்யா நாயகி அவர்கள், தங்கள் பாதத்தை வைத்து ஏறி இலகுவாக ஒட்டகையின் மேல் இருந்துக் கொள்வார்கள். ஒரு தடவை ஒட்டகத்தின் கால்கள் சறுகிவிடவே, நாயகம் (ஸல்.) அவர்களும் ஹஸ்ரத் ஸபிய்யா நாயகி அவர்களும் கீழே விழுந்துவிட்டார்கள். இந்த விபத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அபூதல்ஹா (ரலி.) அவர்கள் உடனே நாயகம் (ஸல்.) அவர்கள் சமுகம் விரைந்து சென்றனர்; நாயகம் (ஸல்.) அவர்கள் முதலில் பெண் பிள்ளைக்கு ஒத்தாசை செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹஜ்ஜதுல் விதாஃவில் பெண்கள் விஷயமாக குறிப்பிட்டவைகள்.

நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களின் ஜீவிய காலமுழுவதும் செய்த அரிய உபதேசங்களில் ஹஜ்ஜதுல்விதாஃவின் நாளாகியஹிஜ்ரி 10, துல்ஹஜ்ஜு மாதம் 9உ அன்று செய்த போதனையே மிக முக்கியமானதாகும். அது சமயம் 1 லக்ஷத்து 40 ஆயிரம் வீர சிகாமணிகள் அவர்களின் கொடியின் கீழ் கூடி இருந்தனர். நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களின் மேன்மையான ஜீவியத்தில், தங்களுடைய உம்மத்துமார்களுக்குக் கூறிய கடைசிப் போதனையும், இறுதி வாக்கியமும், அவர்களுக்காக விட்டுச் சென்ற நேர்வழிப் பொக்கிஷமும் அதுவேயாகும் என்று உறுதியாகக் கூறலாம். அந்த உபதேசத்தில் பெண்களுக்கு அளிக்கவேண்டிய உரிமைகளைப் பற்றியும் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் மிகமிக தெளிவாகவும் அழுத்தமாகவும் வற்புறுத்திக் கூறினார்கள். அத்திரு வசனங்கள் கீழ் வருமாறு :—

“முஸ்லிம்காள்! உங்கள் சகோதரிகள் விஷயமாக ஆண்டவனுக்குப் பயந்து நடவுங்கள்; நீங்கள் ஆண்டவனுக்காக அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்கள்; அவர்களின் தேகத்தை நீங்கள் ஆண்டவனின் சட்ட திட்டங்களின்படி உங்கள்மீது ஹலாலாக்கி வைத்திருக்கின்றீர்கள்; படுக்கையில் அன்னிய புருஷர் நுழையாதபடிக்கு பேணிக்கொள்வதே பெண்ணின் கடமையாகும். பெண்மணிகள் அன்னிய புருஷர் வருவதற்கு இடங் கொடுப்பாராயின் அவர்களுக்கு தக்க தண்டனை அளியுங்கள். பெண்களுக்கு சந்தோஷம் உண்டாகும் வண்ணம் நல்ல உடையும் உணவும் கொடுத்து போஷிக்கவேண்டியதே உங்களுடைய கடமையாகும்.”

சுப்ஹானல்லாஹ்! பாருங்கள் எவ்வளவு உருக்கமான வசனங்கள்! எவ்வளவு திட்ட

மான வாக்கியங்கள்! எத்துணை உயரிய போதனைகள்! உலகத்தின்கண் காணப்படும் வேறு எந்த புஸ்தகசாலைகளிலும் நீங்கள் சென்று பெண்களின் உரிமை விஷயமாக இத்துணை சீரிய முறையில் உறுதியாகப் போதிக்கக் கூடிய ஒரு நூலைத் தேடிப் பார்த்தபோதிலும் ஒருபொழுதும் கிடைக்கப்போவதில்லை.

திருமறையும் பெண்மணியும்.

நாம் இதுகாறும் தெரிந்துக்கொண்ட விஷயங்கள் எல்லாம் முக்கியமாக நபிகணயகம் (ஸல்.) அவர்கள் சம்பந்தப்பட்டவைகளாகும். திருக்குர்ஆனிலிருந்தும் தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்டி உறுதிப்படுத்தினலொழிய இவ்விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சி யாவும் சம்பூர்ணமாக மாட்டாது. ஆகவே, பெண்களின் உரிமைகள், அவர்களுக்குச் செய்யவேண்டிய நலவுகள் முதலியவற்றைக் குறித்து குர்ஆன் மஜீதில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்று கவனிப்பாம்:—

1. பெண்டீர்களுடன் தயவு தாட்சண்யமாக நடந்துக் கொள்ளுங்கள்.

2. பெண்மணிகள் ஆண்பாலரின் உடையாகவும், ஆண்பாலர்கள் பெண்பாலரின் உடையாகவும் இருக்கின்றனர்.

3. மாதாபிதாக்களும் பந்துக்களும் ஏதாவது சொத்துவிட்டுச் செல்வாராயின் பெண்களுக்கும் அதில் பங்கு உண்டு.

4. மாதர்கள் வீட்டைவிட்டு வெளிப்படாதிருப்பார்களாக. முற்காலத்திருந்த அறிவில்லாத மக்களைப் போன்று தங்கள் அழகு சௌந்தரியத்தை அன்னிய புருஷர்கள் பார்க்கும்படி வெளியில் அலைந்து திரியாதிருப்பார்களாக.

5. நீங்கள் மிக்க சந்தோஷமாக பெண்களின் மஹறை நிறைவேற்றுங்கள்.

6. விதவைகளை மறு விவாகஞ் செய்வியுங்கள்.

7. விவாக றத்திற்குப் பின் பெண்ணின் "இத்தா" முடிவாகுமானல் அவர்கள் வேறு புருஷர்களுடன் நிகாஹ் செய்துக்கொள்வதை தடைசெய்யாதீர்கள்.

8. விவாக றத்துபெற்றுள்ள மாதருக்குப் பொருளுதவி செய்தல் விவேகிகளின் கடமையாகும்.

நஞ்சகோதரிகளுக் கோர் வேண்டுகோள்.

நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் பெண்பாலருக்கு அளித்துள்ள உரிமைகளைப்பற்றி இங்ஙனம் அருமையான உதாரணங்களாலும், நிகரற்ற சரித்திர நிகழ்ச்சிகளாலும் உண்மையினை நாம் நிரூபித்துக் காண்பிப்பதோடு அன்பிற் சிறந்த சகோதரிகளுக்கு ஒரு வார்த்தையும் சொல்ல விரும்புகிறோம். அருமை வாய்ந்த முஸ்லிம் சோதரிகாள்! இதிலிருந்து நீங்கள் செய்யிதெ ஆலம் (ஸல்.) அவர்கள் எவ்வளவு தாராள சிந்தையுடனும் அன்புடனும் உங்களுக்கு உரிமையும் சுதந்தரமும் அளித்துள்ளார்கள் என்பதை அறிந்துகொண்டீர்கள். உங்கள்மீது காட்டப்பட்ட இத்துணை தயவுக்கும் அன்பிற்கும் பிரதியாக நீங்களும் அன்புடனும் தாராள சிந்தையுடனும், நாயகம் (ஸல்) அவர்கள் காண்பித்துள்ள மார்க்க சட்டதிட்டங்களில் அணுவளவும் பிசகாது நடந்து மேன்மை பெறுவீர்களாக.

இஸ்லாத்திற்குமுன் ஹிந்துக்களின் நிலைமை

ஹிந்துஸ்தானத்தில் இஸ்லாத்தின் ஜோதி பிரகாசிக்கு முன்னர் பண்டைய ஹிந்துக்களின் நிலைமை எவ்வாறிருந்தது? "அல்பீரூனி" என்ற முற்காலத்து சரித்திராசிரியரால் எழுதப்பெற்ற "கிதாபுல் ஹிந்த்" என்ற நூலினும் சிறந்ததாக இக் கேள்விக்கு உலகத்தில் காணப்படும் வேறெந்த நூலாலும் சரியான பதில் கொடுக்க வியலாது. "அல்பீரூனி" எனபவர் நன்கு கற்றறிந்தவர். சரித்திராசிரியராகவும், தர்க்க சாஸ்திரியாகவும் இருந்தார். அவர் எழுதியவை அனைத்தும் தம் காதால் கேள்விப்பட்டவை அன்று. ஆனல் நேரில் கண்டனவற்றையே எழுதியுள்ளார். அவர் ஹிந்துஸ்தானத்திற்கு வந்து இங்குள்ள பல அறிவாளிகளுடன் நெடுநாள் அடுத்துப் பழகியவராய் இருந்ததால் அவர்

தாம் கண்ட உண்மையான விஷயங்கள் யாவற்றையும் சேர்த்துத் திரட்டி இந்திய சரித்திரமாகக் கோர்வை செய்தார். அக்காலத்திய ஹிந்துக்களின் நிலைமையைப் பற்றி "அல்பிரூனி" எழுதியவை அடியில் வருமாறு:—

இந்தியர்கள் திரேகத்திலுள்ள உரோமங்களைக் களைவதில்லை: ஆரம்பத்தில் அவர்கள் கொடுமையான உஷ்ணத்தின் காரணமாக நிர்வாணமாகவே அலைந்து திரிந்திருக்கின்றனர்; அவர்களிடம் தலைமுடியை கத்தரிக்கும் வழக்கம் கிடையாது. ஏனெனில் சூரிய வெப்பத்தினின்று தங்களைக் காத்துக் கொள்ளும் எண்ணத்துடன் க்ஷவரம்செய்யாமல் உரோமங்களை அப்படியே வளரவிட்டுக்கொண்டிருந்தனர். மீசையை அடர்த்தியாக வளர்த்துவந்தனர். அவர்கள் மர்மஸ்தானத்தின் ரோமங்களைக் களைந்துக் கொள்கிறதில்லை. இவ்வழக்கத்தை அனுசரிப்பதற்கு ஓர் காரணம் கூறிக் கொண்டிருந்தனர். அதாவது அவ்விடத்து உரோமங்களை போக்காதிருப்பதால், சிற்றின்ப வேட்கை அதிகரிக்குமென்பது அவர்களது கருத்து. ஆகவே அவர்களில் சிற்றின்ப நுகர்ச்சியில் அதிகப்பிரிய முள்ளவர்கள் மறைவிடத்திலுள்ள உரோமங்களைச் க்ஷவரம் செய்துகொள்வது கிடையாது. நகத்தை நீளமாக வளரவிடுவார்கள். அன்னோர் தங்களின் சோம்பேரித் தனத்தைப் பற்றி மிக்க பெருமை பாராட்டுவார்கள். ஏனெனில்வேலையில்லாத ஒழிந்த நேரங்களில் தங்களின் நீண்ட நகங்களால் தலையை சொறிந்து கொண்டிருப்பதும், பேன் ஈர் முதலியவைகளை உரோமங்களிலிருந்து கிள்ளி எறிவதும் ஆகிய இவ்விதமான நேர்ப்போக்கைத் தவிர தங்களின் மெய்மறந்த உல்லாச வாழ்க்கையில் வேறெந்த வேலையும் அவர்கள் செய்வதில்லை.

அன்னபானாதிகள்

அவர்கள் சாணத்தால் மெழுகப்பட்ட தளத்தின்மீது ஒருவருக்குப்பின் ஒருவராக உட்கார்ந்து போசனம் செய்கின்றவர்களாக யிருந்தார்கள். ஒருவர் சாப்பிட்டது போக எஞ்சியுள்ள உணவை மற்றவர் உண்பதில்லை. அவர்கள் உண்ணும் பாத்திரம் மண்பாண்டமாக இருந்தால் உண்ட பிறகு அதனை எறிந்து விடுவர். வெற்றிலை சுண்ணும்புடனே பாக்கும் சேர்த்து அவர்கள் சுவைத்துவிட்டு பற் துலக்காமலிருக்கும் காரணமாக அவர்களது பற்கள் செவந்து காணப்படும். அவர்கள் வெறும் வயிற்றில் கள்குடித்து விட்டு அதன்பின் சாதம் சாப்பிடுகின்றவர்களாக யிருந்தனர். கோ மூத்திரமும் சில சமயத்தில் அருந்துவர்.

உடைகள்

காற் சட்டைகளுக்குப் பகரம் அவர்கள் வேஷ்டி உடுப்பவர். ஆடை அணிவதில் அதிகப் பிரியமில்லாதவர்கள்; ஒன்று அல்லது இரண்டு அங்குலம் அகலமுள்ள வஸ்திரத்தை இடுப்பில் இணைத்து கோவணமாக கட்டிக்கொண்டு திருப்தியுறுவர். அவர்களில் துணியின்மீது அதிக விருப்பமுடையவர்கள், பஞ்சுகளால் நிறையப்பெற்றுள்ள துணிகளால் செய்யப்பட்ட காற்சட்டைகளை அணிவர். குதிரையின்மேல் வைக்கப்படும் ஜீனியிலுள்ள மெத்தைக்குப் பகரம் உபயோகிப்பதற்குரிய அவ்வளவு பஞ்சுகள் ஒரு கால் சட்டையில் அமைந்திருக்கும். அது ஓர் அளவுக்குள்பட்டதாகவும் காணப்படுவதில்லை. பாதங்கள் கூட சரியாகத் தெரியா வண்ணம் அவ்வளவு நீளமாயும் பெரியதாயும் இருக்கும்; காற் சட்டையிலுள்ள கயிற்றை இடுப்பின் பின்புறமாக கட்டிக்கொள்வர்.

பழக்க வழக்கங்கள்

நீராடுவதற்கு முன் அவர்கள் கால்களை கழுவிக் கொள்வர்; பிறகு முகம் கழுவிக் கொள்வர். மனைவியுடன் சேர்க்கை செய்வதற்குமுன்னர் ஸ்நானஞ்செய்துக்கொள்வர்; பெண்களைப்போன்று ஆண்களும் நகைகளை அணிந்துகொள்வர்; காதில் கடுக்கன், கையில் காப்பு கால் விரலிலும் கைவிரலிலும் தங்க மோதிரம் பாதசரம் முதலியவைகள் அணிந்துகொள்வர். குதிரையின்மேல் ஜீன் போடாமலே சவாரி செய்வர். ஜீன் இருந்தால் இடது பக்கமாக ஏறியே அவர்கள் சவாரி செய்வது வழக்கம். ஒரு கூட்டத்தார் யாத்திரை போகுஞ் சமயம் குதிரை சவாரியாக இருப்பவன், அக்கூட்டத்தின் பின்னேயே வரும்படி செய்வார்கள். குதிரைச் சவுக்கை இடுப்பின் இடப்புறத்தில் தொங்கவிடுவர். வலது தோளிலிருந்து இடுப்பின் இடது புறமாக ஒருவகை பட்டை அணிவர். சில கஷ்டமான நேரங்களில் பெண்களிடம் யோசனை கேட்பார்கள். பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளையே அதிகம் கவனிப்பர்.

பெலூஜிஸ்தான் முஸ்லிம்கள்.

பெலூஜிஸ்தானில் நான்கு முக்கிய ஜாதியார் வாசஞ்செய்கின்றனர். பர்தஹியர், பெலூஜியர், பட்டானியர், ஹஜாறியர் என்ற இந் நான்கு ஜாதியார்களே அத்தேசத்து புராதன மக்களாகும். இவர்கள் யாவரும் முஸ்லிம்களேயாவர். இந்நான்கு வகுப்பார் களைப்பற்றியும் சற்று விளக்குவாம்.

பெலூஜியர், பர்தஹியர்.

இவ்விரு ஜாதியாரும் கொயிட்டாவில் தொன்று தொட்டு வதிந்து வருகின்றனர். இவ்விரு வகுப்பாரும் அடுத்தடுத்து வாசஞ் செய்து வருவதால் இன்னோரின் நடைவுடை பாவனைகளைப்பற்றி நாம் பொதுவாக இங்கு ஆராய்வோம். இவ்விரு கூட்டத்தாரின் வெளிப்படையான வித்தியாசம் என்னவெனில், பர்தஹியர்களின் தலை முடி மிகக் கட்டையாகவும் பெலூஜியர்களின் தலை முடி நீளமாயும் இருக்கும். பர்தஹியர்கள் தங்கள் தாடிகளை கட்டையாகவும் பெலூஜியர்கள் நீளமாகவும் வளர்ப்பர். பெலூஜியர்களின் உடைகள் நீளமாயும் பர்தஹியர்களின் உடைகள் குறுகியதாயும் காணப்படும். இவ்விரு சமூகமும் பார்ஸி பாஷை பேசுபவர்கள். காலில் செருப்பு அணிவர். இவ்விரு வகுப்பாரும் தேகபலத்திலும் தர்ம சிந்தனையிலும் பிரக்யாதி பெற்றவர்கள். ஆனால் மார்க்க ஞானம் குன்றியவர்களாய்க் காணப்படுகின்றனர். பெலூஜியர்களிலும் பர்தஹியர்களிலும் ஒரு சிலரிடத்தில் "நீங்கள் தொழுகின்றீர்களா?" என வினவினால் "எங்கள் பெரியார் தொழுதுகொள்கிறார்; அதனால் நாங்கள் தொழவேண்டிய அவசியமில்லை" என பதிலளிக்கின்றனர். இதிலிருந்து அவர்கள் எவ்வளவு தூரம் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கின்றார்களென யூகித்துக்கொள்ளலாம்.

ஒருவர் (வேற்று மனிதர்களாயினுஞ் சரி) அவர்களைக் கண்டு பேசுவதற்குச் சென்று சந்திக்குஞ் சமயத்தில் முதலாவதாகப் பெரியாருடைய சுகக்ஷேமங்களைக் குறித்து விசாரிக்கின்றார். அளவு கடந்த உபசாரத்தோடும் பிரியத்தோடும் அப்பெரியாரின் செய்தியைப் பற்றியே சம்பாஷணைகள் நடக்கின்றன; அவ் விஷயத்திலே மிகுந்த நேரம் செலவாகிப் போகும். கடைசியில் பிரிந்து செல்லும் சமயத்தில் முகமன் கூறும் வழக்கத்தைக் கீழ்வரும் வாக்கியங்களால் முடிக்கின்றனர். "தாங்கள் எங்கள் தகுதிப்படி தங்களுக்கு அவசியமான விருப்பத்தைக் கூறினால், அதை நிறைவேற்றுதற்கு தக்க முயற்சி செய்வோம்."

இவ்விரு ஜாதியாருள் ஒரு சாரார் மடமையிலும், கன்னெஞ்சிலும் எவரும் வெறுக்கத் தக்கவிதமாக மிதமிஞ்சிக் காணப்படுகின்றனர். இவர்களுக்குள் அநேக உட்பிரிவுகளுண்டு அவ்வகுப்புகள் ஒவ்வொன்றின் பெயரைக் குறிப்பிடுவது கொண்டு விரிவாகிவிடும். அவர்களின் நடைவுடை பாவனைகளைப் பற்றி ஒன்றும் திட்டமாகத் தெரிவதற்கில்லை. பெலூஜியர் பர்தஹியர் இவர்களில் பெரும்பாலோர் வீடுகளில் தங்கும் வழக்கம் கிடையாது. சிலர் ஆட்டுமந்தைகளை வைத்துக்கொண்டு பற்பல இடங்களிலும் மேய்த்து ஜீவனம்செய்து வருகின்றனர்.

பட்டானியர் அல்லது அப்கானியர்

இருக் தேசத்தார் இவர்களை "அப்கான்" என்னும் பெயரால் அழைக்கின்றனர். இப் பெயரால் அழைப்பதற்குறிய காரணம் யாது என்பதற்குறிய வரலாற்றையும் அன்னோர் கூறுகின்றனர். அதாவது:—புக்து நஸ்ர் என்பவர் இப்பட்டாணியர்களைக் கைது செய்த காலத்தில் அவர்கள் அழுது புலம்பினர். இப்புலம்பலுக்கு பார்ஸியில் 'பகான்' அப்கான்' என்று சொல்லப்படும். அக்காலத்திலிருந்து அவர்கள் இப்பெயராலேயே அழைக்கப்படுகின்றனர். இதுவன்றி மற்றோர் காரணமும் கூறப்படுகிறது. அதாவது "அப்கான்" என்பது ஷாவலிகான் என்பவரின் பாட்டனார் பெயராய் இருந்தது. அவர் அப்கானியர்களின் மூதாதைகளில் மிக்க கீர்த்தி வாய்ந்தவர். ஆனதுபற்றி இச்சாதியார் அவர் பெயராலேயே பிரஸ்தாபிக்கப்படுகின்றனர். பட்டாணி வகுப்பினர் அப்கானியர்

களுடனேயே முக்கியவாறும் சம்பந்தம் வைத்துக்கொள்வதினல் பாரசீகர்கள் இன்னேரை அப்கானியர் என்றும், இந்தியர் இன்னேரை பட்டாணியர் என்றும் அழைக்கின்றனர். செய்யிது ஜமாலுத்தீன் அப்கானி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் கூறுவதாவது "அப்கானியர் உண்மையில் இருக் தேசத்தவராகும்; இன்னேரின் பாஷையானது புராதன பார்சி பாஷையை ஒத்திருக்கிறது" அவர்களுக்கு பிற்காலத்திலிருந்தபற்னிஸின், லின்வற்மான் முதலிய சரித்திராசிரியர்களும் இதே அபிப்பிராயத்தையே எழுதியிருக்கின்றனர்.

இப் பட்டான் ஜாதியருள் அநேக உட்பிரிவுகள் காணப்படுகின்றன. கில்ஜி, ஈதல், காகர், யூசுப்ஜயி, பங்கஷ் முதலிய வகுப்பார் யாவரும் பட்டான் ஜாதியைச் சேர்ந்தவர்களே. ஒவ்வொரு வகுப்பாரிலும் பல்வேறு உட்பிரிவுகள் இருக்கின்றன. கில்ஜி வகுப்பானது—தக், தோக்சி, சுலைமான், கீல், பாகில் முதலிய பல உட் பிரிவுகள் அடங்கியுள்ளது. இப்படியே ஒவ்வொரு வகுப்பும் கணக்கற்ற உட்பிரிவு களோடு காணப்படுவதுடன் ஒவ்வோர் உட்பிரிவிலும் வேறுபட்ட பல கோத்திரங்களும் ஒவ்வோர் கோத்திரத்திலும் வெவ்வேறு குடும்பங்களும் அடங்கி யுள்ளன. அவை ஒவ்வொன்றையும் இங்கு எழுதினல் இடம் போதாமையாகும்.

பட்டாணியர்கள் இயற்கையிலேயே பராக்கிரமமும் தைரியமும் பொருந்திய வீர ஜாதியாராய் இருப்பதாலும்; பழமையான கால முதற்கொண்டு அவர்கள் சண்டைத் தொழிலிலேயே ஈடுபட்டு வருவதாலும், இராணுவ நிர்வாகத்தில் சீர் திருத்தம் பெற் றிருக்கின்றனர். அவர்கள் தங்கள் சுபாவத்தில் மிகத் தீர குணமுள்ளவர்களாய்க் காணப்படுவது போன்று செய்கையிலும் நடத்தையிலும் துஷ்டத்தனமுள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர். அவர்களுடன் நெருங்கிப் பழகுவதற்கு சிலருக்கு நடுக்கமுண்டாகும். ஒரு இந்தியர் அவர்களின் பேச்சு வார்த்தைகளை கவனித்தால் மிக அநாகரீகமுடையதாக இருக்கிறதென்று நிச்சயமாகக் கூறுவர். ஆயினும் பட்டாணியர்கள் பூராவும் இவ்வித சுபாவமுடையவரன்று. சிலர் மிக்க சாதுக்களாயும் மரியாதை ஒழுக்கமுடையவராயும் நாகரீகமுடையவராயும் காணப்படுகின்றனர். இச் சாதியார் தங்களுடைய காலக்ஷேபத்திற்காக மிகவும் சொற்பப் பொருளைக் கொண்டு திருப்தியுறுகின்றனர்; ஆடுகளை தொலியுடனே சாப்பிடுகின்றனர்; ஆட்டை அறுத்த தொலியை நெருப்பிற் சுட்டு பிறகு பொரித்துப் புசிக்கின்றனர்; அவர்களுக்கு அகப்பையால் அருந்தும் வழக்கம் கிடையாது. போசன பந்தியில் பாத்திரங்கள் பரிமாறுவதுமில்லை. உணவுகளை தரையில் வைத்து கையாலேயே எடுத்துப் புசிக்கின்றனர்.

அவர்களின் உடைகள் பழையதாகவும் நூதனமாகவும் இருக்கின்றன. அவர்கள் சட்டை அணிகின்றனர். சட்டைக்கைகள் யானையின் துதிக்கை போன்று மிக நீளமாகத்தொங்குகின்றது. கைகள் குறுகினதாயும் உடல் நீளமானதாயுமுள்ள ஒருவித அங்கியும் அணிகின்றனர். தனவந்தர்கள் காஷ்மீர் கப்பளத்தினல் செய்யப்பட்ட ஜுப்பாக்களை அணிந்துகொள்கின்றனர். அநேக வகுப்பார்கள் தலை ரோமங்களை சிரைத்துக் கொள்வதில்லை. அவர்கள் காதின் சமீபம் முடியை நீளமாகவும் சுருள் சுருளாகவும் வைத்துக் கொள்கின்றனர்.

பட்டாணியப் பெண்கள் மிகவும் நீளமாகவும் கனமாகவும் புடவைகள் அணிகின்றனர். அவர்கள் அணியும் சட்டையின் முன் பக்கத்தில் யானையின் தும்பிக்கை போன்று நீளமான ஜேப்பு தொங்குகின்றது. நாட்டுப்புறப் பெண்கள் ஒருவித கஷ்டமுமின்றி வெளியில் அலைந்து திரிகின்றனர். ஆனல் நகரங்களில் கோஷா வழக்கம் மிக்க கண்டிப்பாக அநுஷ்டிக்கப்படுகிறது. மலைப்பிரதேசங்களிலுள்ள வகுப்பாரின் பெண்கள் குதிரை வாலிலுள்ள ரோமங்களைக்கத்தரித்து தங்கள் தலை முடிகளோடு சேர்த்துச் சிங்காரிக்கின்றனர். கில்ஜி வகுப்புப் பெண்கள் தங்கள் தலை முடிகளில் சல்லா (வளையம்போன்ற ஒரு வகை நகை) கோர்த்து ஜடை பின்னி தங்கள் நெற்றியில் ஜாலர் மாதிரி தொங்கவிடுகின்றனர்.

பட்டாணியர்கள் நாற்காலியின்மீது மிக அபூர்வமாகவே உட்காருகின்றனர். தரையில் பாய் விரித்து உட்காருவதே அவர்களின் சர்வ சாதாரண வழக்கமாய் இருந்து வருகிறது. மற்ற ஜாதியாரிடத்து காண்பது

போன்று ஆடம்பரமும் பெருமையும் இவர்களிடத்தில் கிடையாது. தங்கள் வேலைக்காரர்களுடனேடு அல்லது தங்களை விட வெகுதூரம் குறைந்த அந்தஸ்துடையவர்களுடனேடு இருந்து சமபோஜனம் செய்வதில் சற்றும் சிந்திக்கமாட்டார்கள்.

விவாக முறை.

பட்டாணியர்கள் கொண்டாட்டங்களிலும் கலியாணம் முதலிய சுபவைபவங்களிலும் கூட்டமாக வளையம்போல் கூடி நின்று ஆட்டம் புரிகின்றனர். அத்துடனே பாடவும் செய்கின்றனர். ஒவ்வொரு பாடகரும் மேளம் அடிப்பவனின் முகத்தை நோக்கிய வண்ணமாகவே பாடிக்களிக்கின்றனர். ஈதுல் பித்ர் முதலிய பெரு நாள் வைபவங்களும் இத்தகைய நடனங்களுடனேயே கொண்டாடப்படுகின்றது. இதில் 7 வயது பாலர் முதல் 50, 60 வயதுள்ள விருத்தாப்பியர் வரை கலந்துக் கொள்கின்றனர். சில சமயங்களில் கையில் வாள் ஏந்தி மிகத் திறமையாக நடிக்கின்றனர். பெண்களும் சில பொழுது ஆண்களுடன் கை கோர்த்து ஆடுகின்றனர். ஆடவன் தனிமையாகவும் அடிக்கடி ஆடி வருவதுண்டு. பட்டாணியர்களுக்கிடையே விவாகச் சடங்குகள் மிக அதிசயமான முறையில் நடைபெறுகின்றது. கலியாணத்திற்கு முன் மணமகளைப் பார்த்து வருவதற்கு ஒரு மாதை அனுப்பப்படுகிறது. அவளின் இலட்சணங்கள் பிடித்தமாய் விட்டால் மணமகன் தனது பெற்றோர், உறவினர், மித்திரர் முதலியோருடன் மணமகள் இல்லத்திற்குச் செல்கின்றான். அங்கு மணமகனுக்குக் கொடுக்கவேண்டிய கைக்கூலி; மணமகளுக்கு அவளின் தகப்பனல் அளிக்கப்படவேண்டிய ஸ்திரீதனம் ஆகியவற்றைக் குறித்து யோசனைசெய்து முடிக்கின்றனர். சம்மந்திகளின் யோக்யதைக்கும் பொருத்தத்திற்கும் தக்கவாறு தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இதை 'தில்வர்' என்று அழைக்கின்றனர். மணப் பெண்ணின் தாய் அல்லது பாட்டி அல்லது தாதி ஒரு ஊசி துவாரத்தில் பட்டு நூல் கோர்த்து மணமகளின் தகப்பனுக்கு எப்பொழுது அனுப்புகின்றுளோ அப்பொழுது வெடி குண்டுகள் போடப்படுகின்றன; ஆடு அறுக்கப்படுகிறது; விருந்தளிக்கப்படுகிறது. இது தான் சம்மந்தத்தின் முதல் படியாகும் இவ்வைபவத்திற்கு அவர்கள் "கோகிர்" என்று கூறுகின்றனர்.

அதிசய அனுஷ்டான முறை.

அஜக்ஜயி, தாறன் என்ற இரு வகுப்பார்களிலும் விவாகச் சடங்கு நடக்குஞ் சமயத்தில் ஒரு முல்லாவும் கலந்துக் கொள்கின்றூர். அவர் மணமகனின் தந்தையின் சார்பாக வக்கலாத்துப்பெறுகிறூர். இத்தகைய சடங்கு வைபவத்திற்குப் பின்னர் சம்மந்தம் உறுதியாகி விடுகின்றது. அதற்குப்பின் எவராவது மாறு செய்வாராயின் அவர் இகழ்ச்சிக்கும் நிந்தனைக்கும் ஆளாகும்படி நேரிடுகிறது. ஒரு மாதம் கழிந்த பிறகு கைக்கூலியில் ஒரு பாகம் நிறைவேற்றப் படுகிறது. அப்பால் மணமகனின் உறவினரிலும் நண்பரிலும் ஒரு சிலர் மணமகள் இல்லத்திற்குச் செல்கின்றனர். அங்கு மணமகளின் தந்தையானவர் அவர்களுக்கு அழகிய பட்டு ருமால் ஒன்று தானஞ் செய்கின்றூர். அதன் நான்கு மருங்கிலும் பட்டினல் அழகிய பூவேலைகள் செய்திருக்கும். இவ்வைபவத்திற்கு கோஜ்தா என்கின்றனர். இச்சடங்கு நடக்குஞ் சமயத்தில் நாட்டியங்களும் பாட்டுக் கச்சேரிகளும் நடத்தப்படுகின்றன.

இத்தகைய வைபவத்திற்குப் பின் மணமகன் மாமியாரின் உதவியால் தனது புதுப் பெண்ணை சந்தித்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறுன். ஆனல் இது பகிரங்கமாய் நடப்பதில்லை எனினும் பொதுவாக மாப்பிள்ளை தனது தோழர்களோடு பெண் வீட்டுக்குச் சென்று தனது புதுப்பெண்ணிற்கு சில சன்மான மளிக்கின்றுன். அதில் சட்டை, தாவணி, ஜரித்தா முதலியவைகள் அடங்கி இருக்கும். தோழர்கள் விருந்து அருந்திய பின் திரும்பிவிடுவர். மாப்பிள்ளை மட்டும் பெண் வீட்டில் நாலைந்து நாள் வரை தங்கி விடுகின்றுர். அப்பால் பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு சில வெகுமானங்கள் அளித்து அனுப்பி விடுகின்றனர். ஆனல் மணமகன் தான் இஷ்டப்பட்ட நேரங்களில் வந்து மணப்பெண்ணுடன் கலந்துக்கொள்ளலாம். தன் தகப்பன் வீட்டிலிருந்தே மணமகள் கர்ப்பம் தரித்து விடுவாளாகில் உடன் கலியாணம் நடத்தவேண்டிய நாளை குறிப்பிடுகின்றனர். அப்பொழுது மாப்பிள்ளைக்கு ரூ. 50 முதல்

ரூ. 250 வரை ஒரு தொகை அளிக்கப்படுகிறது.

கைக்கூலியாகப் பேசப்பெற்றதொகை பூராவும் செலுத்திய பின்தான் விவாகம் நிறைவேற்றப்படுகிறது. விவாக சம்பந்தமான சுபகாரியங்கள் எல்லாம் பெண் வீட்டிலேயே நடைபெறுகின்றது. இந்த வைபவங்களை பற்றியும், பெண்ணை புருஷன் வீட்டுக் கழைக்கும் சமயத்தில் நடக்கும் விசேஷ சடங்குகளைப் பற்றியும் எழுதினல் அதிகம் விரியுமென விடுத்துளோம். ஸ்திரிதனப் பொருளைத் தவிர பெண்ணின் தகப்பனுக்கு விருந்து நடத்துவதற்கு ஏற்படும் சகல செலவையும் மணமகனின் தகப்பன் கொடுக்கவேண்டும். விதவைகள் விஷயத்தில் இவைகள்யாவும் அனுஷ்டிக்கப்படுவதில்லை. நிகாஹ்வை மட்டும் நிறைவேற்றி விடுகின்றனர்.

காதலும் விவாகரத்தும்.

விவாக ரத்து மிக நூதனமுறையில் கையாளப்படுகிறது. மனைவி கெட்டவளென்று புருஷன் உண்மையாக நம்பினல் மூன்று மண் கட்டிகளை எடுத்து அவளுக்குப்பின்னல் எறிகின்ருன். அதிலிருந்து புருஷன் தலாக்கு சொல்லிவிட்டான் என்று விளங்கிங் கொள்கிருள். சோரம் செய்யும் பெண்களுக்குதக்கப்படி தண்டனை அளிக்கின்றனர். ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கு முன் அப்படிப்பட்டவர்களைக் கொன்று மாய்த்துக் கொண்டிருந்தனர்; ஆனல் இதுபொழுது அவ்வாறில்லை. வாலிபர்களுக்கு ஒரு பெண் மீது ஆசை உண்டாகுமானல் அவர்கள் மிகுந்த காமவெறி கொண்டவர்களாகி மெய் மறந்த நிலைமையை அடைகின்றனர். தாங்கள் வைத்துள்ள காதலை பாதுகாக்கும் விஷயத்திலும் அதை அனுபவிக்கும் விஷயத்திலும் சில சமயத்தில் தங்கள் பெரியார்களையும், புத்திமதி கற்பிப்போர்களையும் துணிகரமாய்க் கொலைசெய்து விடுவதில் தளராதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

அப்கானியர் எல்லோரும் சுன்னி மத்ஹபைச் சேர்ந்தவர்களெனச் சொல்லிக்கொள்கின்றனர். ஆண் பெண் யாவரும் தொழுகை நோம்பு முதலிய மார்க்கச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முற்படுகின்றனர். பட்டாணியர்கள் தங்கள் மார்க்கம், சமூகம், ஒழுக்கம், முதலியவை சம்பந்தமான காரியங்களில் மிக கட்டுப்பாடாய் இருந்தாலும், மற்றவர்களை சீர்திருத்த முற்படுவதில்லை. ஒரு ஷியா வகுப்பினரோ அன்றி முஸ்லிம் அல்லாதாரோ, தங்கள் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றக் கண்டால் அதை கெடுதியாக நினைக்கமாட்டார்கள்.

அவர்களிடத்தில் ஒருவன் அடைக்கலம் புகுந்தால் தங்கள் உடல் பொருளாவியாலும் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இயற்கை சுபாவமுடையவராய் இருக்கின்றனர். அவர்கள் தானிய வர்க்கத்தில் குருணை, கம்பு, கோதுமை முதலியவைகளை புசிக்கின்றனர். மாமிசமும் ஏராளமாக உபயோகிக்கின்றனர். போஜனம் ருசியாய் இருப்பதற்காக தயிர் கலந்துக்கொள்கின்றனர். புளித்த மாவால் செய்த ஒருவகை ரொட்டியை மிக்க விருப்பத்தோடு புசிக்கின்றனர். பட்டாணியப் பெரியார்கள் கான், மலிக், சர்தார் என்றழைக்கப்படுகின்றனர்.

ஹஜாறியர்கள்.

இவர்களின் உருவ அமைப்பிலிருந்தே அவர்கள் மங்கோலியர்கள் என்று எளிதில் தீர்மானித்து விடலாம். ஏனெனில் இவர்களின் கண்கள் மிகச் சிறிய உருவமுடையவையாய் இருக்கின்றன. அவர்களுக்கு தாடி மிகக் குறைவாகவே உண்டாகும். நாடியில் மட்டும் நாலைந்து முடிகளிருக்கும். அவர்கள் பார்ப்பதற்கு சீனர் அல்லது தாத்தாரிகளைப் போன்று தோற்றுவர். இவர்கள் ஜெங்கிஸ்கானின் இராணுவத்தில் மீதியானவர்களின் வங்கிஷத்திலிருந்து வந்தவர்கள் என்று சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இந்த ஜாதியாரிடத்து மூர்க்கத்தனமும் துஷ்டத்தனமும் நிறைந்திருக்கின்றன. நாகரீகமில்லாத காட்டு ஜாதியாராய் இருக்கின்றனர். எனினும் தற்போது கொஞ்சங் கொஞ்சமாக சீர்திருத்தம் பெற்று வருகின்றனர். ஷெய்கு அலீ, ஜம் ஷீதி ஆகிய இவ்விரண்டு வகுப்பாரையுந் தவிர இதர வகுப்பார் எல்லோரும் ஷீஆ மத்ஹபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் மார்க்கத்தில் உறுதியான நம்பிக்கை உடையவராயும் மார்க்க வைராக்கிய முடையவராயும் காணப்படுகின்றனர். ஆனல் இன்னேர் தொழுகை நோன்பு முதலியவைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பதில்லை. இவர்களிடையே வியக்கத்தக்க ஒரு வழக்கம் இரு

ந்து வருகிறது. அதாவது மரித்துப்போன ஒருவரை அடக்கஞ்செய்த உடன் மையத்தை நோக்கி "உமது அருகில் முன்கர் நகீர் வந்தால் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் உமது சற்குருவாகிய மௌலா அலீ அவர்கள் விரைவில் உமது சமீபம் வருவார்கள்; அவர்கள் வந்ததும் முன்கர் நக்கீரை உம்மிடத்தினின்றும் விரட்டி விடுவார்கள்" என்று கூறுகின்றனர். இதுவன்றி வேறொரு நூதன வழக்கமும் காணப்படுகிறது. அதாவது மையத்தை எடுத்துச் செல்பவர்கள் மையத்தை அடக்கஞ் செய்தபின் தங்கள் தொப்பிகளைக் கிழித்து கப்ரின்மீது வைத்துவிட்டுத் திரும்புகின்றனர்.

பரிசுத்த முஹற்றம் மாதம் முதல் நாள் இவர்கள் ஹஸ்ரத் செய்யிதுனா ஹுஸைன் (ரலி.) அவர்களின் ஞாபகார்த்தமாக அழுது ஒப்பாரி செய்கின்றனர். தங்கள் முதுகிலும் நெஞ்சிலும் சங்கிலியால் இரத்தம் பிரவாகமாய் ஓடும்படி அடித்து அழுது ஓலமிடுகின்றனர்.

இரு பெண்களுக்கிடையில் வாக்கு வாதம் நிகழ்ந்துவிடுமாகில் அவ்விருவரும் பலவித தூஷண வார்த்தைகளைப் பிரயோகித்து பேசுவதில் கீர்த்தி பெற்றுள்ள வேறு பெண்களை தங்கள் பிரதி நிதியாக அமர்த்திக்கொண்டு ஏசச் செய்கின்றனர். அவ்விரு பிரதிநிதிகளும் அடாத வார்த்தைகளைச் சொல்லி திட்டிக் கொள்கின்றனர். முடிவில் யாருக்கு புதிய வார்த்தைகளை பிரயோகித்து அடக்க முடியாமல் போகிறதோ அவள் தோற்றுப் போகிறாள். ஒருநாள் பூராவும் இந்தச் சண்டை நடந்தும் ஒருவரை ஒருவர் வெல்வதற்கு இடமில்லாது போய்விடின் மறு நாளும் இச் சண்டை ஆரம்பிக்கப் படுகிறது. இச்சாதியார்களில் அநேகர் பட்டாளத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர். பெண்களும் குழந்தைகளும் (தஅவீஜ்) குளிசம் கட்டும் வழக்கமுடையவராய் காணப் படுகின்றனர்.

ஆங்கில சமூக வாழ்க்கை.

(மௌலானா குலாம் ரசூல் சாஹிப் மிஹ்ர் பி. எ. வரைவது)

இந்திய சமூக வாழ்க்கைக்கும் ஆங்கில சமூக வாழ்க்கைக்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. இங்கிலாந்தில் வாழ்க்கையை சரிவர நடத்துவதற்கு பற்பல சாதனங்களும் சௌகரியங்களும் இன்றி யமையாதனவாய் இருப்பதால் முதன்முதல் அங்கு பிரவேசிப்பவரின் வாழ்க்கை வெகு சிரமமாகவே தோன்றும். ஆங்கிலேயர்கள் தங்கள் வாழ்க்கையை மிக உன்னத முறையில் சகலவித சுகாதாரங்களுடன் எளிதாக நடத்துவதற்கு எவ்வளவு சாதனங்கள் சௌகரியங்கள் தேவையோ அவ்வளவையும் ஒன்று விடாமல் அமைப்பதில் தகுந்த முயற்சி செய்திருக்கின்றனர். ஆகவே நாகரீகத்திலும் ஆடம்பர வாழ்க்கையிலும் முதன்மையாய் விளங்குகின்ற இங்கிலாந்தில், மிக எளிய வாழ்க்கையிலிருக்கின்ற இந்தியன் நுழைவானாகில் ஆரம்பத்திலுள்ள ஒவ்வொரு நிமிஷத்திலும் மிக கஷ்டத்திற்குள்ளாவான் என்பதிற் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் வாழ்க்கைக்கு வேண்டி சாதனங்களிலும் பிரிட்டிஷ் ஜனங்களின் நடைவுடை வழக்காசாரங்களிலும் அவனுக்கு பூரண அனுபவமும் பழக்கமும் உண்டாகாதவரை அவன் கஷ்டமான நிலைமையிலேயே இருப்பான் என்பது திண்ணம். உதாரணமாக இந்தியர்களாகிய நாம் காலைமுதல் இரவுவரை "பூட்ஸ்", "சூட்" முதலிய ஆடம்பர உடைகளில் கட்டுண்டு கிடக்க இஷ்டப்படாதவர்களாக இருக்கின்றோம். ஆனால் இங்கிலாந்திலோ காலையில் எழுந்து சிற்றுண்டி அருந்தியபின் உடைகள் அணிந்து இரவு படுக்கைக்குப் போகும்வரை அவ்வுடைகளை கட்டிக்கொண்டிருத்தல் சர்வ சாதாரண வழக்கமாய் இருந்து வருகிறது.

வீட்டிற்குள் பிரவேசிக்கும் முறை

இங்கிலாந்திலுள்ள வீடுகளின் வெளிவாசல்கள் ஒவ்வொன்றும் மூடப்பட்டிருக்கும்.

வாசல் கதவின் சமீபம் பட்டன் சேர்க்கப் பட்டிருக்கும். அப்பட்டனை கையால் அழுத்தினால், உட்புறத்தில் மணியடிக்கும். அது பொழுது யாராவது வந்து கதவைத்திறப்பார். உள்ளே சென்றால் எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டிருப்பதாகக் காண்பீர்கள். நாம் சந்திக்க வேண்டிய மனிதர் இருக்கும் அறை எங்கிருக்கிறதென்று கேட்டறிந்து வாசலண்டை சென்று கதவை தட்ட வேண்டும் 'வரலாம்' என்று பதில் வந்தால் மட்டுமே உள்ளே போகவேண்டும். இல்லை எனில் வெளியிலேயே காத்திருக்கவேண்டும். அத்தியந்த நண்பராய் இருந்தபோதிலும் உள்ளே இருந்து வெளியில் சென்று 2 நிமிஷம் கழித்து திரும்பவந்தாலும் மறுபடியும் சத்தம் கொடுத்து பதில் தெரிந்து தான் உள்ளே போக முடியும்.

போஜனத் தன்மை.

ஆங்கிலேயர்கள் குறிப்பிட்ட வேளைகளிலே உணவு கொள்கின்றனர். அவர்கள் புசிக்கும் உணவுகளின் கூடுதல் குறை, நன்மை, முதலிய யாவும் அவர்களது தேக ஆரோக்கியம்,வன்மை இவைகட்கு தக்கவாறு மாறுபட்டிருக்கும். காலையில் எழுந்தவுடன் சில கனிகளும் தேனீரும் அருந்துகின்றனர். காலை 9-மணிக்கு சிற்றுண்டியும் மத்தியானத்தில் பலவகையான பதார்த்தங்களும் 4, 5-மணிக்கிடையில் தேனீரும் இரவு 7½-மணிக்கு சாப்பாடும் முறையே புசித்துவருதல் அவர்களின் வழக்கம்.

ஹோட்டலின் சாதனம்.

சில சமயம் ஆகாரம் கொள்ளவேண்டிய அவசியத்தினாலும் சில சமயம் சிநேகிதர்களைக்கண்டு பேசவேண்டியதற்காகவும் ஹோட்டலுக்குச் செல்ல நேரிடுகின்றது. இந்த ஹோட்டல்கள் அரச மாளிகைகளைவிட மிக நேர்த்தியாயும் வாழ்க்கைக்கு வேண்டிய சகல வித துணை சாதனங்களாலும் சிறந்திருக்கின்றது. ஹோட்டலுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு அறையிலும் டெலிபோன் அமைக்கப்பட் டிருக்கிறது. மேல் மெத்தைக்குச் செல்வதற்கு அவசியமான இடங்களில் "லிப்ற்றுகள்" இணைக்கப் பட்டிருக்கின்றது. ஹோட்டலுக்குள் பிரவேசித்தவுடன் பல்வேறு அலுவல்களுக்குள்ள பல காரியாலயங்கள் இருப்பதைக் காணலாம். நாம் ஒரு நண்பரை சந்திக்க விரும்பினால், நேரே அதற்குரிய காரியாலயத்திற்குச் சென்று நண்பரின் பெயரை தெரிவிக்கவேண்டும். உடனே ஒரு வேலைக்காரன் அப்பெயருக் குரித்தான நம்பரை (உதாரணமாக 34) உரத்த தொனியில் கூப்பிடுகின்றான். மறு நிமிஷம் நம்பர் 34-க்குரிய வேலைக்காரன் வந்து நம்மை ஒரு பெரிய மண்டபத்திற்குள் அழைத்துச் செல்கின்றான். அங்கு உட்கார்ந்திருக்கும் ஜனக்கூட்டத்தின் மத்தியில் "நம்பர் 34" என்று உரக்கக் கத்துகின்றான். இல்லை எனின் காமராவிற்கு டெலிபோன் மூலமாகத் தெரிவிக்கிறான். முதன்முதல் இப்படிப்பட்ட முறைகள் மிகச் சிரமமாகவே தோன்றினாலும் சிறுகச்சிறுக பழக்கம்பெற்ற பின் மிக எளிதாகிவிடும்.

மோட்டார் வசதி.

லண்டன்மாநகர் மிகப் பெரிய நகரமாய் இருப்பதுபோல போக்குவரத்து சாதனங்களும் ஏராளமாய் அமைக்கப் பெற்றனவாயிருக்கின்றது. அவைகள் வெகு நல்ல முறையில் நிர்வகிக்கப்படுகின்றன. நகரத்திற்கு வெகு தூரத்திலுள்ள இடங்கள் போக்குவரத்து சாதனங்களால் இணைக்கப்பட்டு இடைவிடாது அதற்குள்ள வேலைகளும் காரியாதிகளும் செவ்வனே நடந்துக்கொண்டிருக்கின்றது. ஒவ்வோரிடத்திலும் டேக்ஸிகள் அளவுக்கு மிஞ்சி காணப்படுகின்றன. அதற்கு வேண்டிய பல சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பஸ் ஸர்விசும் பெரும்பான்மையாய் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. ஓரிடத்திலிருந்து பற்பல இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் வெவ்வேறு நம்பர் உடையதாயிருப்பதால் நாம் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல விரும்பின் முதலில் பஸ்ஸின் நம்பரைத் தெரிந்துக் கொள்ளவேண்டும். இதற்காக பஸ்ஸின் நம்பர்களும் அவை போகும் இடங்களும் குறிப்பிட்டுள்ள புத்தகங்கள் எங்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது. அதில் லண்டன் நகரத்தின் சித்திரமும் வரையப்பட்டிருக்கும்.

பூமியின்கீழ் ரயில் பாதை.

லண்டன்மாநகர விசேஷங்களுள் அந்நகரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ரயில்

பாதையும் ஒன்ருகும். லண்டன் நகரத்தில் பூமியின்கீழ் நாலா பக்கங்களிலும் ரயில் ஓடுகின்றது. இத்தகைய பாதாள ரயில்வே அமைப்பானது எவருடைய உள்ளத்தையும் எளிதில் கவர்ந்துவிடக்கூடியதா யிருக்கிறது. ஒரு ரயிலைப்பற்றியும் அது புறப்படும் நேரத்தைப் பற்றியும் யாரிடத்திலும் கேட்டறிய வேண்டிய அவசிய மில்லை. ரயில்வே விஷயமாய், அவசியமான எல்லா இடங்களிலும் பல ஸ்டேஷன்களின் பெயர், அவைகளுக்குப் போகும் ரயில் வண்டிகளின் பிளாட்பாரம், அவைகளின் நம்பர், நேரம் முதலிய சகல விபரங்களும் குறிப்பிட்டுள்ள விளம்பரங்கள் வைக்கப்பட்டிருக்கும். ரயில்வே லயின்கள் பற்பல கம்பனிக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கம்பனியும் தனக்குரிய பிரத்தியேக லயினையே நிர்வகித்து வருகிறது. ஆனல் எல்லா கம்பனிக்காரர்களும் தங்களுக்குள் ஒற்றுமையாகவும் ஒப்பந்தமாகவும் வேலை செய்து வருகின்றனர். சில இடங்களில் பூமியின்மேலும் சில இடங்களில் பூமியின் கீழும் பிறிதோறிடத்தில் பள்ளத்திலும் இன்னேரிடத்தில் மேடுகளிலும் ரயில் ஓடுவதைக் காணலாம். பூமியினடியில் போகும் ரயில்வேயின் பிளாட்பாரத்திற்குச் செல்வதற்கும் அங்கிருந்து உயரே வருவதற்கும் ஸ்டேஷன்களில் "லிப்ற்று"கள் வைக்கப்பட்டிருக்கும். அல்லது நகரும் ஏணிகள் மாட்டப்பட்டிருக்கும். ஜனங்களுக்கு இத்தகைய அமைப்பினல் முதலில் கஷ்டங்கள் நேரிடினும் பழக்கமாய் விட்டால் எவ்வித கஷ்டமும் தோன்ருது.

டிக்கட்டு மெஷினும் லிப்ற்றும்.

ஒவ்வோர் ஸ்டேஷனிலும் டிக்கட்டு கொடுக்கப்படும்மெஷின்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பென்ஸ் மெஷன், இரண்டு பென்ஸ் மெஷன், மூன்று பென்ஸ் மெஷன் இப்படியாக பலவாருன எந்திரங்கள் காணப்படும். அந்தந்த எந்திரத்திற்கு சமீபம் ஸ்டேஷன்களின் பெயரும் ரயில் கட்டணத்தின் விவரமும் அறிவிக்கப்பட்டிருக்கும். ஆகவே ஒரு ஸ்டேஷனுக்கு செல்ல எத்தனை பென்ஸ்கள் ரயில்சார்ஜ் விதிக்கப்பட்டிருக்கிறதோ அத்தனை பென்ஸையும் அந்த மெஷினில் காணப்படும் பிரத்தியேக துவாரத்தில் போடவேண்டும். ஒரு விணுடிக்குள் டிக்கட்டு தானுகவே வந்துவிடும். இவை தவிர டிக்கட்டு விற்கப்படும் ஆபீசுகளும் இருக்கின்றன. அங்கு மனிதர்களே டிக்கட்டு கொடுப்பார்கள். பவுன்களுக்கும் ஷில்லிங்குகளுக்கும் டிக்கட்டுகள் கொடுக்கின்ற காரியாலயங்கள் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிக்கல் நாணயங்களில்லாவிடின் டிக்கட்டுகள் ஒரு பொழுதும் வெளியில் வராது. பிரயாணிகளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் ஸ்டேஷன்களில் செய்யப்பட்டிருக்கின்றன. பூமியின் கீழுள்ள ரயில்வேயில் யாத்திரை போகவேண்டுமானல் "லிப்ற்றுகள்" வைக்கப்பட்டிருக்கும் அறைக்குச் செல்லவேண்டும் அந்த அறையில் டிக்கட்டுகள் விற்கப்படும். ஒரு பக்கம் டிக்கட் பெற்றுக்கொண்டு மறுபக்கம் லிப்ற்றிலிருந்து கீழே இறங்கவேண்டும்.

முதல் வகுப்பும் மூன்ரும் வகுப்பும்

மின்சார சக்தியின் மூலமே பூமியின் கீழ் ரயில் ஓடுகின்றது. புகைவண்டி வருவதற்கு இரண்டு நிமிஷத்திற்குமுன் வாயற்படி தானுகவே திறந்து கொள்கிறது. வண்டி சென்றபின் தானுகவே மூடிக்கொள்கிறது. இதில் முதல் வகுப்பில் பிரயாணிகள் குறைவாகவும், 3-வது வகுப்பில் ஆள்கள் கூடுதலாகவும் இருப்பதைத் தவிர வேறு வித்தியாசமொன்றுமில்லை. ஒவ்வோர் ஸ்டேஷன்களிலும் ஒரு பிளாட் பாரத்திலிருந்து மற்ற பிளாட் பாரம் வரையுள்ள மதில்கள் முழுதும் நோட்டீசும், அறிக்கைகளும் ஒட்டப்பட்டிருக்கும். இங்கு விளம்பரங்களைப் பரவச் செய்வதற்கு மிகுந்த அக்கரை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவைகளை வெளியிடும் விஷயத்தில் அநேக நூதன முறைகள் கையாளப்படுகின்றன. அவைகளைக் குறித்து விபரவாக எழுதுவது முடியாத காரியம். ஒவ்வோரிடத்திற்கும் 10 நிமிஷத்திற்கு ஒரு தரம் வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றது.

கண்காட்சிசாலை

லண்டனிலுள்ள மியூஸியமானது உலகத்திலேயே மிகப்பெரிய கண்காட்சி சாலையும் புத்தக சாலையும் உடையதாய் காணப்படுகிறது. இது யாவருடைய மனத்தையும் கவர்ந்து கொள்ளும்படியான அத்தனை

உயரிய முறையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. அதன் அழகையும் சிறப்பையும் எவ்வளவு தூரம் வர்ணித்த போதிலும் அவை அதில் நூற்றில் ஒரு பங்குகூட யிராதென்றே நினைக்கவேண்டி இருக்கின்றது. நான் எத்தனையோ பெரும் பெரும் புத்தக சாலைகளைப் பார்த்திருக்கின்றேன்; ஆனால் அவைகளை பிரிட்டிஷ் மியூஸியத்திற் கெதிரில் வைத்து தாரதம்மியப் படுத்திப் பார்ப்போமானால் பஞ்சாபிலுள்ள பெரிய பொதுஜன புத்தக சாலையை "புத்தக சாலை" என்று சொல்வதற்கில்லாமல் ஒரு மாணாக்கனுக்கு வேண்டிய அத்தியாவசியமான "புஸ்தகக்கட்டுகள்" அமையப் பெற்றுள்ளதென மட்டும் மதிப்பிட வேண்டிவரும். புஸ்தகங்களைத் தவிர மசோதாக்களும் கை எழுத்துப் பிரதிகளும் மிகுதமாக காணப்படுகின்றன. அவைகளை எவராலும் கணக்கிட முடியாது.

40 லக்ஷ புத்தகங்கள்.

புத்தக சாலையிலுள்ள நூல்களின் அட்டவணை குறிக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் பாகங்களாக இருக்கின்றன. பல வால்யங்கள் கொண்ட 40- லக்ஷ நூல்கள் இருக்கும் என்று மதிப்பிடலாம். கீழ்நாட்டினரால் கோர்வை செய்யப்பட்ட கிரந்தங்களும் மேனாட்டு கிரந்தங்களும் வெவ்வேறாக வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வியின் எந்த பிரிவாயினுஞ் சரி எந்த பாஷையாகினுஞ்சரி இப்புத்தக சாலைக்குள் கிடையாமல்போகாது. மிகப்புராதன காலமுதல் தற்காலம் வரை தோன்றியுள்ள கல்வியின் வெவ்வேறு பிரிவுகள் சம்பந்தமான வசன காவியங்கள், செய்யுள்கள் முதலிய எல்லாம் அங்கு காணப்படுகின்றன. அப்புத்தக சாலையின் ஓர் பாகம் பத்திரிகைகளுக்கென்றே பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கிறது. பத்திரிகைகள் எல்லாம் அநேக பாகங்களாக பைண்டு செய்து வைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளுள் என்ன என்ன பத்திரிகைகளிருக்கின்றது, அவைகள் எந்த காலத்திலுள்ளவை என்பதைத்தெரிந்துக் கொள்வதற்கு ஒரு மாதம் செல்லுமென மதிப்பிட ப்படுகின்றது.

கை எழுத்துப் பிரதிகளும் சீர்படுத்தப்படாத புத்தகங்களும் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் அலமாரிகள் இருக்கின்ற அறைகளில் நுழைந்து பார்த்து முடிவதற்கு பல மாத காலம் வேண்டியதிருக்கும். மஸீஸ் அலைஹிஸ்ஸலாம் பிறப்பதற்கு முன்னூறு வருஷங்களுக்குமுன் மசோதாக்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன; அவைகளில் அரஸ்தூவின் கையால் எழுதப்பட்ட கிரந்தமும் காணப்படுகிறது. மிகப்புராதன கை எழுத்துப் பிரதிகளும் நகல்களும் ஏராளமாய் உண்டு. பைபிள் சம்பந்தமான மசோதாக்கள் வைப்பதற்கு பிரத்தியேகமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பெரிய நூலாசிரியர்களால் எழுதப்பட்டுள்ள கை எழுத்துப் பிரதிகள் யாவற்றையும் தனியிடத்தில் சேகரமாய் வைக்கப்பட் டிருக்கின்றது. மசோதாக்கள் மட்டும் 35 ஆயிரத்திற்கு குறையாமலிருக்கும். இதன்றியும் 36-ஆயிரம் உடன்படிக்கை பத்திரங்களும் காணப்படுகின்றன. பிரக்யாதி பெற்றுள்ள மன்னர்கள் தலைவர்கள் ஆழ்ந்த யோசனையுடையோர் முதலியவர்களால் தயாரிக்கப்பெற்ற மிகுதமான பிரதிகளும் அதில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

வாசிப்பு சாலை.

வாசிப்பு சாலைக்குள் செல்வதற்கு தனி உத்திரவு பெறவேண்டும். அதனுள் நுழைந்த உடன் அநேக அறைகளிலுள்ள அலமாரிகளில் பல நூல்களின் அட்டவணை குறிக்கப்பட்டுள்ள பிரசுரங்கள் பற்பல பைண்டுகளுடன் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள், கல்வியின் வெவ்வேறு பிரிவுக்குரிய நூல்களின் அட்டவணைப் புத்தகங்கள் வரிசைக்கிரமமாக வெவ்வேறு அலமாரிகளில் வைக்கப்பட்டிருக்கும். நமக்கு வேண்டிய புஸ்தகம்—நாவலோ, அன்றி விஞ்ஞானமோ அன்றி புராணமோ, எதுவாயினும் முதலில் புத்தக சாலை வேலைக்காரனிடத்தில் தெரிவிக்க வேண்டும்; அவன் உடனே அப்பிரிவுக்குரிய நூல்களுக்கு அட்டவணை போடப்பட்டுள்ள பிரசுரங்கள் வைக்கப்பட்டிருக்கும் அலமாரியைக் காண்பிப்பான்; அதற்குள் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அவைகளை ஒவ்வொன்றாகப் புரட்டிப்பார்த்து நமக்குத் தேவையுள்ள நூலின் நம்பரைக் கண்டு பிடிக்கவேண்டும். இங்ஙனம் பார்த்துக் கண்டு பிடிப்பதற்குள் நாலைந்து நாட்கள் சென்றாலும் சென்றுவிடும். இவ்வண்ணமே

மேனாட்டு நூல்களின் அட்டவணை புத்தகங்கள் கீழ் நாட்டு நூல்களுக்குரிய அட்டவணை புஸ்தகங்கள் பத்திரிகைகளின் அட்டவணை பிரசுரங்கள் முதலிய யாவும் வெவ்வேறாக பற்பல அலமாரிகளில் வரிசைக் கிரமமாக வைக்கப் பட்டிருக்கும். இவற்றிலிருந்து நமக்கு வேண்டிய நூலின் நம்பரை தெரிவித்தால் 10 நிமிஷத்தில் நம் முன்னால் அப் புத்தகம் வந்துவிடும்.

சுகந்துங்களால் கெடாதுவைக்கப்பட்டிருக்கும் சரீரங்கள்.

லண்டன் நகர காட்சி சாலை மிகப் பிரமாண்ட கட்டடமாக இருக்கின்றது. அதற்குள் எண்ணி முடியாத பல அறைகள் காணப்படுகின்றன. அவைகளுள் சித்திர வேலைப்பாடுகளும், கல்லின் மேல் கொத்து வேலைகள் நிறைந்த பல அபூர்வமான வேலைப்பாடுள்ளவைகளும் உலகத்தின் பற்பல பாகத்திலுமுள்ள நவீனக் கருவிகளும் நூதன பொருள்களும் மிகுதமாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது. அவைகளை விவரமாக எழுதுவது இலகுவில் முடியக் கூடிய காரியமன்று. ஆனால் ஒன்று மட்டும் விசேஷமாக சொல்லியே தீர வேண்டிய அதிசயமுடையதாய் இருக்கிறது. அதாவது ஓரறையில் மிகப்புராதன எகிப்து நாட்டிலுள்ள 13 சரீரங்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கண்காட்சி சாலைக்குள் அமைந்திருக்கும் ஐரோப்பிய வாசிப்பு சாலையில் ஒவ்வொரு சமயமும் ஜனங்கள் வந்து படித்துக் கொண்டிருக்கின்றனர்; அவர்களுக்கென்று மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருக்கும் மையும் பேனாவும் அளிக்கப்படுகிறது. நூல்களை எடுத்து வாசித்தறிபவர்களில் பெண்களும் ஏராளமாக பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஆனால் கீழ் நாட்டு கிரந்தங்களை வாசிப்பவர் வெகு சிலரே காணப்படுகின்றனர்.

நாயகம் (ஸல்) சந்ததிகள்

எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கட்கு எத்தனை சந்ததிகள் இருந்தனவென்பதைப்பற்றி பலவாறான அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. ஏகோபித்த அபிப்பிராயப்படி காஸிம், இப்றாஹீம் என்னும் இரு ஆண்களும், ஜைனப், றுகய்யா, உம்முகுல்தூம், பாத்திமா என்னும் நான்கு பெண்களும் இருந்தனரெனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இப்னு இஸ்ஹாக் அவர்கள் இன்னும் தாஹிர், தய்யிப் என்னும் இரு ஆண்களைக் குறிப்பிட்டு நான்கு ஆண்களும் நான்கு பெண்களுமிருந்தனரெனக் கூறி இருக்கின்றார். அவைகளில் இப்றாஹீம் என்னும் பிள்ளை மாரிய கிப்தியாவுக்கும் பாக்கிப் பிள்ளைகள் கதீஜா (ரலி) அவர்கட்கும் பிறந்ததாகும்.

ஹஸ்ரத் காஸிம் (ரலி)

நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததிகளில் ஹஸ்ரத் காஸிம்தான் முதல் பிறந்தவராகும். (அதாவது நபிப்பட்டம் வருவதற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்) இவர் பிறந்து ஏழு நாள் ஜீவித்திருந்து மரணமடைந்து விட்டாரென்றும், இரண்டு வருஷம்வரை ஜீவித்திருந்தாரென்றும் கூறப்பட்டிருக்கிறது. நாயகம் (ஸல்) அவர்களது சந்ததிகளில் முதன்முதல் பிறந்ததைப்போல் சந்ததிகள் யாவரைவிட முதன் முதல் மரணமுமடைந்தவர் இவரே யாவர். நாயகம் (ஸல்) அவர்களை "அபுல் காஸிம்" என்னும் காரணப் பெயரோடு அழைத்ததற்கும் இவரே காரணமாகும். இவ்வாறு தங்களை அழைக்கப்படுவதை நாயகம் (ஸல்) அவர்கள் மிக மிக விரும்புவார்கள். சஹாபாக்களும் நாயகம் (ஸல்) அவர்களை அன்போடு அழைக்க நாடுவார்களாயின் அபுல்காஸிம் என்றே அழைப்பர். ஒரு நாள் நாயகம் (ஸல்) அவர்கள் கடைவீதி வழியே சென்று கொண்டிருக்குங்கால் பின்னாலிருந்து யாரோ ஒருவர் அபுல்காஸிம் என சத்தம் கொடுத்தார். நாயகம் (ஸல்) அவர்கள் திகைத்து திரும்பிப்பார்த்தார்கள். அது பொழுது, 'யாரசூலல்லாஹ்! நான் இதே பெயருடைய வேறொருவரை அழைத்தேன்" எனக் கூறினர். இது கேட்டு இனியாரும் அபுல்காஸிம் என்னும் காரணப் பெயருடன்

அழைத்துக்கொள்ளக் கூடாதெனப் புகன்றார்கள்.

ஹஸ்ரத் ஜைனப் (ரலி)

பெண் பிள்ளைகளில் இவர் தான் முந்தியவராகும். ஹஸ்ரத் காஸிமுக்குப்பின் இம்மாது பிறந்தனரெனக் கூறப்பட்டிருக்கிறது. நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததிகளில் ஹஸ்ரத் ஜைனப்தான் முந்தியவரென்பதாகவும் சிலர் கூறுகின்றனர். நாயகம் (ஸல்) அவர்கள் மக்கமா நகரினின்று ஹிஜ்ரத்தாகி மதீனா செல்லுங்கால் தங்கள் குடும்பத்தினர் யாவரையும் மக்கமா நகரிலேயே விட்டுச்சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஜைனப் (ரலி.) அவர்களை அபுல்ஆஸ் பின் ரபீஅ லகீத் அவர்களுக்கு விவாகஞ் செய்து கொடுத்திருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் அவர் அகப்பட்டுக் கொண்டதால், ஜைனப் (ரலி.) அவர்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்துவிடவேண்டுமென்னும் நிபந்தனையின்மீது அவர் விடுதலை செய்யப்பட்டார். அத்தன்மைபோல் அவர் மக்கமா நகர் சென்றவுடன் தன் சகோதரரான கனானாவுடன் மதீனாவுக்கு அனுப்பிவைத்தார். எதிரிகளாகிய குப்பார்களின் பயம் ஏற்பட்டிருந்ததால் அவர் ஆயுதங்களுடன் புறப்பட்டு 'தீதவா, என்னுமிடம்வரை வந்து சேர்ந்தார். இதற்கிடையில் குப்பார்களிற் சிலர் பின்றொடர்ந்து வந்தார்கள். அதில் ஹுபார்பின் அஸ்வத் என்பவன் ஜைனப் (ரலி.) அவர்களை ஈட்டியால் குத்தி பூமியில் தள்ளிவிட்டான். அவர்கள் கெர்ப்பவதியாக இருந்ததால் கெர்ப்பம் கீழே விழுந்துவிட்டது. அது பொழுது கனானா என்பவர் உறையை விட்டு அம்பை வெளியில் எடுத்துக்கொண்டு "இது பொழுது யாராகிலும் சமீபம் வருவாராகின் இந்த அம்பினால் குத்தப்பட்டுப் போய் விடுவார்." எனக் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டு ஆங்கிருந்தோர் யாவரும் விலகி விட்டனர். அபூஸுப்யான் குறைஷ் தலைவர்களுடன் ஆங்கு வந்து "நாம் சில விஷயங்கள் பேசிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அம்பை உபயோகிக்க வேண்டாம்." எனக் கூறியவுடன் கனானா என்பவர் அம்பை பெட்டியில் வைத்துவிட்டார். அக்காலை அபூஸுப்யான் கூறியதாவது. "முஹம்மதால் (ஸல்.) எவ்வளவு கஷ்டம் விளைந்ததென்பது உங்களுக்குத் தெரிந்தவையே. இந்நிலைமையில் அவருடைய புத்திரியை பகிரங்கமாக எங்களை விட்டுக் கடத்திச் செல்வதாயின் நாங்கள் சக்தியற்றவர்களாய் இருக்கிறோமென்று ஜனங்கள் நினைத்துவிடுவர்; ஜைனபைத் தடுத்து விடுவது கொண்டு எங்களுக்கு யாதொரு பிரயோசனமுமில்லை. ஆனால் கூக்குரல் சற்று அடங்கியபின் யாருக்கும் தெரியாது கொண்டுபோய் விடுங்கள். என்பதே. இந்த யோசனையை கனானா அங்கீகரித்துக் கொண்டு சில நாளைக்குப்பின் இரவில் அவர்களை அழைத்துச் சென்றார். நாயகம் (ஸல்.) அவர்கள் ஜைத்பின் ஹாரிதை எதிரில் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் இரவில் ஓரிடத்தில் தங்கி இருந்தார்கள். கனானா, ஜைனப் (ரலி.) அவர்களை ஜைதினிடம் ஒப்புவித்துத் திருப்பினார். அன்னோர் அம்மாதை அழைத்துச் சென்றார்.

ஜைனப் (ரலி.) அவர்கள் மதீனா வரும்பொழுது அவரின் புருஷர் அபுல் ஆஸ் என்பார் குப்ரிலிருந்தார். அவர் மறுமுறையும் ஓர் யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்ததில் பிடிபட்டுப் போய்விட்டார். அது பொழுது அவருக்கு கார்மான மளிக்கப்பட்டது. அவர் மக்கா சென்று தன்னிடமுள்ள அமானத் பொருட்களை எல்லாம் அதற்குடையவர்களிடம் கொடுத்துவிட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டு மதீனமா நகர் வந்து சேர்ந்தார். ஹஸ்ரத் ஜைனப் (ரலி.) அவரை விட்டுப் பிரிந்து வருங்கால் அவர் முஷ்ரிகாக இருந்ததால் இவ்விருவர்களுக் கிடையே விவாகரத்து ஏற்பட்டிருந்தது. அவர் மதீனாவந்து சேர்ந்தவுடன் மறுமுறையும் இருவருக் கிடையே விவாகம் ஏற்பட்டது. அபுல் ஆஸ் அவர்கள் ஜைனப் (ரலி.) அவர்களை அழகிய முறையில் நடத்திச் செல்வதைப் பார்த்து நாயகம் (ஸல்) அவரை மிக மிக புகழ்ந்து பேசினார்கள். அதற்குப் பின் ஜைனப் (ரலி) சிலகால மிருந்து மரணமாய் விட்டார். அவருக்கு அலீ என்னும் ஓர் ஆண் குழந்தையும் அமாமா என்னும் ஒரு பெண்ணுமிருந்தது. அதில் அலீ சிறு பிராயத்திலேயே மரணமாய்விட்டார். அமாமா என்னும் சிறுமியின்மீது நாயகம் (ஸல்.) மிக அன்பு கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்கள் மரணமடைந்தபின் அலீ (ரலி.) அவர்கட்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டது. அவர்களது மரணத்திற்குப் பின் முகைரா

விவாகஞ் செய்துக்கொண்டார். அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு எஹ்யா எனப் பெயரிடப்பட்டது. அதற்குப் பின் அம்மாது காலகதி அடைந்துவிட்டார்.

ஹஸ்ரத் ருகைய்யா (ரலி)

இவர் நாயகம் (ஸல்.)அவர்களின் கடைசிப் புத்திரியாகும். அபூலஹபின் புத்திரர் உத்பா என்பவருக்கு விவாகஞ்செய்து கொடுக்கப் பட்டிருந்தது. நாயகம் (ஸல்.) அவர்களின் மற்ெெறாரு புதல்வியான உம்முகுல்தூரம் (ரலி) அவர்களை அபூலஹபின் மற்றொரு குமாரரான உதைபாவுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. நாயகம் (ஸல்.) அவர்கட்கு நபிப் பட்டம் கிடைத்து அவர்கள் இஸ்லாத்தின் பக்கல் மானிடர்களை அழைக்க முற்பட்டவுடன் அபூலஹப் என்பான் தன் இரு புத்திரர்களையும் அழைத்து "நீங்களிருவரும் முஹம்மதுடைய (ஸல்.) புத்திரிகளை விட்டுப் பிரிந்து விடவில்லையாயின் உங்களோடு நான் கூடி இருப்பது ஹறுமாகும்" எனக் கூறினர். தந்தையின் கட்டளைப்பிரகாரம் அவ்விருவரும் நடக்க முற்பட்டார்கள். அதற்குப் பின் ருகிய்யா (ரலி.)வை ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கட்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ருகைய்யாவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு அப்துல்லாஹ் என்னும் நாமம் சூட்டப்பெற்றிருந்தது. அம்மாது ஹபஷா தேசத்திலிருந்து மதினவுக்கு வந்து வியாதியால் பீடிக்கப்பட்டு பத்ர் யுத்தம் நடைபெறுங் காலத்தில் முஸ்லிம்களுக்கு ஜெயம் கிடைத்துவிட்டதென ஜைத்பின் ஹாரிது என்பவர் மதீனமா நகருக்குச் சமாசாரம் கொண்டு வந்த அன்று காலகதி அடைந்தார். பத்ர் போரின் காரணமாக நாயகம் (ஸல்) அவர்கள் அம்மாதின் ஜனஸாவிற் கலந்து கொள்ளமுடியாது போயிற்று.

ஹஸ்ரத் உம்முகுல்தூம் (ரலி.)

இம்மாதை ஹஸ்ரத் ருகைய்யாவின் மரணத்திற்கு பின் ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கட்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டது. ஆறுவருடம் அவர்களுடனிருந்து மரணமடைந்தார்கள்.

ஹஸ்ரத் பாத்திமா (ரலி.)

இம்மாது சிரோமணி எப்பொழுது ஜனனமானர்கள் என்பதில் பலவாறுன அபிப்பிராயங்கள் ஏற்பட்டருக்கிறது. நபிப்பட்டம் கிடைத்த முதலாவது ஆண்டில் பிறந்தார்கள் என்றும், நபிப்பட்டம் கிடைப்பதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன் கஃபதுல்லாஹ் ஷரீப் பழுது பார்க்கப்பட்டு வருங்காலை ஜனனமானர்களென்றும் கூறப்படுகிறது. இதன்படி அவர்களது பதினைந்தாவது வயதில் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டது. அதுபொழுது அலீ (ரலி.) அவர்கட்கு 21. வயதாயிருந்தது. ஆரம்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் விவாகஞ் செய்துக்கொள்ள அனுமதி கோரினர்கள். பின்னர் உமர் (ரலி.) அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனல் நாயகம் (ஸல்.) யாதொரு பதிலுஞ் சொல்லாதிருந்தார்கள். அலீ (ரலி.) அவர்கள் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கவே "உங்களிடம் மஹர் கொடுப்பதற்காக ஏதாகிலும் இருக்கிறதா" என நாயகம் (ஸல்.) அவர்கள் வினவியமைக்கு, ஒரு குதிரையும் இருஉறுக்குச் சட்டையுமிருப்பதாக விடை பகர்ந்தார்கள். இது கேட்டு குதிரை, யுத்தம் புரிவதற்கு அவசியமாகும், உறுக்குச் சட்டையை விற்பனை செய்து விடுங்களென நாயகம் (ஸல்.) அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் 480. திர்ஹம் கொடுத்து அதை வாங்கினர்கள். அந்தத் தொகையை நாயகம் (ஸல்.) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தவுடன் ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்களை கடைவீதிக்கனுப்பி வாசனைத் திரவியம் வாங்கி வரும்படிச் செய்து விவாக வைபவம் நடைபெற்று முடிந்தது. நாயகம் (ஸல்.) ஸ்திரீதனமாக ஒரு கட்டிலும் ஒரு விரிப்பும் கொடுத்தார்கள். அத்துடன் ஒரு துப்பட்டியும் இரண்டு திருவையும் ஒரு குடமும் கொடுத்தார்களெனவும் கூறப்படுகிறது. அதற்குப் பின் ஓர் விடுதி தயார் செய்யும்படி அலீ (ரலி.) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். ஹாரித்பின் நுஃமான் (ரலி.) அவர்களுடைய வீடு கிடைக்கவே, ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களுடன் அதில் வாசஞ் செய்தார்கள். இவ்விருவர்களுக்கிடையே அதிக பிரீதி ஏற்படுவதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் முயற்சித்துக் கொண்டே இருப்பார்கள். ஏதாகிலும் ஒருக்கால் அவ்விருவர்களுக் கிடையில் பிணக்கு

ஏற்பட்டுவிடின் நாயகம் (ஸல்.) அவர்கள் அதைத் தீர்த்துவைத்து விடுவார்கள். ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கட்கு ஹஸன், ஹுஸைன், முஹ்ஸின் என்னும் மூன்று ஆண் குழந்தைகளும் உம்முகுல்தூம், ஜைனப் என்னும் இருபெண்களும் இருந்தனர். இதில் முஹ்ஸின், உம்முகுல்தூம் இருவரும் சிறு பிராயத்திலேயே காலஞ் சென்று விட்டனர். அதற்குப்பின் நாயகம் (ஸல்.) அவர்கள் மரணமடைந்து ஆறுமாதமானபின் தங்கள் 29-வது பிராயத்தில் பாத்திமா (ரலி.) அவர்கள் காலகதியடைந்தார்கள்.

ஹஸ்ரத் இப்ருஹீம் (ரலி.)

இவர் நாயகம் (ஸல்.) அவர்களது கடைசிப் புத்திரராகும். இவர் மாரிய கிப்திய்யா வாசஞ்செய்த 'ஆலிய்யா' என்னுமிடத்திற் பிறந்தார். அவர் ஜனனமான சுபசெய்தி கேட்டு நாயகம் (ஸல்.) அவர்கள் ஓர் அடிமையை உரிமை விட்டார்கள். ஏழாவது நாள் அகீகா கொடுத்து சிகை வாங்கி உரோமத்தின் எடையுள்ள வெள்ளியை தர்மமாகக் கொடுத்து இப்ருஹீம் என்னும் நாமஞ் சூட்டினார்கள். அவர்கட்குப் பால் கொடுப்பதற்கு அன்ஸாரிலுள்ள மாதுக்கள் யாவரும் விரும்பினர். ஆனால் "உம்முபுர்தா" என்னும் மாதிடம் ஒப்புவிக்கப்பட்டது. அதற்காக சில பேரீத்த மரங்களையும் கொடுத்தார்கள். அம்மாதின் வாசஸ்தலம் மதீனாவின் ஓர் பக்கத்திலிருந்ததால் நாயகம் (ஸல்) அவர்கள் புத்திரர்மீதுள்ள வாஞ்சையால் ஆங்கு சென்று இப்ருஹீம் அவர்களை மடியின்மீது எடுத்துவைத்து முத்தமிடுவார்கள். ஹஸ்ரத் இப்ருஹீம் அவர்கள் உம்முபுர்தாவினிடமே காலகதி யடைந்தார்கள். ரொம்ப நெருக்கமாய் இருக்கும் செய்தி நாயகம் (ஸல்) அவர்கட்குத் தெரிந்து, ஹஸ்ரத் அப்துற்றஹ்மான் பின் அவ்ப் (ரலி.) அவர்களுடன் ஆங்கு சென்று பார்த்த போது உயிர் துறக்கும் தருவாயிலிருப்பதைப் பார்த்து மடியிற்தூக்கி வைத்துக் கொள்ளும்பொழுது கண்ணீர் வடிவதைப் பார்த்து யாரசூலல்லாஹ்! இவை யாதாகுமென வினவியதற்கு இஃது கிருபையினாலேற்பட்டதாகுமெனக் கூறினார்கள்.

ஓர் பெரியாரின் மரணமேற்பட்டு விடுமாயின் அதுபொழுது கிரஹணம் ஏற்படுமென பண்டைக்கால அராபியர் கூறிக்கொண்டிருந்தனர். அதற்கேற்ப ஹஸ்ரத் இப்ருஹீம் மரணமடைந்த அன்று சூரிய கிரஹணம் ஏற்பட்டது. அவர்களது மரணத்தின் காரணமாகத்தான் இஃது ஏற்பட்டதென்னும் வதந்தி பலமாகப் பரவலாயிற்று. இச்செய்தி நாயகம் (ஸல்) அவர்களுக்குத்தெரிந்துவிடவே, "சூரிய சந்திர கிரஹணங்கள் ஆண்டவனால் ஏற்படக்கூடிய இரு சம்பவங்களாகும், யாருடைய மரணத்திற்காகவும் அவை ஏற்படுவதில்லை" எனக் கூறினார்கள். இவர்கள் எவ்வளவு காலம் ஜீவித்திருந்தார்களென்பதில் பலவாறான அபிப்பிராயப் பேதமிருக்கிறது. 17, அல்லது 18 மாதம் ஜீவித்திருந்தாரென ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சொல்லிலிருந்து தெரிய வருகின்றது.

சுகாதாரம்—புகைக்குடி

அனுபவன் வரைவது.

II

எவ்வகையிற் பார்த்தாலும் புகைக்குடித்தல் பொல்லாப்பே யென்பது மிகையன்று. "கண்புகையும், நெஞ்செறியும், கைகாலயர்ந்துவிடும், வஜ்ரமென்ற மேனி வெளுத்துவிடும். வெண்புகையால் ஈரல் கருகிவிடும் இந்திரியம் நஷ்டமாம் பாரப் புகையிலையின்பண்பு" எனவும் முன்னவர் முதுமொழியுண்டு, முற்றும் துரந்தமுடிவரெனப்படுவாரும் இந்திரிய நிக்கிரகம் செய்வதற்கு இதனை (புகைக்குடியை) யுபயோகிப்பதாய் தெரியினும், அன்னவர்களும் இதனால் விளையும் பொல்லாப்பால் மிகவும் பாடுபடுகின்றனர்.

ஹிருதயவியாதியால் பீடிக்கப்பட்டவர்களும், சதா பயங்காளிகளாயிருப்பவர்களும்,

முட்டுக்கால்களிலும் முழங்கைகளிலும் சூலை வாய்வுபோன்ற பிடிப்புள்ளவர்களும் இப் புகைக் குடியுள்ளவர்களிலே தான் அதிக மென மேனுட்டு டாக்டர்கள் கூறுகின்றனர். இந்திய வைத்தியர்களும் அவிழ்தப் பிரயோ கத்திற்கு முன்னதாக இதனைப் பத்தியத்தில் சேர்த்துவிடுகிறுர்கள். அமெரிக்கரும், துருக் கியரும், மதுபானவகைகளை வர்ஜனம்செய்து விட்டதுபோல இத்தீய புகையையும் வர்ஜ னம்செய்து விட்டால் நாட்டிற்கு நலமும் குடி களுக்கு கோடி கோடிப் பணமும் மிச்சமாவ தோடு நாட்டை பிடித்து நிற்கும் பீடையும் தொலைந்துவிடும். நண்பர்காள்!.

பள்ளிக்குச்செல்லும் புகைப் பழக்கமுள்ள குழந்தைகள் தாமும் நெஞ்சுகூடு வத்திப் போய் ஞியாபக சக்தியற்றவராய் பரீட்சைக ளில் நல்ல மார்க்குகள் வாங்காமல் தந்தை மாரினது அங்கலாய்ப்புக்குக் காரணமாய் விடுவதோடல்லாமல் இடைக்காலங்களிலே அகாலமரணத்தினுக்கும் ஆளாகி விடுகின் றனர் என்பதைநினைக்க மனம்பதருகின்றது. இஃதன்றி முஸ்லிம் நண்பர்களிற் சிலர் தொழுகைவேளைக்குச்சற்று முன்னரே இப் பாழும் புகையை மனங்கொண்ட மட்டும் இழுத்திழுத்து வெளி விட்டுவிட்டு (ஒது) அர்த்தஸ்னனம்செய்துகொண்டு பள்ளிக்குள் நுளைந்து கூட்டத்தொழுகை (ஜமாஅத்)நடத் தும்போழ்து பக்கத்திலேதோளோடுதோளு ராய்ந்து ஆண்டவனது பக்தியில் நின்றிருக் கும் (இப்பழக்கமில்லா) நண்பர்கள் படும் மனோவேதனை கொஞ்சமா? என்னதான் அவர்கள் பல் துலக்கி வாய்தேய்த்து வந்தா லும் இலகுவில் அந்நாற்றம் நீங்கிவிடுவதா யில்லை. இன்னுஞ் சிலர் பற்றவைத்துக் குடித்து அவிந்து போன சுருட்டை மறுபடி யும் பற்றவைத்து விடுவாராயின் சொல் லொணு துர்வாசனையுடன் கூடிய அழர்ச்சி யும் உண்டாய் விடுகின்றது. அவர்களுடன் சம்பாஷிக்கும் போது எப்பொழுது இந் நண்பர் இவ்விடத்தை விட்டு ஏகுவார் எனும் நிலைமைக்கு வந்துவிடுகிறோம். குடித்த புகைச் சுருட்டுக்களை கீழே எறிந்து விடுவதால் வீடு களின் மூலைமுடுக்குகளிலும், முற்றத்திலும் அவைகள் வீழ்ந்து க்ஷணப் பொழுதில் அங் குள்ள நல்ல காற்றையெல்லாம் மாற்றி விடு கின்றனவென்பது நிதர்ஸனமாய் தாங்கள் காணமுடிந்தவைகள்தான். புகைரதங்களி லேயும், கும்பல்களிலேயுங்கூட சில நண்பர் கள் இப்புகையைக் குடித்து வெளி விடுவ தால் இவ்வப்பியாச மற்ற சகோதர சகோ தரிகள் படும் பாடு மிகவும் பரிதாபகரமாய் விடுகிறது. இன்னுஞ்சிலர் சாய்வுநாற்காலிக ளில் உல்லாஸமாய் மல்கார்ந்து சாய்ந்து கொண்டு இப்புகையை உள்ளுக்கிழுத்துவெளி விடும் ஆனந்தத்திலேயே எரிந்துகொண் டிருக்கும் சுருட்டின் நுனியிலுள்ள நெருப்புத் துணிக்கைகள் அவர்களின் அழகிய அங்க வஸ்திரத்தையும் மேல் சட்டைகளையும் துளை த்து பொத்தல் போட்டு விடுகின்றது. பூணும் பணியையும், பொன்னையும், பொன்போன்ற மேனியையும், காணும் கண்களையும் கனவனே போன்று கவர்ந்து தொலைக்கும் வீண்புகைக் குடியப்பியாஸம் வினையாய் வந்து முடிந்து விடுகின்றது. புகைக்குடி நண்பர்கள் நல்ல அறுசுவையுடன் ஆகாரங் கொண்டபின் இப் புகையை உட்கொள்வதால் அவ்வழகிய அரு மைப் போஜத்தின் பிரயோஜனம் உடம்பில் பரவா வண்ணம் செய்து விடுவதாய் ஓர் ஆயுர் வேத வைத்தியர் பிரலாபிக்கின்றுர். இன்னம் இப் புகைகள் ஹிருதயத்தைத் தாக்கி மனோ மய கோஸத்தில் ஸ்வப்பனம் போன்ற ஓர் வகை உணர்ச்சியை யுண்டுபண்ணி விடுவதாய் ஓர் அநுபவ வைத்தியர் கூறுகின்றுர். சாரா யத்தைப் போன்று உடனுக்குடன் சிறிது நரம்புகளை யலைத்து எழுச்சி செய்து பிறகு மயக்கமும் மந்தமும் தரும் புகைக்குடியும் அவலமேயென அங்கலாய்க்கிறுர் ஓர் ஹக்கீம்.

சின்ன ஆசியாவிலே ஓர் துருக்கிய குடும் பத்தில் பிறந்து இன்றைக்கு நூற்று நாற்பது க்கு மேற்பட்ட வயதினையுடையவரும் இன்ன மும் நடைப்பலமும் புத்திவல்லபமும் உடை யவரும் "சாரோ ஆகா" என்ற நாமமுடைய வருமாய் புத்திர பவுத்திர பாரம்பரியருமான ஓர் வீரரை யாவருமறிவர். அவர் தமதாயுளில் ஓர் கணமும் புகையுண்டதில்லையாம். ஆதலில் அருமைச் சகோதரர்களே! சுகவிரோதிகள் (Enemies of Health) என்னும் புத்தகத்தி லிருந்து சில விஷயங்களை கீழே சொல்லு வதைக் கவனிப்பீர்களாக :—

சிகரெட்டின் கணிதம்.

"நான் கணித சாஸ்த்திரத்தில் மிகத் தேறின வனல்ல ஆயினும் நான் ஒரு மனித னின் நரம்பைபடுத்த வியாதிகளோடு துன்பத்

தைக் கூட்டுவேன்; அவன் திரேகத்திலிருந்து ஊக்கத்தைக் குறைப்பேன். அவன் வலிகளையும் நோய்களையும் அதிகப்படுத்துவேன். அவனுடைய மனோவல்லமைகளைப் பிரிப்பேன். அவனுக்கு வேலையிலிருக்கும் முஸ்தீப்பை நீக்கிச் சித்தி பெறுவதற்கான நல்ல சமயங்களைக் கெடுப்பேன்" என்று ஒரு சிகரெட் சொன்னதாம்.

மேல்நாட்டு அதிகாரிகளின் நற்சாட்சி.

(1) மாட்சிமை தங்கிய முதலாம் ஜேம்ஸ் அரசர் சொல்லியது:—"கண்ணுக் கருவருப்பானதும், மூளைக்குக் கெடுதலானதும், நுரையீரலுக்கு மோசமுள்ளதுமான ஓர் வழக்கம் துர் நாற்றம் வீசும். அதின் கறுப்புப் புகையானது அடியற்ற பாதாளமாகிய நகரக் குழியின் புகையைப்போ லிருக்கிறது.

(2) (இப்புகைக் குடியை) "சோம்பேறிகளைச் சந்தோஷிப்பிக்கிறதற்குரிய தகுதியான ஓர் வழக்கம்" என்று நெப்போலியன் போனபார்ட் சொல்லுகிறார்.

(3) "தேகத்தினுள்ளிருக்கும் கேவலமான ஆசாபாசங்களை வெடிக்கச்செய்ய தீக்கொளுத்தும் நரகாக்கினி என்றே நான் சிகரெட்டைப்பற்றி எண்ணுகிறேன். வாஷிங்டன் பட்டணத்தில் கடந்த எட்டுவருஷங்களாக 16000 பேர்களுக் கதிகமான சிறு குற்றவாளிகளோடு நான் பழகியபோது, சிகரெட் உபயோகிப்பவர்களெல்லாம், குறுகினவர்களாகவும் தேகத்திலும் மனத்திலும் நல்லொழுக்கத்திலும் பலவீன முள்ளவர்களாகவுமே இருக்கக் கண்டேன்" என்று வாஷிங்டன் பட்டணத்திலுள்ள வாலிபக் குற்றவாளிகளைத் தண்டிக்கும் நியாயஸ்தலத்தின் தலைமை அதிகாரியாகிய ஜெட்காப் என்பவர் கூறுகிறார்.

(4) யூனியன் பசிபிக் ரெயில்வே கம்பெனியை நடத்தும் காரியஸ்தர்களின் சங்கத்தில் அக்கிராஸனம் வகிக்கும் ஆரிமேன் துரை பின்வருமாறு உரைக்கின்றார்—"சிகரெட் பிடிப்பவர்கள் மிக அபாயகரமான நிலைமையிலிருக்கிறார்கள். ஆகவே ரெயில்வே உத்தியோகத்துக்கு வரும்போது சிகரெட் பிடிப்பவர்களை வேலையில் வைப்பதைவிட பைத்தியக்காரர்களை வைக்கலாம்.

(5) குகாரண சாஸ்திரத்தில் (Pathology) பெயர் போன அதிகாரியாகிய டாக்டர் பார்பஸ் வின்ஸலோ, என்பவர் பைத்தியம் உண்டாவதற்கு பின்வருங்காரணங்களை வரிசைக் கிரமமாய் காட்டியிருக்கிறார். (a) குடி (b) சிகரெட் பிடித்தல் (c) பரம்பரை.

(6) கேம்பிரிட்ஜ் (Cambridge) சர்வகலாசாலையின் குகாரண சாஸ்திர பண்டிதராகிய டாக்டர் சிம்ஸ் உட்ஹெட் என்பவர் சொல்லுகிறார்.—"சிகரட் பிடித்தல் பையன்களுடைய விஷயத்தில் மூளையின் அடிப்பாகத்திலிருக்கும் நரம்புக் கூடுகளை ஒருவாறாய் உணர்வற்றுப் போகச் செய்கிறது, அதனால் இரத்தாசயத்தின் கிரியையாகிய சுவாசம் வாங்குதல் தடைப்படுகின்றது. கண், இரத்தாசயம், மூத்திர கோசங்கள், (Kidneys) இவைகளின் வேலையையும் அது தடுக்கிறது. அதுவுமன்றி சுருட்டுப் பிடித்தல் பையனுடைய வளர்ச்சியையுங் கூட கெடுத்து விடுகின்றது.

(7) லீலன்ட் ஸ்டான்போர்ட் ஜூனியர் சர்வகலாசாலையின் ஆலோசனைத் தலைவராகிய டேவிட் ஸ்டார் ஜார்டன் என்பவர் சொல்லுகிறதாவது— "சிகரட் பிடிக்கும் பையன்கள் புழுக்கள் நிறைந்த ஆப்பிள் பழங்களைப்போல விருக்கிறார்கள். அவைகள் அறுப்புக்காலத்துக்கு வெகு முன்னமே கீழே விழுந்து விடுகின்றன."

(8) "சிகாகோ சர்வகலாசாலையின் ஒரு வகுப்பாகிய பந்தயச்சங்கமானது, வித்தை பயிலும் வீரர்கள் அச்சங்கத்தின் அங்கத்தினராயிருக்கும் வரையில் புகையிலையையும் மயக்கந்தரும் பாணங்களாகிய சாராயங்களையும் உபயோகிக்க லாகாதென்று ஆதி முதற்கொண்டு ஆக்ஷேபனை செய்து கொண்டேயிருந்தது" என்று சிகாகோ சர்வகலாசாலையின் தேகப்பயிற்சியும் பந்தய சாலைக்குமுரிய வகுப்பின் விசாரணைத் தலைவராகிய பண்டிதர் ஏ. எ. ஸ்டாக் என்பவர் கூறுகிறார்.

(9) தற்கால நாகரீகத்தால் தேசத்துக்கு நேர்ந்த சாபங்களில் புகையிலை மிகவும் கொடியது என்று "ரஸ்கின்" சொல்லுகிறார்.

(10) அமரிக்கா கண்டத்தின் தோட்டப் பயிற்சித் தொழில் நிபுணரில் சிறந்தவராகிய லூத்தர் பர்பாங்க் என்பவர் உரைக்கிறதாவது.—"மிகக்கவனத்தோடும் சிந்தையைச் சிதறவிடாதபடி செய்யவேண்டி யிருக்கும்

வேலைகளில் கிளர்ச்சியை உண்டுபண்ணும் வஸ்துக்களை (Stimolants) மிதமாய் உபயோகிப்பவர்களுங்கூட சரியாய் தங்கள் வேலைகளைச் செய்யமுடியாது என்பதை நான் திட்டமாயும் சந்தேகமின்றியும் ரூபகாரப் படுத்தமுடியும். அரும்பு வேலையாகிய நுட்பமான வேலையைச்செய்ய அசக்தராகக்காணப்பட்ட யாவரும் குடியரும் சுருட்டுப் பிடிப்பவர்களுமாகவே யிருக்கக்கண்டேன். பிரதி தினமும், இரண்டு அல்லது மூன்று சுருட்டுப் பிடிப்பவர்களையுங்கூட அதி நுட்பமான வேலையைச் செய்யும்படி நாம் நம்பிக்கையோடே நியமிக்கலாகாது.''

ஆதலால் சகோதரர்களே நமது கண்ணிய முள்ள வாழ்நாளானது புண்ணியமற்ற அநாகரீகப்புகைக் குடியினால் சிதைந்து போகா வண்ணம் காப்பாற்றப்படவேண்டாமா?

(வரும்)

அகில உலக முஸ்லிம் மகாநாடு.

(ஜனாப் சையத் ரவூப்பாஷா வரைவது)

உலக சரித்திரத்தில் முதல் தடவையாக உலக முஸ்லிம் மகாநாடு மிகுந்த உற்சாகத்தினிடையே 1931 டிசம்பர் 6-ந் தேதி பைத்துல் முகத்தஸின் மஸ்ஜித அக்ஸாவில், பாலஸ்தீன் பிரதம முப்தீ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு முன் இத்தகைய மகா நாடு கூடியது கிடையாது.

பிரதிநிதிகள்.

இந்தியா, சிலோன், ஜாவா, ஹிஜாஸ், பாலஸ்தீனம், டிரான்ஸ் ஜோர்டன், ஸிரியா, லெபனன், எகிப்து, லெபியா, டியூனிஸ், அல்ஜீரியா, மொராக்கோ, எமன், தென் ஆப்பிரிக்கா, அதன், இராக், பர்ஷியா, இந்துசீனா, காகேஸஸ், ஏரல், ரஷியா, வார்ஸா, ஜுகோஸ்லாவியா, சீனதுருக்கி ஸ்தானம், நூபியா, புகாரா, யுனைடெட் ஸ்டேட்ஸ், பாரிஸ், அர்ஜெண்டைன் முதலிய விடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஹிஜாஸ் மாஜீ அரசர் அலீ, டிரான்ஸ் ஜோர்டானியா, அமீர் அப்துல்லா, போபால் நவாப், எகிப்து மாஜீ கதீவ், பிரின்ஸ் ஓமர் சேன் அப்பாஸ் பாஷா, எகிப்தியவப்து தலைவர் நுஹாஸ்பாஷா, இராக் ஸெனேட் தலைவர் ஆஸ்ஸாதர், எகிப்திய ஸெனேட் தலைவர் இப்ராஹீம் எஹ்யாபாஷா, எமன் லஹாஜ் சுல்தான், அமீர் ஷகீப் அர்ஸலான், இஹ்சன்பே ஜப்ரி, லெப்னுமுப்தீ, கல்கத்தா ஜனாப் கஸ்னவீ, போலந்து இஸ்லாமிய சமூகம், ஒரல் ரஷ்யா முஸ்லிம்கள், ஹிஜாஸ் அரசரின் அன்னிய நாட்டு மந்திரி, டிரான்ஸ் ஜோர்டானியா பிரதம மந்திரி, கிழக்கு சுமட்ரா ராஜகுமாரி, இராக் அரசரின் அந்தரங்கக் காரியதரிசி, மாஜீ துருக்கி மந்திரி ஹுசைன்காமில், எகிப்து அஹ்மத் ஷபீக் பாஷா, பேரூத் மாதர் சங்கம், இன்னும் பல சங்கங்கள், கிரீஸில் தடைப்பட்டுப் போன அல்பேனியப் பிரதிநிதிகள் நியூயார்க்கு அப்துல் ஹமீத் சுலைமான், நியூயார்க்கு இமாம் அஹமத்கதீப், ஜுகோஸ்லாவியா முஹம்மது அஜீம் முதலியவர்களிடமிருந்தும் இன்னும் ஆயிரக் கணக்கானவர்களிடமிருந்தும் மகாநாட்டின் விஷயத்தில் அனுதாபங்காட்டியும் மகாநாட்டை ஆதரித்தும் செய்திகள் வந்திருந்தன.

கிரேக்க வைதீக காங்கிரஸ், டிரான்ஸ் ஜோர்டன் கிறிஸ்தவர்கள், பாலஸ்தீனம் எகிப்து கிறிஸ்தவர்கள், முதலியோர் யூதர் கொள்கையை எதிர்த்துப் பாலஸ்தீன முஸ்லிம்கள் உறுதியாகப் போராடுவதைப் பாராட்டி ஆதரவளிப்பதாகச் செய்தி யனுப்பியிருந்தனர். அனுதாபம் தெரிவித்து ஒத்துழைப்பதாகக் கூறியதற்கு அவர்கட்கு வந்தன மளிக்கப்பட்டது.

உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் வந்த கடைசி கோஷ்டியான 150 பிரதிநிதிகள் டிசம்பர் 6-ந்தேதி காலை ரயிலில் வந்திறங்கியவர்கள் உற்சாகமாக வரவேற்கப்பட்டனர்.

ஆரம்பவைபவம்.

பிற்பகல் 2-30 மணிக்குப் பிரதிநிதிகள் யாவரும் காலேஜில் கூடியிருந்த பிரபல பாலஸ்தீன்வாசிகளுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர். நீண்ட வரக்ஷைக்குப்பின் அதிக மழைபெய்தது நற்குறியென கருதப்பட்டது. அவ்வாறு மழைபெய்தும் ஹாலுக்குப் போகும் வழியிலுள்ள தெருக்களில் கூட்டம் மிகவும் அதிகமாக விருந்தது.

பிரதிநிதிகள்.

அறிமுகம் செய்துவைக்கப்பட்ட பின் யாவரும் புனிதமான மஸ்ஜித அக்ஸாவுக்குச் சென்றனர். அதன் விஸ்தீரணமான காம்பவுண்டிற்குள் ஆயிரக்கணக்கானவர் கூடியிருந்தனர். வழியில் காலஞ் சென்ற மௌலானா முஹமத் அலீ, ஹாஜீ அரசர் ஹுஸைன் முதலியவர்களது கப்ர்களிடம் மக்பிரத்திற்கு துஆ செய்யப்பட்டது. மக்ரிப் தொழுகைக்குப் பின் மிஃஉருஜ்ஷரீப் இரவு கொண்டாடப்பட்டது.

பாலஸ்தீன பிரதம முப்தீ சையத் அமீன் அல்ஹுஸைனீ உபசரணைக் கமிட்டியின் சார்பாக உபசாரப்பத்திரத்தைப் படித்து விட்டு தலைவரை மகா நாட்டைத் திறந்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார். பிறகு தலைவர் உருக்குமாகப் பிரசங்கம் செய்தார். இஸ்லாத்திற்கு விரோதமாக உள்ள அபாயம் தென்படும் இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களெல்லோரும் ஐக்யமாக ஒற்றுமையுடன் ஒன்றுபடவேண்டுமெனவும், பல நூற்றுண்டுகளாக நமக்குள் ஏற்பட்டிருக்கும் சிறிய வேற்றுமைகளை எல்லாம் மறந்துவிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். அவருக்குப் பின் எகிப்து ஷேக் சையத் ரஷீத்ரிதா இந்திய, ஸர் முஹம்மது இக்பால் டியூனிஸ் அப்துல் அஜீஸ் தலாபீ, எகிப்து அப்துர் ரஹ்மான் முதலியவர்கள் பேசினர்கள்.

பிறகு எகிப்திய யுவர் லீக்கைச் சேர்ந்த டாக்டர் அப்துல் ஹமீத் மிகவும் ஆவேசத்துடன் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் புனித நாட்டை யூதர் ஆக்ரமிப்பதை எதிர்த்துப் போராடுவதாக தங்களுடைய கடைசி மூச்சுப் போகும் வரையில் ஒவ்வொரு முஸ்லிமும் இந்தப் புனித மஸ்ஜிதில் புனித இரவில் பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டுமென்று அவர் கூறினர். உடனே அல்லாஹு அக்பர் என்ற கோஷம் மஸ்ஜித் முழுவதிலும் மிகவும் அதிகமாக ஏற்பட்டது. அனைவரும் எழுந்து நின்று உற்சாகத்துடன் பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

மகா நாட்டின் முதலாவது கூட்டம் டிசம்பர் 7-ந் தேதி இரவு 10-30 மணிக்கு காலேஜ் ஹாலில் நடந்தது. அராபிய காங்கிரஸ் தலைவர் காஸிம்பாஷா ஹுஸைனீ தாற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதிநிதிகள் மகா நாட்டுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டபின் நடவடிக்கை சம்பந்தமான விதிகள் அங்கீகரிக்கப்பட்டன. பாலஸ்தீன பிரதம முப்தீ அல் ஹாஜ் அமீன் அல் ஹுஸைனீ அவர்கள் அல்லாஹு அக்பர் என்ற கோஷங்களிடையே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எகிப்து மாஜீ மந்திரி முஹம்மத் அலீ பாஷா, எமன் இமாமின் பிரதிநிதி ஷேக்சபாரா, இந்தியக்கவி ஸர் முஹம்மது இக்பால், பர்ஷியா மாஜீ பிரதம மந்திரி தீயா அல்டின் தபாதி பியாத் முதலியவர்கள் உப தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராக் ஷெய்குமுஜப்பர் இப்ராஹீம் அல்வாயித் பாலஸ்தீனம் இஜ்ஜதர்வாஸா இலங்கைப் பிரதிநிதியான சையத்ரவூப்பாஷா (நான்) ஆகிய நால்வரும் பொதுக் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். சுக்ரிபே கோபாட்லி, ரியாப்பே சுலூக், இருவரும் கண்ட்ரோலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாலஸ்தீன அராபிய பாங்கின் ஜெனரல் மானேஜர் ஹில்மிபாஷா பொக்கிஷதாரராயும் ஷேக்முஹம்மதுடஜானி உதவி பொக்கிஷதாரராயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மெம்பர்கள் தாங்கள் விரும்பும் கமிட்டிகளை பொறுக்கிக் கொள்ளுமாறு விட்டுவிடப்பட்டபின், பின் கண்ட கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

1. புனித நாடுகளினுடையனவும், புராக் ஷரீபினுடையவும் பாதுகாப்பு.
2. அல்அக்ஸாவில் முஸ்லிம் ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பது.
3. ஹிஜாஸ் ரயில்பாதைகள்.
4. வரவுசெலவு நிர்மாணம்.
5. விஷயாலோசனைக் கமிட்டிகள்.
6. மகாநாட்டின் திட்ட அமைப்பு.
7. இஸ்லாமிய போதனைப் பிரசாரம்.

இக்கமிட்டிகள் ஒவ்வொருநாளும் கூடின. நீண்டகாலம் யோசித்தபின் தீர்க்க ஆலோசனைக்குப் பின் யாதாஸ்துகளைச் சமர்ப்பித்தன. பலயாதாஸ்துகள் ஏகோபித்தவையாக விருந்தன. மகா நாட்டில் அவை நன்கு விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. விவாதங்கள் அரபி, துருக்கி ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் நடந்தன.

ஹிஜாஸ் ரயில்வே.

ஹிஜாஸ் ரயில்வேக்கமிட்டியின் யாதாஸ்து முதலாவதாக விவாதித்து அங்கீகரிக்கப்பட்டது. ஆராய்ந்து பார்த்ததில், அது முஸ்லிம் உலகத்தின் வசூலைக் கொண்டுபோடப்பட்டதென்று தெரியவந்தது. ஆகவே அது முஸ்லிம்களின் தர்மசொத்தென்றும், தகுந்த முஸ்லிம் ஸ்தாபனத்தின் ஆதிக்கத்திற்கு அதைத் திருப்பிக்கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லிம் ஸர்வகலாசாலைக் கமிட்டியின் யாதாஸ்த்து ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது. மகாநாட்டின் நிரந்தரக் கவுன்சில்முன் திட்டத்தைக் தயாரித்து சமர்ப்பிக்குமாறு நிபுணர்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

நிதி சேர்க்க ஏற்பாடு.

வரவு செலவுக் கமிட்டியின் யாதாஸ்தும் அங்கீகரிக்கப்பட்டது. அதில் முஸ்லிம் அரசர்களிடமும் முஸ்லிம் பிரபல தனவந்தர்களிடமும் தர்மவான்களிடமும் தூது சென்று பணம் வசூலிக்குமாறும், தலைக்கு ஒரு பிஸ்தர் ($2\frac{1}{2}$ அணுவுக்குச் சமமான தொகை) சந்தாவாக வசூலிக்குமாறும் யோசனை கூறப்பட்டிருந்தது. இப்படி வசூலிக்கப்படும் பணம் முதலாவதாக ஸர்வ கலாசாலையை ஏற்படுத்த உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிரசார போர்டு.

பிரசாரக் கமிட்டியின் யாதாஸ்து அங்கீகரிக்கப்பட்டு பிரசுரிப்பு மத்தியபோர்டு ஒன்றின் நியமனமும், ஜெருஸலத்தில் பத்திரிகை ஒன்றை யேற்படுத்துவதும் அங்கீகரிக்கப்பட்டன. அவசியமேற்படின் இதர முஸ்லிம் நாட்டிற்கு இப்பத்திரிகைப் பிரசுரலாயத்தை மாற்றிக் கொள்ளலாமெனவும் முடிவு செய்யப்பட்டது. பல முஸ்லிம் தேசங்களிலும் இதன் கிளைகளை ஏற்படுத்தி அரபி பாஷையில் வெளியிடப்படும் உத்தியோக முறைப் பத்திரிகையின் விஷயங்களை அப்பாஷை தெரியாத விடங்களில் மொழி பெயர்க்கத் தீர்மானிக்கப்பட்டது.

இராக் பிரதிநிதியின் யோசனையின் பேரில் அராபிய என்சைக்ளோபீடியாவைத் தயாரிக்கும் விஷயமாகவும் வியாதிக்கப்பட்டது. முஹம்மதலீ பாஷாவின் தலைமையில் ஒரு சிறிய உபக்கமிட்டி நியமிக்கப்பட்டு அதன் சிபார்சுகள் அங்கீகரிக்கப்பட்டன. இராக் கவர்ன்மெண்டாரால் இது சம்பந்தமான வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாலும், ஒரு சாஸ்திரீயச் சங்கம் எகிப்திய கவர்ன்மெண்டால் சீக்கிரம் ஏற்படுத்தப்படுவதாக விருப்பதாலும் அதன் தலைமை ஸ்தலத்தைக் கெய்ரோவில் கொண்டு இந்தப் பெரிய வேலையில் ஒத்துழைக்குமாறு எல்லா முஸ்லிம் கவர்ன்மெண்டுகளையும் கேட்டுக்கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. என்சைக்ளோபீடியா தயாரிப்பதற்கு முன்னதாக அரபிபாஷை அகராதி ஒன்று தற்கால புதிய ஸைன்ஸ் வார்த்தைகள் யாவும் அடங்கிய தாக நவீன முறையில் தயாரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

முஸ்லிம் சர்வ கலாசாலை

ஜெருஸலத்தில் முஸ்லிம் ஸர்வ கலாசாலை ஏற்படுத்துவதை ஸர் முஹம்மத் இக்பால் எதிர்த்ததாக டிசம்பர் 10-ந் தேதி ராய்ட்டர் அனுப்பிய செய்தி ஆதாரமற்றது. பழைய முறையில் மீண்டு மேற்படுத்துவதைத் தாம் எதிர்ப்பதாயும், நவீன முறையில் உலக முழுவதிலுமுள்ள முஸ்லிம்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஸர்வ கலாசாலையை ஏற்படுத்துவதைப் பலமாக ஆதரிப்பதாயும் அது யுவர்களுக்கு சயன்ஸ், ஆர்ட்ஸ் கிராப்டு, தியாலஜி இஸ்லாமிய சட்ட திட்டம், கைத்தொழில் முதலியவற்றில் இஸ்லாமிய வழியில் போதிக்கக் கூடியதாக விருக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

முஸ்லிம் காங்கிரஸ் மகா நாட்டின் திட்டத்தை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பெற்ற கமிட்டி மௌலானா ஷவுக்கத் அலீயின் தலைமையில் தயாரித்த யாதாஸ்து அடுத்தாற்போல் விவாதிக்கப்பட்டு சில முக்கிய சிபார்சுகளும் யோசனைகளும் சேர்க்கப்பட்

டன. மகா நாட்டின் நோக்கங்கள் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன. மகாநாட்டில்யார் யாரிருப்பது என்பது பற்றி கடுமையாக விவாதிக்கப்பட்டது. வந்திருந்த பிரதிநிதிகள் எல்லாரும் மகா நாட்டின் அசல் மெம்பர்களாகி விடுவதென்றும், நிரந்தரக் கவுன்சிலால் அழைக்கப்படுபவர்களும் மகா நாட்டின் பிரதிநிதிகளாகக் கருதப்படுவார்களென்றும் மகாநாடு நடக்கும்போது அதனல் அனுமதிக்கப்படுபவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. நம் சமுகத்திற்கு நல்ல சேவை செய்திருக்கும் சகல முஸ்லிம்களையும் மகாநாடு மெம்பராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அதிகார மளிக்கப்பட்டது.

மகாநாடு இரண்டு வருஷங்களுக்கொரு முறை உலகத்தின் வெவ்வேறு பாகங்களில் கூடும். ஆனல் காரியாலயம் ஜெருஸலத்திலேயே இருக்கும். மெம்பர்களிலிருந்து 25 மெம்பர்களடங்கிய நிரந்தரக் கமிட்டி சாத்தியமான வரையில் எல்லா முஸ்லிம் தேசங்களுக்கும் பிரதிநிதித்துவமுள்ளதாய் அமைக்கப்படும். 14-மெம்பர்களடங்கிய நிர்வாகக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்படும். இதில் ஒருவர் பொதுக் காரியதரிசியாயும், 4-பேர்கள் காரியதரிசிகளாயும் ஒருவர் பொக்கிஷக் காரியதரிசியாகவு மிருப்பர். இந்தக் கமிட்டி தனது வேலைகளுக்கெல்லாம் நிரந்தரக் கமிட்டிக்குப் பொறுப்பாக விருக்கும்.

பரிசுத்த ஸ்தலங்களின் பாதுகாப்பு.

புனித ஸ்தலங்கள், புராக்ஷரீப் முதலிய வற்றின் பாதுகாப்புக்கான கமிட்டியின் யாதாஸ்து அங்கிகரிக்கப்பட்ட பின் எல்லாரும் எழுந்து நின்று இரண்டு நிமிஷம்மௌனமாக இருந்து 1929-ம் வருஷத்தில் யூதர்கலவரத்தின்போது புராக் ஷரீபைப் பாதுகாப்பதில் உயிரிழந்தவர்களுக்கு துஆ செய்தார்கள்.

அறியாத ஏழை அராபியக் குடியானவர்களிடமிருந்து யூதர்கள் அதிக விலைகொடுத்து நிலங்களை வாங்கி வருவதாலும், அராபியர்களைப் பாலஸ்தீனத்திலிருந்து வெருட்டிவிடும் நோக்கத்துடன் நிலங்கள்மீது அதிகக்கடன் கொடுத்து வருவதாலும், 10 லக்ஷம் பவுன் மூலதனத்துடன் அராபிய பாலஸ்தீன்பாங்கு ஒன்றை யேற்படுத்தி ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களை மீட்டு அராபியர்களை யூதர்களிடமிருந்து காப்பாற்றத் தீர்மானிக்கப்பட்டது.

நிலத்தில் சொற்பபாகத்தை வாங்கி மஸ்ஜிதுக்கோ ஸர்வகலாசாலைக்கோ அளித்து புனித நாட்டாரை தாய்நாட்டிலிருந்து வெளியேற்றப்படாமல் பாதுகாக்குமாறும் புனித மஸ்ஜிது பேராசையுள்ள யூதர்கள் வசம் போய்விடாமல் பாதுகாக்குமாறும் யூதர்கள் இந்த மஸ்ஜிதை தங்கள் கோவிலாகச்செய்ய உத்தேசித்திருப்பதைத் தடுக்குமாறும் முஸ்லிம் உலகத்தை வேண்டிக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பாரிச் சுவர் சம்பந்தமாக ஸர்வதேச சங்கம் செய்திருக்கும் முடிவு பலமாகக் கண்டிக்கப்பட்டது. லீகின் கமிட்டி இந்தச் சுவர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான தர்மசொத்தாகப் பாவிக்கப்படவேண்டுமென்று கூறியிருப்பதை லக்ஷ்யம் செய்யாதிருப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

வராத மெம்பர்களும் வந்திருந்த மெம்பர்களும் அனுப்பியிருந்த பல தீர்மானங்களை விஷயாலோசனைக் கமிட்டி விவாதித்துக் கொண்டிருக்கையில் நான் கொழும்புக்குக் கப்பலேறுவதற்காக ஜெருஸலத்தை விட்டுப் புறப்பட வேண்டியிருந்தது. நிரந்தரக் கவுன்சில் நிர்வாகக் கமிட்டி முதலியவற்றின் தேர்தல் அப்போது நடக்கவில்லை! உத்தியோக முறையில் செய்தியை எதிர்பார்க்கின்றேன். வந்தவுடன் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறேன்.

மகாநாடும், கூட்டமும் வெற்றிகரமாக நடந்தன. முஸ்லிம் உலகம் ஒருமித்த நடவடிக்கையை விரும்புவதை அது வெளிப்படுத்தியது. முஸ்லிம் வகுப்பினரின் பெரிய சேவையை இம்மகாநாடு பூர்த்திசெய்துவிடும். பல தேசங்களும் கவர்ன்மெண்டுகளும் மகாநாட்டின் நோக்கங்களைப்பற்றிச் சந்தேகம் கொண்டிருந்தன.

முஸ்லிம் உலகம் பூராவும் ஒருமித்த அபிப்பிராயங்கொண்டு விவாதமற்ற விஷயங்கள் மாத்திரமே யோசனைக்குக் கொண்டுவரப்பட்டதால் அடுத்த மகாநாடு இன்னும் பிரதிநிதித்துவம்பெற்றதாயிருக்குமென்றும், முக்யமான முஸ்லிம் தேசங்கள் அதில் கலந்து கொள்ளுமென்றும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

பாலஸ்தீன முஸ்லிம்களிற் சிலர் போட்டி மகாநாடு நடத்தியது முஸ்லிம்களுள் பிளவைக் காட்டுவதாகத் தவறாக நினைக்கப் பட்டுவிட்டது. ஜெருஸலம் முஸ்லிம்களில் ஒரு சிறு பிரிவினர் பிரதம முப்தியின் தலைமையில் நடக்கும் பொது ஜன இயக்கத்திலிருந்து எப்போதுமே ஒதுங்கியிருந்துவந்தனர். அவர்கள் இம்மகாநாடு இவ்வளவு வெற்றிகரமாக நடக்குமென்று எதிர்பார்க்கவேயில்லை. கடைசிநேரத்தில் உபசரணைக்கமிட்டியில் தங்களுக்குச் சமப் பிரதிநிதித்துவம் அளிக்குமாறு அவர்கள் கேட்டனர். பிரதமமுப்தீ அவர்கள் சொந்த ஹோதாவில் இதையளிக்கத் தயாராயிருந்தபோதிலும் அவருடைய சகாக்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. 40 மெம்பர்களடங்கிய உபசரணைக்கமிட்டியில் 7 மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள ஒத்துக்கொள்ளப்பட்டது. மௌலானா ஷவுக்கத் அலீ ராஜிக்கு மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார்கள். ஆனால் பலனேற்படவில்லை. ஆகவே இந்தச் சிறிய கோஷ்டி தனிக்கூட்டம் நடத்திப் பெரும்பாலோரான கட்சியைக் கண்டித்தது. அவர்கள் கதவை மூடிக்கொண்டு தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர். எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் அனைவரும் மகாநாட்டின் நோக்கங்களை யாதரிக்கின்றனர். காலக்கிரமத்தில் இந்தப்பிளவு மறைந்து இஸ்லாம், பாலஸ்தீனம் இவற்றின் நன்மையே நிலைநிற்குமென்று நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தியாவிலும் சிலோனிலும் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாத்தின் புனருத்தாரணத்தில் தங்களுடைய கிரமமான பங்கை யெடுத்துக்கொண்டு, உலக சமாதானத்திற்குத் தகுந்த உதவியளிக்குமாறு செய்வார்களென்று நம்புகிறேன்.

கொழும்பில் புதியபள்ளி திறப்புவிழா.

ஜனாப் ஹாஜீ P. B. உம்பிச்சி J. P. அவர்களின் பெரும் நன்கொடை.

சென்ற 31—12—31 வெள்ளிக்கிழமை இரவில் கொழும்பு ஆதருபள்ளித் தெரு என்ற உல்பண்டல் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற "அல்-மஸ்ஜிதுல்-ஙாபிர்" என்னும் பள்ளிவாசலானது மாண்பு மிக்க செய்யிது அகில் மௌலானா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் ஏராளமான முஸ்லிம்கள் விஜயஞ் செய்திருந்தனர். கொழும்பின் பிரபல வர்த்தகப் பிரபுவாகிய ஜனாப் ஹாஜீ P. B. உம்பிச்சி J. P. அவர்கள் நல்ல சௌகரியம் பொருந்தியுள்ள ஒரு விஸ்தீரணமான இடத்தில் அப்பள்ளியை வெகு அழகாக கட்டி முடித்து முஸ்லிம் பொதுஜன நன்மைக்காக வக்பு செய்தார்கள். அப்பள்ளிவாசல் மிஸ்டர் U. L. M. சயீது அவர்களுடைய கன்டிறாக்டின் கீழ் ரூபாய் 50,000, செலவில் கட்டி முடிக்கப் பெற்றதாகும்.

அன்று அப்பள்ளியும் பள்ளிவாசலைச்சூழ்ந்துள்ள இடங்களும் மின்சார விளக்குகளால் மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. பள்ளி முத்தவெளியில் இரு உன்னதமான மினாராக்களோடுகூடிய ஒரு விசாலமான மண்டபம் நிருமாணிக்கப்பட்டிருந்தது.

வெளியில் ஏராளமான பொது ஜனங்கள் பள்ளிக்குள் நடக்கும் விழாவை நோக்கிய வண்ணமாய் நின்றனர். ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தாலும் அவர்களுக்குள் பள்ளியினுள் பிரவேசிப்பதற்குள்ள மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்ததாலும் போலீஸ் இனிஸ்பெக்டர் பீறிஸ் அவர்களும் ஸப் இனிஸ்பெக்டர் முஸ்பர் அவர்களுமாக மிக்க பிரயாசை எடுத்து ஜனங்கள் நிசப்தமாகயிருக்கும்படிசெய்து, அவ்விழா அமைதியாகவும், விமரிசையாகவும் நடப்பதற்கு பேருதவி செய்தனர். பள்ளிக்குள் இடம் போதாதென நினைத்து பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த மைதானத்திலும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் உட்கார்ந்திருந்தனர்.

திறப்பு விழா.

இரவு ஏழரை மணிக்கு ஜனாப் செய்யிது அகில் மௌலானா அவர்கள் பள்ளிவாசலைத்

திறந்தார்கள். மகா ஜனங்கள் எல்லோரும் பள்ளிக்குள் நுழைந்து வரிசையாக அமர்ந்துக் கொண்டவுடன் கனம் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் கூட்டத்தின் மத்தியில் மௌலானு அவர்களின் சமீபஞ்சென்று எழுந்து நின்று முஸ்லிம் பொது ஜனங்களின் மத அனுஷ்டானங்களுக்காக தாம் இக்கட்டடத்தை ஆண்டவன் பெயரால் கட்டிமுடித்ததாகவும், அது தம்முடைய சொந்த செலவிலேயே கட்டி முடிக்கப்பெற்ற தென்றும், அதை வக்பு செய்து வைத்து அதன் நிர்வாகத்திற்காக சில சொத்துக்களை விட்டுக் கொடுக்கப் போவதாகவும் கூறி முடித்தார்.

ஐந்துநிமிஷம் கழிந்தபின் முஅத்தின் மினுராவின் உயரத்தில் ஏறி நின்று எல்லோரையும் தொழுகைக்காக அழைத்தார் உடனே ஆயிரக் கணக்கான ஜனங்கள் உள்ளும் புறமும் நின்று ஜனுப் A. M. K. ஹாஜீ முஹம்மது முஹியித்தீன் ஆலிம் அவர்களை முதன்மை (இமாமாக) ஆக்கி இஷா தொழுகையை நிறைவேற்றினுர்கள்.

நன்றி கூறுதல்.

ஜனுப் N. H. M. அப்துல் காதிர் அவர்கள் எழுந்து கனம் ஹாஜீ, உம்பிச்சி அவர்கள் செய்துள்ள புனித கைங்கரியத்திற்காக அவரைகண்ணியப்படுத்தி, நன்றி செலுத்துவதற்காகவே இந்த அழகிய பள்ளிவாசலில் நாமெல்லோரும் கூடியிருக்கிறோமென்றும், ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் தமது கருத்தினை தெரிவித்ததை எல்லோரும் கேட்டுக் கொண்டதால் அதற்கு பிரதியாக அவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் அளிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோமென்பதாகவும் தமிழில் கூறினர். அவ்வுபசாரப் பத்திரத்தை படிப்பதற்கு முன் அவர் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சாரம் அடியில் வருமாறு.

"நான் ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்களை 30 வருடகாலமாக நன்கு அறிவேன்; அவர் செய்யும் பொதுஜன சேவையை அறியாதார் ஒருவருமிலர்; அவருக்கு நாம் உபசாரப் பத்திரம் அளிப்பது மட்டும் போதாது; அவர் செய்துள்ள இணையற்ற சேவைகளையும் இங்கு எடுத்துக்கூறி அவைகளுக்காக நம்முடைய மனமார்ந்த வந்தனத்தையும் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்; அவர் மலபாரில் பிறந்தவர்; சிலோன் வந்து ஒரு சிறு வியாபாரத்தை ஆரம்பித்தார்; அவரின் தற்போதிய நிலைமையிலிருந்து பொது ஜனங்களால் எவ்வளவு தூரம் கொண்டாடப்படுகிறார் என்றும்; எவ்வளவு சுருக்கமான கால அளவிற்குள் இந்நிலைமைக்கு வந்துள்ளார் என்றும் நாம் விளங்கிக் கொள்ளலாம். அவர் ஏராளமான செல்வத்தினை சேர்த்ததோடில்லாமல் அநேக நற்சேவைகளையும் சித்தியாக்கி யிருக்கின்றார். இத்தகைய தன்மைகள் எல்லோரிடத்திலும் காணமுடியாது. உதாரணமாக அவர் மதப் பக்தியும் ஏழைகளின் மீது அன்பும் உடைய உத்தம புருஷராக இருக்கின்றார். அவர் சிலோன் இந்தியா ஆகிய தேசங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி உலக முஸ்லிம்களுக்குள்ள அவசியமான தருமப்பணி விடைகளில் ஈடுபட்டிருக்கின்றார். எந்த சமயத்தில் வேண்டுமானுலும் தம்முடைய செல்வத்தைக் கொண்டு முஸ்லிம்களுக்குத் தொண்டாற்றுவதற்குத் தயாராய் இருக்கின்றார். ஒவ்வொரு விஷயத்திலும் முஸ்லிம்களின் (முக்கியமாக சிலோன் முஸ்லிம்களின்) அபிவிர்த்திக்காக எவ்வளவோ தியாகஞ் செய்திருக்கின்றார். அவர் நம் நாட்டிற்கு அணிகலம் போல் விளங்குகின்றார். அவர் கல்வியின்மீது எத்தனை அபிமானம் வைத்திருக்கின்றார் என்பதை நிரூபிக்க எத்தனை அத்தாட்சிகள் வேண்டுமானுலும் குறிப்பிடலாம் சமீபத்தில் "ஜாஹிரா காலேஜ்" போதுமான கட்டடமும் வசதியுமில்லாது தயங்கி பொருளுதவியை எதிர்பார்த்திருந்தக் காலை, அநேக கட்டடங்களைக்கட்டி அவைகளை மர்தானு பள்ளிக் கமிட்டி மெம்பர்களின் மேற்பார்வைக்கு விட்டு, அப்பள்ளிக்கூடத்தின் உபயோகத்திற்காக நன்கொடையும் அளித்துள்ள இம்மகானின் கொடைத் தன்மையினை இதற்குள் யார் மறந்துவிட முடியும். இன்று கூட இவ்வழகிய பள்ளிவாசலையும் இதை சூழ்ந்துள்ள மைதானத்தையும் பொதுஜன உபயோகத்திற்காக விட்டுக்கொடுக்க முன் வந்திருக்கின்றார். இப்புண்ணிய புருஷருடைய பெயர் பிரஸ்தாபத்தைப் பற்றியும், இவர் செய்துள்ள புனித கைங்கரியங்களைப் பற்றியும் இக்கட்டடங்கள் நிலைத்திருக்கின்றவரை ஜனங்களால் ஞாபகஞ் செய்யப்படும் என்பதிற் சந்தேகமில்லை. ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் செய்துள்ள நன்மையான காரியங்களைப்பற்றி

நான் இன்னும் கூறிக்கொண்டே போனால் சில மணி நேரங்கள் வரை செல்லுமாதலால் மிக்க வாறும் சுருக்கிக் கூறுகின்றேன். முஸ்லிம் சகோதரர்களாகிய நீங்களும் அவருடைய உயரிய நோக்கங்களாகிய அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடப்பீர்களென்று வேண்டிக் கொள்கிறேன். நாம் எந்த பொதுக்காரியத்தை விரும்பி அவரிடம் உதவி கோரினாலும் அவர் உடனே நமக்கு உதவி அளித்து ஆதரிக்கத் தயாராய் இருக்கின்றார். சட்ட சபையில் வருமானவரி மசோதா இருமுறை நிறைவேற்றப் பட்டுப் போனதைப்பற்றி நாம் பெரும்பாலும் வருத்த மடையாமல் இருக்க முடியாது. ஆயினும் இனி மூன்றாம் முறையும் அது நிறைவேறாதிருக்க எல்லோரும் ஒரே மனதாக எதிர்த்து நிற்பதற்கு பிரயத்தனஞ் செய்வோம் என்று உறுதி செய்து கொள்வோமாக.

உபசாரப் பத்திரம்

அப்பால் ஜனாப் அப்துல்காதிர் அவர்கள் பின்வரும் உபசாரப் பத்திரத்தை வாசித்தார்.

"ஜனாப் ஹாஜீ P. B. உம்பிச்சி. J. P.

அவர்கட்கு, அஸ்ஸலாமு அலைக்கும்."

இஸ்லாம் செய்ததவப்பேறாய் உதித்தெழுந்தசெல்வச்சோதர! புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வழகிய பரிசுத்தமான கட்டடத்தை ஆண்டவனுக்காக முஸ்லிம் பொது ஜனங்களின் உபயோகத்திற்கென்று அர்ப்பணஞ் செய்த தங்களின் பெருந்தன்மைக்கு சிலோன் முஸ்லிம்களின் சார்பாக யாங்கள் எல்லோரும் இச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு எங்களின் மனமார்ந்த அன்பினைத் தெரிவிப்பதுடன், எங்கள் உபசாரப் பத்திரத்தையும் விநயமாக சமர்ப்பித்துக் கொள்கிறோம். இவ்விதமான அழகிய கட்டடத்தை தங்களின் சொந்தச் செலவில் கட்டி முடித்து பொது ஜனங்களின் உபயோகத்திற்காக விநியோகித்ததின் காரணமாக, தாங்கள் உலக ரக்ஷகனின் கிருபையையும், அவனது சந்நிதானத்தில் ஒருபொழுதும் குறையாத பெரும் புண்ணியத்தையும், உயர் பதவியையும் இன்னும் அவனது தூதர் முஹம்மது (ஸல்.) அவர்களின் ஆசீர்வாதத்தையும் தேடிக்கொண்டீர்கள் என்று யாங்கள் நம்புகின்றோம்.

பொதுவாக சிலோன் நாட்டிற்கும் சிறப்பாக முஸ்லிம் சமூகத்திற்கும், மதம் தேசீயம் இராஜீயம் ஆகிய எத்துறைகளிலும், தாங்கள் ஆற்றியுள்ள இன்னும் ஆற்றிக் கொண்டிருக்கின்ற எண்ணற்ற சேவைகளையும் தருமப் பணிவிடைகளையும் அடியில் கையொப்பமிட்டுள்ள யாங்களெல்லோரும் ஒரு பொழுதும் மறக்கமாட்டோம்.

தாங்கள் ஒரு உண்மை முஸ்லிமாக இருப்பதற்கேற்ப, தங்களின் மதிப்பிடற்கரிய தயாளத்தாலும் ஈகைக் குணத்தாலும் இன்னும் முஸ்லிம், முஸ்லிமல்லாதார் கல்வி விஷயமாகத் தாங்கள் செய்துள்ள உதவி ஒத்தாசைகளாலும் உங்கள் சகோதர முஸ்லிம்களின் மனதை மட்டுமன்றி இத்தீவினுள்ளும் இதற்கு வெளியிலுமுள்ள சமூகத்தாரின் உள்ளங்களையுங் கவர்ந்திருக்கின்றீர்கள்.

ஜாதி, நிறம், குலம் ஆகியவற்றுள் ஒன்றிலேனும் வித்தியாசம் பாராட்டாது சகலருக்கும் ஒன்றுபோல அறஞ் செய்தலையே தங்கள் இன்னுயிரன்ன தொழின் முறையாகக் கொண்டுள்ள உங்கள் பெருந் தன்மையும், தங்களுடைய கடமைகளில் ஒன்றையும் விடாது செய்வதில் மிக்க பக்தியும் ஊக்கமும் காட்டிவரும் உங்கள் நன்னம்பிக்கையும் தங்களுடைய சாந்தமும் பொறுமையும் நிறைந்துள்ள சுபாவமும் உலகப் பிரசித்தமானவைகளாகும். விலை மதிக்கவொண்ணாத தங்களின் குணாதிசயங்கள் இந்நாட்டின் பற்பல பாகங்களில் வதியும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உணர்ச்சியை ஊட்டவல்ல உதாகரணமாய் இருக்கும் என்று கூறுவது மிகையாகாது.

தங்களுக்கு திடத்தையும் செல்வத்தையும் அளிப்பதுடனே ஆண்டவனும் அவனது தூதர் முஹம்மது (ஸல்.) அவர்களும் அவர்களின் உண்மைத் தோழர்களும் காண்பித்த சன்மார்க்க வழியில் தாங்கள் இன்னும் நன்கு பயனளிக்கத் தக்க தொண்டாற்றி வருதற்கு நீடித்த ஆயுளையும் தங்களுக்கு அல்லாஹ் தஆலா அளித்தருள்வானாக,"

இங்ஙனம்.

தங்களன்புள்ள,

சகோதர முஸ்லிம்கள்.

மேலே கூறப்பெற்ற உபசாரப் பத்திரத்தை ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்களுக்கு ஆங்கு கூடியிருந்த முஸ்லிம்களின் சார்பாக அளிக்கப்பட்டது.

ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் எழுந்து கூட்டத்திலுள்ளோருக்கு வந்தன மளிக்கையில் ஜனுப் அப்துல் காதிர் அவர்கள் கூறியவை அனைத்தும் தமக்கு உரியனவல்ல வென்றும், சகல பெருமையும் புகழும் யாவற்று உயிர்களையும் படைத்து ரட்சிக்கும் அருளாளனுகிய ஆண்டவனே தம்மை பொதுஜன சேவை புரிவதற்கு தூண்டிய தால் அவனுக்கே உரியதாகுமென்றும் கூறி முடித்தார்.

மிஸ்டர் ஜயாஹின் வந்தனுேபசாரம்.

மிஸ்டர் ஜயாஹ் அவர்கள் எழுந்து கூறியதாவது :—

"முஸ்லிம் சோதரர்காள்! நான் இப்போது ஒரு கஷ்டமான வேலைக்குள் சிக்குண்டிருக்கின்றேன். அதாவது ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்களின் சார்பாக நான் இங்கு கூடி இருக்கும் உங்கள் அனைவரையும் கண்ணியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறேன். ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் நம்மை கண்ணியப் படுத்துவது நியாயமாகாது. ஆனல் நாமே அவர்களை கண்ணியப்படுத்தக் கடமைப் பட்டிருக்கின்ரேம் என்பதை நீங்கள் எல்லீரும் ஒப்புக் கொள்வீர்கள். அவர்கள் விஷயமாய் ஜனுப் அப்துல் காதிர் அவர்கள் கூறியவை அனைத்தும் பொருத்தமானவைகளே. அவர், இச் சிலோன் முஸ்லிம்களுக்குள் மிக்க உயர் பதவியில் இருக்கும் கனம் ஹாஜீ உம்பிச்சி அவர்களின் நிலைமையைப்பற்றி மிக விளக்கமாகக் கூறியுள்ளார். அவர்களின் பொதுஜன சேவையானது மற்ற முஸ்லிம்களையும் அவ்வாறு தொண்டாற்றுதற்கு தூண்டும் என்பது நிச்சயம். அவர்கள் செய்யும்புண்ணிய சேவைகள் அனைத்தும் ஒரு தேசத்தாருக்கோ அல்லது ஒரு வகுப்பாருக்கோ அல்லது சமூகத்தருக்கோ மட்டும் உரிய தன்று. ஆனல் அவர் இச் சிலோன் தீவிற்கு வெளியிலும் பொதுஜன நன்மைக்கு வேண்டிய பணிகள் ஆற்றிவருகின்ருர். கல்வி ஸ்தாபனம், பள்ளிகள் நிர்மாணம் சமூக முன்னேற்றம், தர்ம ஸ்தாபனங்கள் ஆகிய புனித காரியங்கள் விஷயமாக எப்பொழுதும் உழைக்கவும் உதவி செய்யவும் தயாராய் இருக்கின்ருர். ஜனுப் ஹாஜீ உம்பிச்சி அவர்கள் தேக அசௌக்கியமாய் இருந்தபோது, சிலோன் நாடு பூராவும் துக்கக்கடலில் ஆழ்ந்திருந்தது. இதிலிருந்து அவர்மீது ஜனங்கள் எவ்வளவு தூரம் அபிமானம் வைத்திருக்கின்ருர்கள் என்பது அறியக்கிடக்கின்றது. அவர் தம்முடைய மதத்திற்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் இன்னும் இடைவிடாது உழைத்து சேவை செய்துவருவார் என்பதிற் சந்தேகமில்லை." என்று கூறி முடிவில் ஜனுப்ஹாஜீ உம்பிச்சி அவர்கள் சார்பாக கூட்டத்திலுள்ளோருக்கு வந்தனமளித்து உட்கார்ந்தார்.

பிறகு சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் பிரதிநிதியாக சிலோன் விஜயஞ் செய்திருக்கும் மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். அதன் பிறகு அநேகர் தமிழில் பேசினுர்கள். சில வெகுமானங்கள் வழங்கியதும் வைபவம் இனிது முடிந்தது.

பள்ளிக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் 3000-க்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு உணவளிக்கப்பட்டது. பள்ளிவக்பு செய்யப்பட்டபின் அதன் பரிபாலனத்திற்காக ரூ. 30,000 பொருமதியுள்ள சொத்துக்களை அல்லாஹ்வுக்காக விட்டு விட்டபின் அதற்கு ஒரு பரிபாலன் கமிட்டியும் அமைக்கப்பெற்றது. அக்கமிட்டியில் 2 டிரஸ்டியும் 16 கமிட்டி மெம்பர்களும் யேர்படுத்தப்பட்டிருக்கிறது.

டிரஸ்டிகள்

(1) ஹாஜீ பா. சு. பல்லாக்குலெப்பை ஆலிம் சாஹிபு

(2) ஹாஜீ P. B. உம்பிச்சி J. P.

கமிட்டி மெம்பர்கள்.

(1) ஹாஜீ A. M. K. முஹம்மது முஹியித் [தீன் ஆலிம் சாஹிபு

(2) ஹாஜீ பா. மு. க. அஹ்மது ஜமாலுத் [தீன் ஆலிம் சாஹிபு

(3) M. E. உதுமான் & ஸன்ஸ்

(4) A. M. உதுமான் பிள்ளை

(5) N. M. முஹையித்தீன் கசாலி

(6) வ. அ. அஹ்மத் தம்பிமரைக்காயர்

(7) மு. செ. அ. கோயா மரைக்காயர்

(8) P. குஞ்சுமூசா
(9) ஹாஜீ T. K. அப்துற்றஹ்மான்
(10) P. ஹுசைன்கோயா
11) சே. வருசைகண்ணு மரைக்காயர்
(12) ஹாஜி மு. கா. மீ. ரு. முஹம்மது [அசனுலெப்பை ஆலிம் சாஹிபு
(13) சே. ந. முஹம்மது அபூபக்கர்
(14) வா. ப. காதர்மீரா சாகிபு
(15) V. C. மம்மு
(16) செ. செ. மு. செய்யிது முஹம்மது [காரிய தரிசி.

லைலத்துல் கத்ர்.

மாக்ஷிமை பொருந்திய இரவில் அதை (குர்ஆன் ஷரீபை) நாம் நிச்சயமாக இறக்கினோம். மேலும், மாக்ஷிமையான இரவு இன்னதென்பதை உமக்கு அறிவித்தது எது? மாக்ஷிமையான (அவ்) இரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் மேலானதாகும். அந்த இரவில் மலக்குகளும் ரூஹும் தங்களுடைய றப்பின் உத்திரவுப்படி ஒவ்வொரு காரியத்தைக் கொண்டும் இறங்குவார்கள். ஈடேற்றம்; அது வைகறை உதயமாகும்வரை இருக்கிறது.
—குர்ஆன்.

அன்புற்ற சோதரீர் !

அடியார் மீது கிருபை புரிந்து பரிபாலித்து வருபவனாகிய அல்லாஹ் தஆலா தன் திருமறையின் 97-வது அத்தியாய வாயிலாய் குர்ஆன் ஷரீபாகிய திருவேதம் முதல் முதலாக இறக்கப்பெற்ற இரவைப்பற்றியும் அதன் மகிமையைப் பற்றியும் கூறியிருக்கின்றான். இத்தகைய சிறப்பினையுடைய இரவானது றமலான் மாதத்திலேயே இருக்கிறது என்பதை குர்ஆன் ஷரீபின் வசனத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம். அல்லாஹ் தஆலா மாக்ஷிமை பொருந்திய இவ்விரவின் மகிமையைப்பற்றிச் சொல்கையில் இது ஆயிரம் மாதங்களைப் பார்க்கினும் சிறந்ததெனச் செப்பி இருக்கின்றான். அதாவது அந்த ஓர் இரவில் விழித்து, வணங்குவது ஆயிரம் மாதங்கள் வணங்குவதைப் பார்க்கினும் மேலானதாகும் என்பதே இதன் கருத்தாகும். ஆதலின் நஞ்சோதரர்கள் இப்புனிதமான இரவில் விழித்து தங்களால் ஏண்டவரை வணக்கம் புரிந்து அதனால் உண்டாகும் நற்பலனைப் பெறுவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்விரவானது றமலான் மாதத்தில்தான் என்பதைத் தெரிந்து கொண்டாலும் அது எத்தினத்தைய இரவு என்பதாக வெளிப்படையாகக் கூறப்படவில்லை. அவ்விரவானது றமலான் மாதத்தின் பிந்தியபத்தின் ஒற்றைப்படையாகவுள்ள இரவுகளிலொன்றிலெனக்கூறப்படுகிறது. ஆனால் அநேகப் பெரியார்கள் றமலான் மாதத்தின் இருபத்து ஏழாவது இரவென்பதாகக்கூறி, நாயகம் (ஸல்.) அவர்கள் இருபத்து ஏழாவது இரவின் விஷயமாகக்கூறி இருக்கும் சிறப்புக்களை ஆதாரமாகவும் எடுத்துக் கூறுகின்றனர். இவ்விரவில் பெரியார்கள் பலவிதமாக வணங்கியிருக்கின்றனர். சிலர் அவ்விரவு முழுதும் நபில் தொழுகை நிறைவேற்றி யிருக்கின்றனர்; சிலர் திக்ரு செய்வதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர்; சிலர் குர்ஆன் ஓதிவந்திருக்கின்றனர்; சிலர் சலவாத்து ஓதிவந்திருக்கின்றனர். இம்முறைகளில் எதெதில் யார் யாருக்கு மன ஒர்மையும், தெய்வபக்தியும், இன்பமும் அதிகமாக ஏற்படுகின்றனவோ, அதுவே அவர்களுக்குச் சிறந்தது. ஆகவே அருஞ்சிறப்பினையுடைய மாக்ஷிமை தங்கிய இரவை நழுவவிடாது பார்த்துக் கொள்வது ஒவ்வொருவருக்கும் அத்தியா அவசியமாகும் இப்புண்ணிய இரவின்மாண்பை நஞ்சோதரர்களும் நாமும் அடைய எல்லாம் வல்ல நாயன் கருணைபுரிவானாக.

பித்ரு ஸதக்கா.

(ஹனபீமத்ஹபுப்பிரகாரம்)

ஜக்காத் கொடுக்கக் கடமைப்பட்ட ஒவ்வொருவரும் பித்ரு சதக்கா கொடுக்க வேண்டும் (வாஜிபு). இவ்வாறு கடமைப்பட்டவர்களில் எவர் ஸதக்கா கொடுக்கவில்லையோ, அவரது நோன்பு அல்லாஹ்வின் சமூகத்தில் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது என ஹதீது ஷரீபில் கூறப்பட்டுளது. ஸதக்கா கொடுப்பதால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வதாகும். மேலும் அன்றைய திருநாளில் அவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சந்தோஷங் கொண்டாடஹேது ஏற்படுகிறது. ஆதலால் பித்ரு சதக்காவை தொழுகைக்குச் செல்லுமுன் கொடுப்பதும், அச் ஸதக்காவை தானியமாக கொடுப்பதைப் பார்க்கினும் ஏழைகள் தங்களுக்குத் தேவையானவற்றை சுலபமாக வாங்கிக்கொள்ளும் வண்ணம் அதை பணமாக கொடுத்து விடுவதும் உத்தமம்.

குடியிருக்க வீடு, கடன் முதலிய அவசியமான செலவுகளுக்கு மேல் 52½ ரூபாய் அல்லது அது பெருமானமுள்ள சொத்துக்களையுடைய ஒவ்வொருவரும் தனக்காகவும், தன் சிசுக்களுக்காகவும் பித்ரு ஸதக்கா கொடுப்பது வாஜிபு. பருவமடைந்த தன் மக்கள் முதலியோருக்காக பித்ரு ஸதக்காக் கொடுக்க அவன் கடமைப்பட்டவனல்லன். ஆனால் அவர்களிடம் ஸதக்கா விதியாவதற்குள்ள சொத்திருந்தால் அவர்கள் தங்கள் சொத்திலிருந்து பிரத்தியேகமாக ஸதக்காக்கொடுக்க வேண்டும். பருவமடையாத தன் குழந்தைக்குப் பிரத்தியேக சொத்திருக்குமாயின் அச் சொத்திலிருந்தே அக் குழந்தைக்குரிய பித்ரு ஸதக்காவைக் கொடுக்கவேண்டும். சித்த சுவாதீனமில்லாத தனது பெரிய குழந்தைகளுக்காக தகப்பனே ஸதக்கா கொடுக்க வேண்டும். நோயாளி, பிரயாணி, கர்பஸ்திரீ, மாதவிடாய் கொண்டபெண் ஆகியவர்கள் நோம்பு நோற்காவிட்டாலும் அவர்களிடம் ஸதக்கா விதியாவதற்குள்ள சொத்திருப்பின் அவர்கள் பித்ரு ஸதக்கா கொடுக்க வேண்டும்.

ஈதுல் பித்ரு பெருநாளாகிய ஷவ்வால்மீ௴ முதல்௳ யன்று கிழக்கு வெளுத்தவுடன் பித்ரு ஸதக்காக் கொடுப்பது வாஜிபாக ஏற்படுகிறது. இந்த நேரத்திற்குமுன் கொடுத்தாலும் அது நிறைவேறி விடுகிறது. ஆனால் அன்றைய தினம் பெருநாள் தொழுகைக்குப் போகுமுன் கொடுப்பது முஸ்தஹப்பு. அன்று கிழக்கு வெளுத்தவுடன் ஸதக்கா வாஜிபாக ஏற்படுவதால் கிழக்கு வெளுப்பதற்குமுன் குழந்தை பிறந்தால் அக் குழந்தைக்காக பித்ரு ஸதக்கா கொடுப்பது வாஜிபு. கிழக்கு வெளுத்த பின் பிறந்த குழந்தைகளுக்காக கொடுப்பது வாஜிபல்ல. கிழக்கு வெளுப்பதற்கு முன் குழந்தை பிறந்து, கிழக்கு வெளுத்த பின் அக் குழந்தை இறந்து போனாலும், அக் குழந்தைக்காக ஸதக்கா கொடுப்பது வாஜிபு. பித்ரு ஸதக்காக் கொடுப்பதற்குத் தகுந்த சொத்துள்ள ஒருவன் கிழக்கு வெளுக்கும்போது சீமானாக இருந்து, கிழக்கு வெளுத்த பின் ஏழையாகி விட்டால் அவனும் பித்ரு ஸதக்காக் கொடுக்கக் கடமைப் பட்டவனாவான்.

மணிக்கோதுமை, முந்திரிப்பழம், கோதுமைமாவு, ரவா ஆகியவைகளை பித்ரு ஸதக்காவாகக் கொடுக்க விரும்பினால் அரை "ஸாஉ" கொடுக்கவேண்டும். வாற்கோதுமை, பேரீச்சம்பழம் ஆகியவைகளைக் கொடுப்பதானால் ஒரு "ஸாஉ" கொடுக்கவேண்டும். இவையல்லாமல் தம்மிடமுள்ள நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களைக் கொடுக்க விரும்பினால், முன்கூறப்பட்ட அளவுள்ள கோதுமை முதலியவைகளை கிரயம் போட்டு, அக் கிரயத்துக்கு ஏற்ற தானியத்தைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதைப் பார்க்கினும் கிரயத்தைப் பார்த்து பணமாகக் கொடுப்பதே மேலாகும். ஜக்காத் பணத்தை யார் யாருக்கு கொடுக்கலாமோ அவர்களுக்கு பித்ரு சதக்காவும் கொடுக்கலாம். ஆனால் பந்துக்களில் பித்ரு ஸதக்காவை வாங்கத் தகுந்த யோக்கியதையுள்ளவர்களிருந்தால், அவர்களுக்குக் கொடுப்பதுதான் நல்லது.

பலருடைய பித்று ஸதக்காவை ஒரு மிஸ்கீனுக்குக் கொடுக்கலாம். அவ்வாறே ஒருவருடைய ஸதக்காவை பலருக்குக் கொடுத்தலும் பொருந்தும். ஆயினும் ஒருவருக்கே கொடுத்து விடுவது உத்தமம். பட்டணம்படியில் ஒருபடி 130 ரூபாய் எடையுள்ளது; இதன்படி ஒரு "ஸாஉ" என்பது இரண்டுபடியும் 13 ரூபாய் எடையுள்ளதுமான $2\frac{1}{10}$ படியாகும். இக்கணக்குப்படி அறை "ஸாஉ" என்பது மதராஸ்படியில் சுமார் ஒன்றே ஒரு வீசம் படியாகிறது. தற்பொழுது மதராஸில் மணிக் கோதுமை படி 1-க்கு 0-4-6 விற்கிறது. இதன்படி ஒன்றே ஒரு வீசம் படிக்கு சுமார் 0-4-9 ஆகிறது. பேணுதலுக்காக ஐந்தணாக் கொடுத்து விடுவது மேலாகும். இதுதான் ஒருவருடைய ஸதக்கத்துல் பித்ருகும். இவ்வாறே அந்தந்த ஊர்களில் கோதுமையின் கிரயத்தை நிதானித்து அதன் கிரயத்தைக் கொடுக்கவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

தனக்காகவும் தன் போஷணையிலிருக்கின்ற தன் மனைவிமக்கள் முதலானோர்களுக்காகவும் தன் ஊரில் முக்கியமாக உபயோகிக்கப்படுகிற தானியத்தில் பித்று ஸதக்கா கொடுப்பது வாஜிபு. அதன் கிரயத்தைக் கொடுக்கக்கூடாது. கெட்டுப்போன அல்லது குறைவுள்ள, ஈரமுள்ள தானியங்களைக் கொடுக்கக்கூடாது. ஆனால் அதிலுள்ள ஈரம் காய்ந்து அதை பத்திரப்படுத்தி வைக்கவோ, அல்லது உணவிற்கு உபயோகிக்கவோ தகுந்ததாயிந்தால் அதைக் கொடுக்கலாம். இந்த "பித்ரா" வாஜிபாவதற்கு நான்கு ஷர்த்துகளிருக்கவேண்டும். அவையாவன:-

(1) முஸ்லிமாயிருத்தல்வேண்டும். தன் போஷணையிலிருப்பவர்களுக்காக "பித்று" கொடுக்கவேண்டுமாயின் அவர்களும் முஸ்லிமாயிருத்தல்வேண்டும். (2) தான் அடிமையாக இருக்கக்கூடாது (3) பெருநாளிரவு வருவது ரமலானின் கடைசி நாள் சூரியாஸ்தமனமாகுதல் (4) கடனில்லாமலும், தன் பராமரிப்பிலுள்ள மனைவிமக்கள் முதலியோருக்கு தேவையான இருப்பிடம், உடை முதலியவைகள், பெருநாளின் இரவு பகலில் தனக்கும் தன் குடும்பச் செலவுகட்கும் தேவையானவைகள் போக அதிகப்படியான சொத்துக்கள் இருக்கவேண்டும்.

இந்த ஷர்த்துக்களில் ஏதேனுமொன்றில்லாதிருந்தாலும் ஸதக்கா வாஜிபாகாது. ஆகவே ஈதுப் பெருநாளைக்கு முந்திய தினத்தில் சூரியாஸ்தமனமானதன் பிறகு பிறக்கும் குழந்தைகள் விவாகஞ்செய்து கொள்ளப்பட்ட மனைவி ஆகியவர்களுக்காக பித்று கொடுக்கவேண்டியதில்லை. சூரியாஸ்தமனத்திற்குப் பின் பணக்காரரானாலும் இஸ்லாம் மதத்தைத் தழுவினாலும் ஸதக்கா வாஜில்லை. சூரியாஸ்தமனத்திற்குப் பின் ஸதக்கா கொடுக்க மலிறந்துவிட்டாலும் தன் மனைவியை விவாக விலக்குச் செய்துவிட்டாலும் தன் சொத்துத் துலைந்துபோனாலும் அவன் மீது வாஜிபான பித்று அவனை விட்டும் நீங்காது. ரமலான் மாதத்தில் கடைசி நாளின் சூரியாஸ்தமனமானதிலிருந்து மறு நாள் அதாவது பெருநாளன்று சூரியாஸ்தமனமாகும் வரை பித்று கொடுக்கலாம். ஆனால் பெருநாள் தொழுகைக்கு முன் கொடுத்துவிடுவது சுன்னத்து. இதற்குமேல் காரணமின்றி பிற்படுத்துவது மக்றூஹ். ஆனால் தனக்கு பந்துவானவர்கள், தாயாதியாகவுள்ளவர்கள் இவர்களில் ஏழைகளை எதிர்பார்த்து அவர்களுக்காக பிற்படுத்திவைப்பது சுன்னத்து.

ஈதுப்பெருநாள் தொழுகை.

ஜும்ஆத் தொழுகை வாஜிபான யாவர் மீதும் இரண்டு ஈதுப்பெருநாள் தொழுகைகளும் வாஜிபு. ஆனால் தொழுகைக்குபின் குத்பா ஓதுவது சுன்னத்தாகும். ஒரு ஊரில் பல இடங்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால் ஒரே இடத்தில் தொழுவது நலம். பெருநாள் தொழுகை யாவரும் ஒன்று சேர்ந்து தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதால், ஜமா அத்துத் தவறிவிட்டால் அதைக் கலாச்செய்யவேண்டியதில்லை.

ஆனால் வேறு இடத்தில் அதை ஜமாஅத்தாகத் தொழலாம். அத்தொழுகை எல்லோருக்கும் தவறிவிட்டாலும் அல்லது ஷவ்வால் மாதப் பிறையைக்கண்ட சமாச்சாரம் பகலுக்குப்பின் கிடைத்தாலும் அத்தொழுகையை மறுநாள் தொழலாம். மறுநாளும் தவறிவிட்டால் மூன்றாவது நாளில் தொழக் கூடாது. ஆனால் காரணமின்றி மறுநாளைக்குப் பிற்படுத்துவது மக்ரூஹ்.

சூரியோதயத்திற்கு பின் சுமார் ஒரு மணி கழிந்தபின்னிருந்து மத்தியானம்வரை பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். இதுதான் பெரு நாள் தொழுகைக் குற்ற நேரமாகும். ஆனால் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் பொழுதே மத்தியானமாகி விட்டால் அந்தத் தொழுகை நிறைவேறாது.

இந்தப் பெருநாளின் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகின்றேன் என நிய்யத்து (நிர்ணயம்) செய்து "அல்லாஹ் அக்பர்" என தக்பீர்கட்ட வேண்டும் பின்பு "தனா" (சுப்ஹான கல்லாஹும்ம........) ஓதிவிட்டு கையை உயர்த்தி தக்பீர் சொல்லி கையைத் தொங்க விடவேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தக்பீர் சொல்லி தொங்க விட்டு மூன்றாவது முறையில் முன்போல் தக்பீர் கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்றுமுறை தக்பீர் சொல்வதில், ஒவ்வொரு முறையின் இடைநேரத்தில் மூன்று "தஸ்பீஹ்" ஓதப்பிடிக்கும் அவ்வளவு நேரம் மௌனமாக யிருத்தல் வேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில் தக்பீர் தஹ்ரீமாவையுஞ் சேர்த்து நான்கு முறை தக்பீர் சொல்ல வேண்டியிருக்கும். பின்பு வழக்கம்போல் எல்லாத் தொழுகையிலும் ஓதுவதுபோல் அஊது, பிஸ்மில்லா, ஸூரத்துல் பாத்திஹா, கிரஅத் ஆகியவைகளை ஓதி ருக்கூஉ, ஸுஜூது செய்து, இரண்டாவது ரக்கஅத்தை வழக்கம்போல் ஆரம்பித்துத் தொழவேண்டும். ஆனால், கிரஅத் ஓதி முடிந்த பின், முற்கூறிய பிரகாரம் மூன்று முறை தக்பீர் சொல்லிக்கையை தொங்கவிட வேண்டும். பின்பு நான்காம் முறை தக்பீர் சொல்லி, ருக்கூஉ, செய்யவேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்கஅத்தையும் தொழுது ஸலாம் கொடுத்தபின் குத்பா ஓதவேண்டும்.

இமாமைப் பின்பற்றித் தொழுவோர் "இந்தப் பெருநாளின் தொழுகையை இந்த இமாமைப் பின்தொடர்ந்து அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகின்றேன்" என நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டவேண்டும். பின்பு எல்லாத் தொழுகையிலும் இமாமுக்கும் முக்ததிகளுக்கும் எந்தெந்த விதி விலக்குகளிருக்கின்றனவோ அவைகளெல்லாம் இந்தத் தொழுகையிலுமுண்டு. ஈதுல் பித்று தொழுகைக்குச் செல்வோர் வழியில் மெதுவாக தக்பீர் சொல்லிக்கொண்டு போகவேண்டும்.

ஈதுல் பித்று பெருநாளன்று தொழுகைக்கு முன் 1 அல்லது 3 அல்லது 5 பேரீத்தம் பழங்களையேனும் வேறு மதுரமான வஸ்துக்களையேனும் புசிப்பது முஸ்தஹப்பு. அன்று பஜ்ருக்குப்பின் மிஸ்வாக்குச்செய்து, நீராடி தன்னிடமுள்ளவைகளில் சுத்தமானதும் அழகானதுமான உடைகளை அணிந்து, வாசனை திரவியங்கள் பூசி தக்பீர் சொல்லிக்கொண்டு பெருநாள் தொழுகை நிறைவேற்றப்படும் இடத்திற்கு நடந்து செல்வது முஸ்தஹப்பு. வாகனங்களில் ஏறிச்செல்வதும் குற்றமல்ல. போகும்போது ஒரு ரஸ்தா வழியாகப்போய், வரும்போது வேறு ரஸ்தாவழியாகத் திரும்புவதுமுஸ்தஹப்பு.

இமாம் தக்பீர் சொன்னபின், ஒருவன் வந்து இமாமுடன் சேர்ந்தால், தானாகவே மூன்று முறை கையை உயர்த்தி தக்பீர் சொல்லிக்கொள்ளவேண்டும். இமாம் ருக்கூவிலிருக்கும்போது வந்து சேர்ந்தால் இமாம் ருகூவைவிட்டு நீங்குவதற்குமுன், தக்பீர் சொல்லி அப்புறம் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்து கொள்ளலாமென்று தோன்றினால் அவ்வாறு செய்யலாம். இல்லையேல் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்துகொண்டு அதிலேயே மூன்றுமுறை தக்பீர் சொல்லவேண்டும். ஆனால் ருக்கூவில் தக்பீர் சொல்லும் போது கையை உயர்த்த வேண்டியதில்லை. ருக்கூவில் தக்பீர் சொல்லிமுடிவதற்குள் இமாம் அதைவிட்டு நீங்கிவிட்டால், தக்பீர் சொல்லுவதையும் விட்டுவிடவேண்டும்.

இமாம் ஒரு ரக்கஅத் தொழுதபின்போ, அல்லது இரண்டாவது ரக்கஅத்தில் ஸுஜூது செய்தோ, அல்லது இருப்பிலிருக்கும்போதோ வந்துசேர்ந்தால், இமாம் ஸலாம் கொடுத்தபின் எழுந்து தவறினவைகளைத் தொடர்ந்து நிறைவேற்றவேண்டும். ஆனால், தவறியவைகளை நிறைவேற்றும்போது கிராஅத்திற்குப் பின்புதான், தக்பீர் சொல்ல வேண்டும்.

புகழுரை.

சர்வப்புகழும் ஒருவனுகிய அல்லாவுக்கே உரியன. சாந்தியும்-இரச்சிப்பும்-சமதர்மத் தூதர் சத்தியசீலர் சர்வரே காயினுத்-செய்யிதுல் முர்சலீன்வ ரசூலுத்தகலேன் - முஹம்மது முஸ்தபா - சல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம் - அன்னவர் கழுக்குண்டாகுவனவாக.

தாரணிமக்களை நேரானவழியில் சீர்பெர செய்வதில் பேர் பெற்று விளங்கும் ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகையின் ஆலீ ஜனுப், ஆசிரியரவர்கட்கு எனது அன்பார்ந்த (அஸ்ஸலாமு அலைக்கும்) வந்தனம் சமற்பிக்கின்றேன்.

ஆ, இஃதன்றோ சிறந்த பணி,

இஸ்லாமி லிருந்தும், இஸ்லாம் மக்களை இன்னல் விளைக்கும் விஷமப் பிரசாரங்களுக்கிடையில் ஈடுபட்டு தங்களின் இனிய ஹிபாஜத்தை இன்னில உலகின்கண் திங்கள் தவராது திகழ விடுத்து வருவது நமது சமுக மக்களுக்கு இஃதோர் பெரிய அதிர்ஷ்டம் என்று சொல்வது மிகையாகாது.

பெரியாரவர்களே,

தங்களின் பொன் மொழிப்பூத்த புனித மாசிகை மலரின் இதழ் விரிந்து சுகானந்த நறுமணங்கமழத் திகழும் இம் மூன்ரும் வயதை யெத்திய மகிழ்ச்சியை தெரிவிப்பான் வேண்டி, எம்மால் வறைந்தனுப்பி யிருக்கின்ற வாழ்த்துப்பாடலை மாசிகை மாலையில் தொடுத்து வெளிக்கிடல் வேண்டுகின்றேன்.

வஸ்ஸலாம்

ஹிபாஜத்துல் இஸ்லாம் மூன்ரு மாண்டு வரவேற்பிற்கு விடுத்த வாழ்த்துக்கவி

காரைக்கால்

அழுதகவி அ. சாயபு மரைக்காயரவர்களால்

சிங்கப்பூரிலிருந்து எழுதியது

கவி விருத்தம்

சத்தியந் தூதுவர் ஷரஹுனில் ஒர்க்கடு
கத்துணை வின்னங் கலப்பற திகழ்ஹிபா
ஜத்துல் இஸ்லாம் ஜனித்த மூன்ருமலர்
இத்தரை மீதில் இதழுற்று வாழ்குவாம்.

(பதிகம் - இராகம் - நோட்டு - தாளம் - ஆதி.)

வாழ்க வாழ்கவே ஹிபாஜத்துல்
  இஸ்லாம் வாழ்கவே
நீழ்க உலக இருதி வரையில் நிலைத்து
  வாழ்கவே — வாழ்க

புகழுக்குரியோனுல் புவிமீது மாந்தர்கள்
திகழ ஞான வழுதை புகட்டுந் தீரன்
  வாழ்கவே — வாழ்க

ஆண்டு ரெண்டுனின் னறுமை தொண்டதை
ஈண்டு கூரவியலாதம்மோ இழைங்கன்
  வாழ்கவே — வாழ்க

செல்வமிகும் சென்னை சிறம்போங்கப்
  பிரந்தோய்
கல்வி அறியில் முதிர்ந்த கோவைக்
  கனியே வாழ்கவே — வாழ்க

கெட்ட காதியான் துட்ட கோஷ்டிக்
  கொள்கையை
வெட்டவெளியாய் வெருட்டி யடித்த
  வேந்தன் வாழ்கவே — வாழ்க

கருப்புக்களங்கமாய் கூட்டிதிரிக்கும்
  மாசிகை
மறுப்புக் கொடுத்து மடக்கும் மகுடமதியே
  வாழ்கவே — (வாழ்க)

மாத மாதமும் மக்கள் மகிழக் கரங்களின்
மீது வந்து அரிவைப் புகட்டும் மகிபன் -
  வாழ்கவே— — வாழ்க

சத்திய மார்க்கத்துள் சர்வசமய அம்சமும்
பெத்து அங்கந் திகழ வந்த பால்யன்
  வாழ்கவே— — வாழ்க

வந்த முளைங்களை வரவேற்று வளர்பது
சந்தா நேயர் பெருக்கா லென்றும் செழித்து
  வாழ்கவே— — வாழ்க

தனியோனருளினுல் தரணில்தாதைசோத
ரும் இனிதாய் முஸ்லிம் எல்லீர்களும்
  என்றும் வாழ்கவே — வாழ்க

ஆராய்ச்சி மேடை.

(M. V. அப்துல் ஜப்பார் வரைவது)

ஐயன்மீர் !

நம் அரும் திருமறை திருவசனங்களின் வியாக்கியானங்களையும் அவைகளுக்குமேதாவிகளான இமாம்களால் வறையப்பெற்றிருக்கும் கருத்துக்களையும் அவைகட்கு நம் பா. தா. எழுதியிருக்கும் தப்பருத்தங்கள், தவரான வியாக்கியானங்கள் முதலியவற்றையும் பன்முறையும் எடுத்தெழுதி வந்திருக்கின்றேன். பா. தா. வால் வெளியிடப்பட்டிருக்கும் ஜவாஹிருல் புர்கானை கவனிக்கப் புகின் அதில் தப்பருத்தமில்லாத இடங்கள் கிடைப்பது மிகமிக அரிதென்றே கூறவேண்டியிருக்கிறது.

இவண் நம் திருமறையாம் குர்ஆன்ஷரீபின் நான்கு திருவசனங்களின் மொழிபெயர்ப்பு வியாக்கியானம் இவைகளைக் கூறிவிட்டு அதற்கு தாருல் இஸ்லாம் ஆசிரியர் பா. தா. வால் இயற்றப்பெற்ற ஜவாஹிருல்புர்கான் என்னும் நூலில் கூறப்பெற்றிருக்கும் தப்பான வியாக்கியானங்களை மக்கள்பால் எடுத்துக் காண்பிக்கின்றேன்.

> பின்னும் (நினைத்துப்பாருங்கள்) நீங்கள் பரிசுத்தவான்களாவதற்கு நாம் உங்களுக்குக்கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். அதிலிருப்பதை சிந்தனை செய்து பாருங்கள் என மலையை உங்கள்மீதுயர்த்தி உங்களிடம் நாம் வாக்குறுதி வாங்கியிருந்தோம். இதற்குப் பின்னும் நீங்கள் மாறிவிட்டீர்கள். ஆனால் உங்கள்பேரில் அல்லாஹ்வின் கிருபையும் அவனுடைய அன்புமில்லாதிருக்கின் நீங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆய்விடுவீர்கள். 1-63. 64

இது மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றிய இஸ்ரவேலர்கள் விஷயத்தில் கூறப்பெற்றதாகும். இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறதுதாவது :—தவ்றாத் வேதத்தை மூஸா (அலை) அவர்கள்மீது இறக்கப்பட்டபொழுது இஸ்ரவேலர்களை அதிலுள்ள மார்க்கக் கட்டளைகளை எடுத்து நடக்கும்படி ஏவினார்கள். அக்கட்டளைகள் பளுவானதாகவும், கஷ்டமானதாகவுமிருந்ததால் அதன்படி நடக்க மறுத்தனர்; இவ்வாறு அவர்கள் கட்டளைக்குக் கீழ்படியாமலிருப்பதற்காக அவர்களுக்கு அறிவுறுத்துவான் வேண்டி ஒரு மலையைப் பிடிங்கி அவர்களது தலைமீது கொண்டுவந்து நிப்பாட்டும்படி அல்லாஹ் தஆலா ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு உத்திரவு செய்தான்; அவர்கள் தங்கியிருந்த இடத்தின் விஸ்தீரணம் மூன்று மைல் சுற்றளவுள்ளதாக யிருந்தது; அந்த அளவுக்குத்தக்க ஒரு மலையைப் பிடுங்கி அவர்கள் தலைக்குமேல் ஓர் ஆள் உயரத்தில் கொண்டுவந்து நிப்பாட்டப்பட்டது; அது பொழுது தவ்றாத்தில் கூறப்பெற்றிருப்பவைகளைப்பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் அம்மலையை உங்கள் மீது இறக்கிவைக்கப்படும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. அம்மலை அவர்கள் மீது விழுந்து விடுமாப்போல் அவர்கள் பார்த்தவுடன் கட்டளைகளை ஒப்புக்கொண்டு உடனே (ஸஜ்தா) சிரைவணக்கம் செய்தனர்; அதனால் அவர்களுக்காக ஏற்பாடாயிருந்த தண்டனையும் நீக்கப்பட்டுப் போயிற்று என்பதே.

மேலே கூறப்பெற்ற திருவசனம், இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்ட தண்டனையைத்தான் குறிப்பிடுகிறதென்று ஹதீது மூலமாக ஸ்திரப்பட்டு விட்டதால் இமாம்களால் இயற்றப்பெற்ற விரித்துறை கிரந்தங்களாகிய சகல தப்ஸீர்களிலும் இக்கருத்தே கூறப்பெற்றிருக்கிறது. மலையை அவர்கள் மீது உயர்த்தி அவர்களுக்கு அச்சுறுத்தி அவர்கள் நேர் பாதைக்கு வரும்படி செய்யப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவ் விடத்தில் ஓர் ஐயவினா எழுகின்றது. அதாவது:—இஸ்ரவேலர்களை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கி நேர்வழிக்குக் கொண்டுவந்ததாக இதனால் ஏற்படுகிறது; அவ்வாறு நிர்ப்பந்தம் கிடையாதென்று ஆண்டவன் கூறியிருக்கின்றான்.

அவனுடைய சொல்லிற்கும் இச்சம்பவத்திற்கும் முரண்படுவதே போல் காணப்படுகின்றது என்பதே. இதற்கு, சில சந்தர்ப்பங்களில் குப்பார்களுடன் போர்புரியும்படி உத்திரவிடப்பட்டிருப்பதேபோல் இச்சம்பவத்திலும் நடந்திருக்கிறதென தப்ஸீர் ரூஹுல் மஆனீ, தப்ஸீரகபீர் முதலிய கிரந்தங்களில் விடையிறுக்கப்பட்டிருக்கிறது.

இத் திருஅத்தியாயத்திற்கு தாருல் இஸ்லாம் ஆசிரியர் பா. தா. கூறியிருக்கும் வியாக்கியானமாவது.

நீங்கள் என்னுடைய ஏவல்களுக்கு வழிப்பட்டு நடக்க இணங்காமல் போவீர்களேல் இந்த மலையை உங்கள் தலைமீது போட்டு விடுவேன் என்று பயமுறுத்தாட்டும் பொருட்டு அல்லாஹ் தஆலாவானவன் அவர்களுக்குமேல் உச்சியில் ஒரு மலையைக் கொண்டுவந்து ஆகாயத்தில் தொங்க விட்டான் என்று எண்ணுவதானது குர்ஆன் ஷரீபின் முழுக்கருத்துக்குமே முரணாகயிருக்கிறது... ...ஆனால் உண்மையில் நடந்தது யாதெனின் மூஸா நபீ அவர்களுக்கு ஆண்டவனுடைய கட்டளைகள் வெளியாக்கப்பட்டபொழுது பனீ இஸ்ராயீல் கூட்டத்தாரின்முதியோர்கள் உயர்ந்த மலையின் கீழ் அதன் அடிவாரத்தில் நின்று கொண்டிருந்தார்கள் என்பதுதான்............என்பதே

மேலே கூறப்பெற்ற ஹதீதின்படி மலையை அவர்களின் மீது உயர்த்தப்பட்டதென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்கிறோம். இந்த ஹதீதையே தப்ஸீரரூஹுல் பயான், ரூஹுல் மஆனீ காஜின், மதாரிக், ஜமல், கபீரி, பைளாவீ, ஜலாலைன் முதலிய தப்ஸீர்கள் ஆதாரமாகக் கொண்டு இக்கருத்தையே ஸ்திரப்படுத்துகிறது. பா. தா. இந்த ஹதீதை ஆதாரமாக எடுத்துக் கொள்ளாமல் போனதற்குத்தான் காரணம் விளங்கவில்லை. இவரோ இயற்கைவாதி; 'முஃஜிஸா வென்னும் அற்புத நிகழ்ச்சிகளை மறுப்பவர்; ஆதலால் மலையை அவர்கள்மீது கொணர்ந்து நிப்பாட்டப்பட்டதென்னும் விஷயம் இவருடைய சட்டத்திற்கு (கொள்கைக்கு) ஒத்துவராது போலும். இவர் இவ்வாறு கூறுவதற்கு ஆதாரமிருக்கிறதாவென்று கவனிக்கின், காதியானி முஹம்மத் அலி தம்முடைய பயானுல் குர்ஆனில் இவ்வாறே எழுதியிருக்கின்றார். அதையே காபி அடித்து பா. தா. வெளியாக்கியிருக்கிறார் போலும். இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களின் றிவாயத்தை விட ஒரு காதியானியின் கூற்று இவரிடம் ஒப்புக் கொள்ளப்பட்டதாகயிருப்பது தான் மாபெரும் ஆச்சரியமாகயிருக்கின்றது.

மேலும் பளுவான மலையை பனீ இஸ்ராயீல்களின்மீது ஆகாயத்தில் கொண்டுவந்து நிப்பாட்டப்பட்டதென்னும் விஷயத்தில் சந்தேகங் கொள்பவர்கள் முல்ஹிதுகள் (வழிகெட்டவர்கள்—வழி சருகியவர்கள்) என இமாம் பக்ருத்தீன் ராஜீ அவர்கள் தப்ஸீரகபீரில் கூறியிருக்கின்றார்கள். இஃது அல்லாஹ் தஆவின் (குத்ரத்) தத்துவத்திற்கு ஒரு பிரமாதமான காரியமல்லவென்றும் கூறியிருக்கின்றார்கள். பா. தா. வறைந்திருக்கும் வியாக்கியானம் இத்திரு வசனத்திற்கு எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்கிறதென்பதை கவனிப்போம். அத்திரு வசனத்தில் இஸ்ரவேலர்கள்மீது மலையை நாம் உயர்த்தினோமென்று அல்லாஹ் தஆலாகூறுகின்றான். பா. தா. வோ "இஸ்ரவேலர்கள் அது சமயம் மலையின்கீழ் நின்றார்கள்; மலையானது அவர்களுடைய தலைக்குமேல் உயர்ந்து நின்றது" என்று கருத்தமைக்கின்றார். சிற்றறிவுடையோருங் கூட இவ்வியாக்கியானம் அதற்குப் பொருத்த மற்றதாகுமென்பதை நன்கறிவர். மலை யடிவாரத்தில் வாக்குறுதி வாங்கும்போது அவ்விடம் மலை உயர்ந்துநின்றது என்றால் இவ்வார்த்தைக்கேதேனும் அர்த்தமுண்டா? அர்த்தமற்ற வார்த்தைகள் குர்ஆனின் வசனங்களில் சேர்க்கப்பட் டிருக்கிறதென்றால் குர்ஆனின் பஸாஹத், பலாகத்தென்னும் நாகரீகத்திற்கு எத்தனை ஹானியை உண்டுபண்ணும். குர்ஆனின் திருவாக்கியங்கள் சுருக்கமாயும் நிகரற்றதாயும்,அதன் ஒரு சிறு வாக்கியமும் அர்த்தபுஷ்டி யுடையதாகவுமே அமையப் பெற்றிருக்கிறதென்பது உலகப் பிரசித்தம். பா. தா. வின் கூற்று இதற்கு நேர் முரணாய்க் காணப்படுகின்றது. ஆண்டவன் தன் தத்துவத்தை எடுத்துக் காட்டுமிடத்து இவர் கூறும் வியாக்கியானம் அம்மகத்துவத்தையே குறைக்கக்கூடியதாகயிருக்கிறது. அவருடைய கூற்றுப்படி அவ்வமயம் பருவதம் உயர்ந்திருந்தது என்று கருத்துக் கொள்ளப்படுமாயின் அந்த வாக்கியம் அனுவசியம் என்று ஏற்பட்டுவிடும். இஃது குர்ஆன் ஷரீபின் போக்குக்குப் பொருத்த மற்றதாகுமென்பதை யாவரு மறிவர். காதி

யானிகளைப் பின்பற்றி இவர் செய்துவரும் வியாக்கியானம் இவ்வாறு அனர்த்தமாகவே தான் வந்து முடிகிறது. தான் கூறிய வியாக்கியானம் சரி என்று கூற முற்படுவாராயின், இவராவது அல்லது ஜவாஹிருல்புர்கானுக்கு மதிப்புறை கொடுத்த ஹாபிஜ் பாஜில் பாக்கவீயாவது அதை நிரூபிப்பார்களா?

மேலும் சனிக்கிழமையதினம் உங்களிலெவர் வரம்பு மீறி விட்டார்களென்பதையும், அதற்காக அவர்களை நீங்கள் சிறுமைப்பட்ட குரங்குகளாய் விடுக எனக் கூறினோம் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். ஆதலால் (அக்காலத்தில்) அவர்கள் எதிரிலிருப்பவர்களுக்கும் அவர்களுக்குப் பின் வருபவர்களுக்கும் இதை ஒரு எச்சரிக்கையாகவும் பயந்துகொள்பவர்களுக்கு ஒரு நற்போதனையாகவுஞ் செய்தோம். 1—65,66.

இத்திரு வஸனங்களின் விருத்தாந்தமாவது:--ஐலா வென்னும் பட்டினத்தில் தாவூத் (அலை) அவர்கள் காலத்தில் ஒரு கூட்டத்தினரிருந்தனர்; அவர்கள் சனிக்கிழமை யன்று மீன்வேட்டை யாடுவதை விட்டு விலக்கப்பட்டிருந்தனர். அதுபொழுது ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் கடலிலுள்ள எல்லா மீன்களும் ஆங்கு வந்து சேர்ந்துகொண்டிருந்தது. மீன்களின் அதிகரிப்பால் பார்ப்பவர்களுக்கு தண்ணீரே தோன்றாது அக்கடலோரம் மீன் மயமாகவே இருக்கும். சனிக்கிழமை கழிந்தவுடன் அம்மீன்கள் பற்பல திசைகளுக்கும் சென்று போய்விடும். ஷைத்தானனவன் "சனிக்கிழமையில் மட்டுந் தானே அம்மீன்களைப் பிடிப்பதை விட்டும் விலக்கப்பட்டிருக்கிறீர்கள்; மற்ற நாட்களில் மீன் பிடிப்பதைப்பற்றி ஒன்றும் தோஷமில்லையே என அவர்களது மனதில் ஊசாடனஞ் செய்தான்; அதன்பின் அவர்கள் அக்கடற்கரையோரமாய் பெரும் பெரும் தடாகங்களைத் தோன்றி கடலிலிருந்து அதற்குக்கால்வாய்களையும் வெட்டிவைத்தனர். வெள்ளிக்கிழமை மாலை அக்கால்வாய்களை திறந்துவைப்பார்கள்; கடல் அலைகள் மீன்களை அத்தடாகங்களுக்குள் கொணர்ந்து சேர்த்துவிடும்; அத்தடாகங்களும் ஆழிய கெங்கையைப் போன்றிருந்ததால் அம் மீன்கள் அதிலேயே தங்கிவிடும். மறுநாள் அதைப் பிடித்து தாங்களும் தின்பதுடன் இதரர்களுக்கும் விற்பனை செய்வர். (அவர்கள் வலைகளையும், தூண்டிகளையும் வெள்ளிக்கிழமைதினமே கட்டிவிட்டு சனிக்கிழமை ஆங்குபோகாமலிருந்து ஞாயிற்றுக்கிழமை அம் மீன்களைப் பிடித்துக்கொள்வார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது) இவ்வாறு அவர்கள் பன்முறை செய்தும், ஒருவித தண்டனையும் ஏற்படாதிருப்பதைக் கொண்டு சனிக்கிழமையதினமும் மீன் பிடிக்கத் துணிந்தனர். அவர்கள் 70 ஆயிரம் பேர்களிருந்தனர். அவர்களில் ஒரு கூட்டத்தார் தாங்கள் மீன் பிடிக்காம லிருந்ததுடன் இதரர்கள் சனிக்கிழமை மீன் பிடிப்பதை விலக்கிக்கொண்டு மிருந்தனர்; மற்றொரு கூட்டத்தார் தாங்கள் மீன் பிடிக்க வில்லையாயினும் மற்றவர்கள் மீன்பிடிப்பதை விலக்கவில்லை. மூன்றாவது கூட்டத்தினர் பாவத்தில் முங்கி ஆண்டவனுடைய வரம்பைக்கடந்து சனிக்கிழமை யன்று மீன் பிடித்துப் புசித்தும், விற்பனை செய்துகொண்டு மிருந்தார்கள். அவ்வாறு விலக்கிக்கொண்டிருந்த கூட்டத்தினர் 12 ஆயிரம் பேர்களிருந்தனர். அவர்கள், மீன் பிடிப்பவர்களுடன் கலந்திருக்க மனஞ் சகியாமல் ஊரைப் பிரித்துக் கொண்டு மத்தியில் ஓர் சுவர் போட்டுக் கொண்டார்கள். இவ்வாறு பல வருஷங்கள் கழிந்தன; பிறகு தாவூத் (அலை) அவர்கள், அக் கூட்டத்தினர் மீது சாபங்கூறினார்கள். அல்லாஹ் தஆலாவும் அவர்கள் மீது கோபமுற்றான். விலக்கிக்கொண்டிருந்த கூட்டத்தினர் ஒரு நாள் காலையில் வீட்டை விட்டு வெளியேறினர். சபிக்கப்பட்டவர்கள் ஒருவரும் வெளியேற வில்லை. வாயல்களும் தாழிட்டபடியே இருந்தது. பின்னர் சுவர் ஏறி வீட்டினுள் புகுந்து பார்க்கும்பொழுது யாவரும் வால்களையுடைய குரங்குகளாக மாற்றப்பட்டிருந்தனர். அக்குரங்குகள் தங்கள் உறவினரை அவர்களது துணிகளை முகர்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டது; இவர்கள் அக்குரங்குகளை இன்னாரென்று தெரிந்துகொள்ள வில்லையாயினும் பொதுவாக அவர்களை நோக்கி "முன்னமே அக்கெடுதியைவிட்டு உங்களை நாங்கள் விலக்கவில்லையா? எனக்கூறினர். அதற்கு அக்குரங்குகள் கண்ணீர் சொறிந்தவைகளாய் ஓம் என சமிக்கைசெய்தன. அவைகள் மூன்றுநாள்வரை அவ்வாறே யிருந்து மரணித்துப்போய்விட்டன. இச்சரித்திரம் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்

டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹதீதை ஆதாரமாகக்கொண்டு திரு குர்ஆனில் கூறப்பட்டபடி அவர்கள் குரங்குகளாகவே மாற்றப்பட்டுப் போய்விட்டார்கள் என சகல முபஸ்ஸிரீன்களும் கூறியிருக்கின்ருர்கள். இதுதான் (ஸஹீஹான) சரியான வியாக்கியானமென்று தப்ஸீர் ரூஹுல்மஆனீ முதல்வால்யம் 257-வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒருசிலர் அவர்களுடைய குணங்கள் குரங்குகளுடைய குணங்களைப்போல் மாற்றப்பட்டது; சரீரங்கள் அவ்வாறு மாற்றப்படவில்லை எனக்கூறியிருக்கின்றனர். இது ஆதாரமற்ற கூற்ருகும். மேலும் சஹீஸ் முஸ்லிமுடைய மற்ருெரு ரிவாயத்தானது அவர்கள் குரங்குகளாகவே மாற்றப்பட்டுப் போய்விட்டார்களென்பதையே வலியுறுத்துகின்றது. அதாவது:—நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒருவர் இப்பொழுதிருக்கும் குரங்குகளும் பன்றிகளும் முன்காலத்தில் மாற்றப்பட்டதிலுள்ளவைகளா? என்று கேட்டதற்கு, நபிகள் நாயகம் (ஸல்) கூறியதாவது:—தண்டனைக்குள்பட்ட எவ்வர்க்கத்தினருக்கும் பின் சந்ததிகளை அல்லாஹ் தஆலா உண்டாக்குவதில்லை; நிஷ்சயமாக குரங்குகளும் பன்றிகளும் அவர்களுக்கு முற்காலத்திலும் இருந்தது என்பதே. இந்த ஹதீதிலிருந்து சபிக்கப்பட்ட கூட்டத்தினர் சரீரத்துடனே குரங்குகளாக மாற்றப்பட்டு அப்போதே அவர்கள் மரணமாய்விட்டனரென்றும்; இப்பொழுதிருக்கும் குரங்குகளும் பன்றிகளும் அவர்களுக்கு முற்காலத்திலேயேயிருந்த குரங்கு பன்றிகளின் சந்ததிகளென்றும் நிஷ்சயமாய்த் தெரிந்து கொள்கிருேம்.

இத்திரு வசனத்திற்கு, "தாவூத் (அலை) அவர்களால் சபிக்கப்பட்டவர்களை உண்மையில் குரங்குகளாக மாற்றப்படவில்லை; அவர்களுடைய குணங்கள் மட்டுந்தான் குரங்குகளின் குணங்களே போன்று ஆக்கப்பட்டுவிட்டது; அந்த ஜாதியார்கள் ஒரு நாள் காலையில் திடுமென குரங்குகளாக உண்மையில் மாற்றப்பட்டுப் போய்விட்டார்களென்று கூறுங் கதைகளெல்லாம் ஆதாரமற்ற அசம்பாவித கதைகளாகவே காணப்படுகின்றன" வென்று பா. தா. குறிப்பிடுகின்ருர்.

நான் மேலே குறிப்பிட்டிருக்கும் ஹதீதிலிருந்து அந்த ஜாதியார் உண்மையில் குரங்குகளாகவே ஆய்விட்டார்களென்று நிஷ்சயமாகத் தெரிந்து கொள்கிருேம். மேலும், "நீங்கள் குரங்குகளாக ஆய்விடுக" என்று அல்லாஹ் தஆலா கூறியதாக திருவசனம் வலியுறுத்துகின்றது. திருக்குர்ஆனின் மற்ருேரிடத்தில் கூறப்படுவதாவது.

ஏதாவதோன்றை (உண்டாக்க) நாம் நாடுவோமாயின் அதற்கு நம்முடைய சோல்லாகிறது (குன்) உண்டாகுக என்று நாம் சோல்வதாக யிருக்கும்; அதுபோழுது அது உண்டாய்விடும் என்பதாகும். அந்த ஜாதியாரை குரங்குகளாக ஆய்விடுக என்று அல்லாஹ் தஆலா சொல்லிருக்கும்பொழுது, அவ்வாறு அவர்கள் குரங்குகளாக ஆகாமலிருப்பதற்கு எவ்வித காரணங்களுமில்லை. சஹீஹான ஹதீதுகளின் மூலம் அவர்கள் குரங்குகளாகவே மாற்றப்பட்டு விட்டார்களென்று நிஷ்சயப்பட்டுவிட்டதால் பா. தா. அதில் சந்தேகங்கொண்டு மாற்றமாக வரைவதற்கு எவ்வித காரணமுமில்லை. ஆனல் நான் முன் வரைந்துள்ளபடி பா. தா. இயற்கை வாதியாகையால், மானிடர்கள் குரங்குகளாக மாற்றப்பட்டுப் போனர்களென்னும் விஷயம் அவருடைய சட்டத்திற்கு ஒத்துவரவில்லை போலும். ஹதீதில் கூறப்பட்டிருக்கும் இச்சரித்திர சம்மந்தமான விஷயங்கள் இவருக்கு ஆதாரமற்ற அசம்பாவிதமான சம்பவங்களாகவே தோன்றுகிறது. இவரின் இக் கூற்றுக்கு ஆதாரந்தானென்னே? என்று கவனிப்போமாயின், பழைய காதியானி முஹம்மதலியின் வியாக்கியானந்தான் முன் நிற்கின்றது. அதைப் பின்பற்றித் தான் இவ்வாறுன வியாக்கியானம் செய்திருக்கின்ருர். காதியானி முஹம்மதலியின் வியாக்கியானத்தின் கதி இன்னதென்பது உங்களுக்குத் தெரியாததன்று. உலமாக்களால் தக்க ஆதாரங்களோடு அஃது ரத்து செய்யப்பட்டுப் போயிருக்கின்றது. மிஸர் (எகிப்து) தேச அறிஞர்கள் அதனைப் பரிசிலனை செய்து அவ்வியாக்கியானம் திருக்குர்ஆனின் கருத்துக்களையே மாற்றிப் புறட்டிவிட்டிருக்கின்றதெனவும், அது முஸ்லிம்களின் ஹிருதயத்தைக் கெடுத்து, அவர்களின் ஈமானையே பாதிக்கக் கூடியதாயிருக்கிறதென்றும் தீர்மானித்து, அரசாங்க மூலம் அதனைப் பரிமுதல்செய்து இனி அப்பிரதிகளை யாரும் விற்பனை செய்யக்கூடாதென்று அறிவித்துவிடும்படி செய்துவிட்

டார்கள். அத்தகைய வியாக்கியானத்தைத் தமிழ் பாஷையில் காப்பி அடித்து அதன் மூல கிரந்தத்தின் பெயரை வெளியிடாமல் பா. தா. வெகு சாமர்த்தியமாக நந்தமிழ் தேசத்தில் வெளியிட்டு வருகின்ருர். ஒரு சமயம் அதிலுள்ள தவறுகளை எல்லாம் திருத்தி ஒழுங்கிட்டு விடுகின்றேன்; முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்ய வேண்டாமென்று வரைகின்ருர்; மற்ருெரு சமயம் அது முக்கியமான தப்பலீ ரென்றும், ஒவ்வொரு முஸ்லிமிடத்திலும் அஃதிருக்க வேண்டியது அவசியமென்றும், பறை சாற்றுகின்ருர். என்னே! இவரது பிரசாரத்தின் விநோதம்!!

இத்தகைய வியாக்கியானப் புத்தகம் நம் வாலிபர்களிடையே பரவுமாயின் அவர்களின் ஹிருதயக் கமலம் எவ்வாறு கெட்டுப் போகும் என்பதை நேயர்களேயூகிப் பார்களாக. காதியானி முஹம்மதலீ குர்ஆனின் விரித்துறை என்ற பெயரை வைத்துக் கொண்டு அதில் தன் கோஷ்டியினரின் கொள்கைகளை எல்லாம் நிறப்பிவைத் திருக்கின்ருர். அதனையே ஒரு அச்சரமும் பாக்கியில்லாமல் பா. தா. காப்பி அடித்து தன்னுலியற்றப் பெற்ற தென்று தமிழ் பாஷையில் வெளியிட்டு வருகிருர். இதுவரை அதன் நான்காம் வெளியீடு! இல்லை வழிகேடு வெளிவந்துவிட்டது. இதனை ஒரு அஹ்மதிய்யக் கொள்கையை வெளியிடும் நூலென்று கூறவேண்டுமேயன்றி குர்ஆனின் வியாக்கியானமென்று கூறுவது ஒருக்காலும் பொருந்தாது. அரபி அக்ஷரங்களின் விபரங்களையுங்கூட சற்றுந்தெரிந்துகொள்ளாத ஒருவர் திருக்குர்ஆனுக்கு வியாக்கியானஞ் செய்யப்புகின் அவரிடமிருந்து இதைத்தவிர்த்து வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும். இதனுல்தான் சிங்கைக்குச் சென்றிருந்ததால் குர்ஆன் வியாக்கியானத்திற் கென்று கௌர்வப்பிச்சை எடுத்து பண்டு சேர்க்க முயற்சித்தபொழுது, பிரபல தனவந்தரான அல்காப் வீட்டில் நடந்த சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது அனுவிசயமென்று கூறமுடியாது. ஆங்கு நடைபெற்றவை தானென்னே? திருக்குர்ஆனின் வியாக்கியான கர்த்தாவென்று நடிப்பவரிடம் அரபிப்பிரமுகர்கள் இனிய அரபிப்பாஷையில் சம்பாஷிக்கத் தொடங்கினர்கள்; வியாக்கியான கர்த்தா திக்குதிசை தெரியாது விழிக்கவே, உபகாரியாகச் சென்றிருந்தவர் இவருக்கு அரபிப்பாஷை அறவே தெரியாதென்று கூறினர்; அப்பிரமுகர்கள் "அரபி பாஷை தெரியாத ஒருவர் திருக்குர்ஆனுக்கு வியாக்கியானஞ் செய்வதெப்படி? என்று செங்கையாகத் திருப்பிவிட்டனர்.

ஆனுல் தாருல் இஸ்லாத்தின் தலைமை ஆசிரியர் அல்ல இப்பொழுது இரண்டாவது ஆசிரியர் அவருக்கும் அரபி தெரியாதென்றுகூற முடியாது. அவரோ பாஜில்பாக்கவீயானவர் அவரும் இந்த தப்பான வியாக்கியானத் திற்கு மதிப்புரை கொடுத்திருக்கிருர் என்பதுதான் பேராச்சிரியம்?

சோதரீர்! இவ்வாறு திருக்குர்ஆனுக்கு அருத்தமும் பொருத்தமுமற்ற வியாக்கியானஞ் செய்யப்பட்ட இந்நூல் நந்தமிழ்தேசத்தில் பரவாவண்ணம் தக்க ஏற்பாடு செய்யுங்கள். இன்னும் விட்டுக்கொண்டிருப்பீர்களாயின் தமிழகத்தே காதியானி—அஹ்மதிய்யாக் கொள்கைகள் பரவி வேரூன்றிவிடும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்கு அநேக அற்புதங்க ளழிக்கப்பட்டது; அவைகளில் திருக்குர்ஆனென்ருகும். அப்பரிசுத்த வேதமானது இறக்கப்பட்டவண்ணம் ஒரு அக்ஷரமும் மாற்றப்படாது பதிமூன்று நூற்ருண்டுகளாக முஸ்லிம்களிடத்தே இருந்துவருகின்றது. இது ஒன்று தான் இஸ்லாத்தின் ஜெகஜ்ஜோதியை விளக்கிக்காட்டும் மாபெரும் அற்புதமாக இன்றளவு மிருந்து வருகின்றது. இதற்கு தப்பர்த்தம் செய்யப்படாமல் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். நம் திருநபி (ஸல்) அவர்கள் திருமறைக்கு உயரிய வியாக்கியானங்கள் செய்ததோடு அதன் கட்டளைகளை அனுஷ்டித்தும் காட்டிவிட்டார்கள். இமாம்களான மேதாவிகள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி திரு மறை வியாக்கியான கிரந்தங்கள் பற்பல இயற்றி இருக்கின்றனர். அவைகளை எல்லாம் விடுத்துத் தப்பானவழியில் வியாக்கியானம் புரிவது விபரீதத்தை உண்டாக்கக் கூடியதன்ருே? இவ்வாறு தப்பான வியாக்கியானங்கள் பரவாமலிருப்பதற்கு நஞ்சகோதிரர்கள் முயற்சிப்பார்களாக.

பா. தா. வின் கொள்கை வெளியாய்விட்டது.

அஹ்மதிய்யாக் கோஷ்டியின் கொள்கைகள் சன்மார்க்கத்திற்கு முற்ற முற்ற மாற்றமாயிருப்பதை பன்முறையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. அக்கொள்கைகள் இஸ்லாத்தின் மூலக்கொள்கைக்கு விரோதமாயிருப்பதையும் நிரூபிக்கப்பட்டுப் போயிருக்கிறது. பா. தா. வோ அக்கோஷ்டியினரிடம் ஊதியம் பெற்று அவர்களின் கொள்கையை பரத்திவந்தார். பின்னர் அவர்களின் கொள்கைகள் சரியானதென தனக்கு தோன்றவில்லை; ஆதலின் அவர்களிடமிருந்து கிடைத்துவந்த ஊதியத்தையும் 1924-ம் வருஷத்தோடு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் அறிவித்தார். அதன்பின் அஹ்மதிய்யாக்களின் கொள்கைகள் இஸ்லாத்தின் மூலக் கொள்கைக்கு முரண்பட்டதாக இல்லை என்று பிதற்றினார். சிலுவைக் கொள்கை போலுற்றவைகள் அஹ்மதிய்யாக்களின் நூல்களிலும், பா. தா. வின் புத்தகங்களிலும் காணப்படுகிறதென்று நிரூபிக்கப்பட்டது. அதனை கிறிஸ்தவர்களின் கொள்கைதான் என ஒப்புக்கொண்டார். அது கிறிஸ்தவர்களின் கொள்கையானால் இஸ்லாத்தின் மூலக் கொள்கைக்கு விதர்ப்பமானதென்பதை எவரே மறுக்கவல்லார். பா. தா. வின் கூற்றுப்படிக்கும் அஹ்மதிய்யாக்களின் கொள்கைகள் இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளுக்கு விதர்ப்பமானதென்பது தெற்றென புலனாய்விட்டது. இந்நிலைமையில் 15-1-32-ல் வெளியான தா. இ. இல்

> இஸ்லாத்தில் பிரிவினை என்பதில்லை; பிரிவினை என்றால் இஸ்லாம் அல்லாத ஒரு தன்மையே அது குறிப்பிடும் ஷீஆ, சுன்னி; அஹ்மதீ, வஹ்ஹாபீ என்பனவெல்லாம் சிற்சில அபேதமான அபிப்பிராய பேதங்களேயாகும் மூலக் கொள்கைகளில் எல்லாரும் ஒத்தே இருக்கின்றனர்.

என்று வரைகின்றார். என்னே! இவரின் அபிப்பிராயம் இவ்வாறு சுழன்றுகொண்டே போகிறது. ஷீஆ வகுப்பாரையும், மூலக்கொள்கையில் விரோதமில்லாதவர்களென்று எழுதத்துணிந்துவிட்டார். ஷீஆக்களில் ஒருவகுப்பார் அலீ (ரலி) அவர்களை நபீ என்றே கூறுகின்றனர். அவர்களில்மற்ற வகுப்பார்களும் வழிகேடானகொள்கை உடையவர்களாகவே இருக்கின்றனர். அஹ்மதிய்யாக்களோ மூலக்கொள்கையில் விரோதமானவர்களென்று ஏற்கனவே பா. தா. ஒப்புக் கொண்டிருக்கின்றார் இப்பொழுதோ இவர்களெல்லோரும் மூலக்கொள்கையில் விதர்ப்பமில்லாதவர்களென்று எழுதியிருக்கின்றார். அவ்வாறு அஹ்மதிய்யாக்களின் கொள்கைகள் அவருக்கு சரியானதென தோன்றுங்கால் அவர்களிடமிருந்து கிடைத்து வந்த சம்பளத்தை ஏன் நிருத்திக் கொள்ள வேண்டும்? சிறிய அபிப்பிராய பேதத்திற்கெல்லாம் இவ்வாறு செய்யலாமா? அஹ்மதிய்யாக்களையும் ஷீஆக்களையும் சேர்த்துக்கொண்டவர் காதியானி வகுப்பார்களையும் காரிஜீ முதலிய வழிகெட்ட கூட்டத்தார்களையும் விட்டுவிட்ட காரணமென்ன? சில சமயங்களில் அவர்களுடன் சேரவில்லை என்று அவர் நடித்தாலுங்கூட அஹ்மதியாக்களுடன் தொன்று தொட்டே இவர் சேர்ந்து பிரசாரம் செய்து வருவதும், அவர்களின் புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து விற்பனைசெய்து வருவதும், கடைசியாக அவர்களுடனேயே சேர்ந்து தனது தீயப் பிரசாரத்தைச் செய்ய வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கம் போலும். அஹ்மதியாக்களின் கொள்கை சரியல்லவென்று ஒப்புக்கொண்டு தாமே பத்திரிகையில் எழுதிவிட்டதால் அக்கொள்கையைத் தழுவி எழுதப்பெற்ற புத்தகங்களின் விற்பனை குறைந்து வருவதை அறிந்த பா. தா. அதற்கு ஒரு வழி தேட வேண்டுமென்று சிந்தனைசெய்து அஹ்மதிய்யாக்களின் கொள்கைகள் மூலத்திற்கு விரோதமில்லை என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குப் புலனாகாததால் அதைக் கூற முற்பட்டார் போலும். இவ்வாறே இவருடைய கூற்றுக்கள், கொள்கைகள் முன்னுக்குப்பின் முறணானதாகவும் மூன்றாவது மாதிரியாகவும் நிலையற்றதாகவுமிருந்து வருகிறது. இவண் குர்ஆன் ஷரீபின் திருவசனமொன்றை கூறிமுடிப்பது பொருத்தமாகுமென நினைக்கின்றேன். அல்லாஹ்தஆலா எவ்வாறு உமைகள் கூறுகின்றான் என்பதைநீர் பார்க்கவில்லையா மணமான கலிமா (திருவாக்கியம்)வானது மணமான விருக்ஷத்தைபோலாயிருக்கும் அதனுடைய வேரானது (பூமியில்) தரிபட்டிருக்கிறது. அவ்விருக்ஷத்தின் கிளைகளானது வானத்தை (அளாவிப்

போய்க் கோண்டிருக்கிறது). அதுதான் ஆண்டவனது கட்டளைக்கேற்ப ஒவ்வோறு சமயத்திலும் அதன் கனிவர்க்கங்களைக் கோடுத்துக் கோண்டிருக்கிறது சிந்தனை செய்வதற்காக வேண்டிய ஜனங்களுக்கு உவமைகளை அல்லாஹ் தஆலா சோல்லிக் காண்பிக்கின்றான். கெட்டகலிமாவுக்கு உவமையானது(பேய்க் குமட்டிக்காயின்கோடியைப்போன்ற)கெட்ட கோடியைப் போன்ருயிருக்கும் அது பூமியின் மேல் படர்கின்றது. அதற்கு ஸ்தரமான நிலையில்லை அல்குர்ஆன்.

இவ்வாறே பா. தா. வின் நிலைமையும் நிலையற்றதாகவே இருக்கின்றது. ஆகையால் அவரின் கூற்றை நம்பி மோசம்போகாமலிருப்பீர்களாக.

காலண்டர்கள் வரவு.

M. A. முஹம்மத்அலிசாஹிப் & Co,

சென்னை தம்புசெட்டி தெருவு நெ. 63 எண்ணிலுள்ள பிரபல கைலிவியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ் M. A. முஹம்மத் அலீ சாஹிப் கம்பெனியாரிடமிருந்து இங்லீஷ், அரபி, தமிழ் ஆகிய மூன்று தேதிகளும் மூன்று வர்ணங்களில் நேர்த்தியாக அச்சிடப்பட்டு மாதம் ஒருஷீட் கிழிக்கக் கூடிய காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம். அதில் அவர்களின் வியாபாரக்குறியாகிய துர்யாம்பழமும், டாலரும் பினுங்கிலுள்ள பிராஞ்சு ஆபீசின் விலாசமும் குறிப்பிடப்பெற்றிருக்கின்றன.

S. M. ஸுலைமான் சாஹிப் & Co.

சென்னை தம்புசெட்டித் தெருவு 58 நெம்பர் எண்ணிலுள்ள பிரபல கைலி வியாபாரியும், கமிஷன் ஏஜெண்டுமான மெஸ்ஸர்ஸ் S. M. சுலைமான்சாஹிப் & கம்பெனியாரிடமிருந்து இங்லீஷ், அரபி, தமிழ் ஆகிய மூன்று பாஷைகள் அமைந்ததாகவும் தினம் ஒருஷீட் கிழிக்கக்கூடியலாகவுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம் அதன் அட்டையில் பார்ப்பவர்களின் கண்களை கவரத்தக்க விதமாக கிட்டா மஸ்ஜிதின் அழகியபடமொன்று வரையப்பெற்றிருக்கிறது. அத்துடன் இக்கம்பெனிக்கு பினுங்சோலியாஸ்டீட் ஜனப் S. முஹம்மது ஹுசைன் சாஹிப் ஏஜண்டாக யிருப்பதையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

K. M. முஹம்மதுகவ்து & Co.

பினுங், பிரபலவர்த்தகர்களான மெஸ்ஸர்ஸ் K. M. முஹம்மது கவ்து அண்டு கம்பெனியாரிடமிருந்து "ஷீட்" காலண்டரொன்று வரப்பெற்ருேம் அதில் அவர்களின் பிராஞ்சு ஆபீஸ்களான ரங்கூன், மதராஸ், நாகப்பட்டினம் முதலிய வியாபாரஸ்தலங்களின் விபரம் வெகுதெளிவாக எழுதப்பட்டு அழகுபொருந்தியதாக யிருக்கிறது.

R. E. முஹம்மதுகாஸிம் & Co.

கிள்ளான், சிங்கப்பூர், பினுங், ரெங்கூன் கல்கத்தா, மதராஸ் முதலிய இடங்களின் பிரபல வர்த்தப்பிரபுவாகிய மெஸ்ஸர்ஸ் R. E. முஹம்மது காஸிம் அண்டு கம்பெனியாரிடமிருந்து 'ஷீட், காலண்டரொன்றுவரப்பெற்ருேம். அது கண்களை கவரத்தக்கமிக்கஅழகு பொருந்தியதாக இருப்பதுடன் அதன் அட்டையில் கிள்ளானிலுள்ள அவர்களின் தலைமை ஆபீஸ் கட்டடம் மிக்க அழகிய முறையில் பொறிக்கப்பட்டிருப்பதானது மனதைக்கவரத்தக்கதாக யிருக்கிறது.

S. E. S. அப்துல்கரீம் & பிரதர்ஸ்

சென்னை அங்கப்பநாயக்கன்தெருவு பிரபல வியாபாரிகளாகிய மெஸ்ஸர்ஸ் S. E. S. அப்துல்கரீம் &. பிரதர்ஸ் அவர்களிடமிருந்து அரபி, தமிழ், இங்கிலீஷ் ஆகிய மூன்று தேதிகளும் அச்சிடப்பெற்ற காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம். அதன் அட்டையில் கூத்தானல்லூர் பெரியபள்ளிவாசலின் முகப்பு அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. பினுங்கிலுள்ள அவர்களது பிரான்சு ஆபீசின் விபரமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது மாதமொருஷீட் கிழிக்கக் கூடியதாகவு

மிருக்கிறது அதில் அவர்களின் வியாபாரக் குறியாகிய துருக்கித் தொப்பியின் படம் வரையப் பெற்றிருக்கிறது.

A. M. அப்துல்லாசாஹிப் & Co.

சிங்கப்பூர் மார்கட் ஸ்ட்ரீட், பிரபலவர்த்த கரும் கமிஷன் ஏஜெண்டுமான மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் கப்பெனியாரின் ஷீட்காலண்டரொன்று சென்னையிலுள்ள ஷெயாரின் பிராஞ்சு ஆபீஸ் மலையப்பெருமாள் தெருவு மெஸ்ஸர்ஸ் A. M அப்துல்லா சாஹிப்ஸன்ஸ் அவர்களிடமிருந்து வரப் பெற்றோம்.

E. P. முஹம்மது நூருத்தீன்

சென்னை அங்கப்பநாய்க்கன்தெருவு 68 நெம்பர் எண்ணிலுள்ள பிரபலவர்த்தகரும், கமிஷன் ஏஜெண்டுமாகியஜனாப் E. P. முஹம்மது நூருத்தீன் அவர்களிடமிருந்து இங்கிலீஷ் அரபிதமிழ் இம்மூன்றுபாஷைகளும் அமைந்ததாயும் தினம் ஒரு ஷீட்கிழிக்கக்கூடியதாக உள்ள பலவர்ணங்களையுடைய ஷீட்டுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதன் அட்டையில் அவர்களின் வியாபாரக் குறியாகிய அச்சைத் தொப்பி பலவர்ணங்களில் மிக அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

S. M. K. ஷாஹுல் ஹமீத் & Co.

சென்னை அங்கப்பநாயக்கன் தெருவு பிரபல ஜவுளி, தேயிலை வியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ் S. M. K. ஷாஹுல்ஹமீது கம்பெனியாரிடமிருந்து அரபி தமிழ் இங்லீஷ் ஆகிய மூன்று தேதிகளும் 3 கலர்களில் அழகிய முறையில் அச்சிடப்பெற்று ஐந்துநேரங்களின் தொழுகைக்குள்ள நேரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும் காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

சிலோன் நேயர்களுக்கு நன்றி பாராட்டல்.

அன்புமிக்க நண்பீர்!

நான் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க சார்பாக சிலோன் பகுதிகளில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு இந்தியாவந்து சேர்ந்திருக்கிறேன். இதனிறுதியில் ஒரு சில ஊர்கள் மட்டுந்தான் பார்க்க முடிந்தது; மற்ற ஊர்களுக்கும் விஜயஞ் செய்யுமாறு பலகனவான்களின் அழைப்புகள் கிடைத்தும் தேக அசௌகரியமும், முபாரக்கான ரம்லான் ஷரீபும் குருக்கிட்டு விட்டமையால் எல்லா ஊர்களுக்கும் சமூகம் கொடுக்க முடியாது போயிற்று. ரமலானுக்குப்பின் அந்த ஊர்களுக்கும் போய்வர நாடி இருக்கின்றேன். கொளும்பு, ரெத்னபுரி, கண்டி, கம்பளை முதலிய ஊர்களிலுள்ள முஸ்லிம் கனவான்கள் எனக்களித்த உபசாரத்திற்கும் நல் வரவிற்கும் ஒரு அளவு கூறமுடியாது. ஆங்காங்கு மகாசபைகள் கூட்டி நம் சங்கத்தின் நோக்கங்களையும், இஸ்லாத்தின் உயரிய சிறப்புக்களையும், எடுத்துக்கூற வசதி அளித்தது பாராட்டத் தக்கதே யாகும். இது விஷயமாய் அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு வல்ல நாயன் கூலி கொடுப்பானாக.

காதியானி, அஹ்மதிய்யாக்களின் தீயப் பிரசாரங்கள் சிற்சில இடங்களில் மாறுதல்களை விளைவித்திருக்கின்றன. அவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டிய விஷயமாயும் முயற்சி எடுக்கவேண்டியதாயிருந்தது. மகாநாடுகளிலும் அது விஷயமாய்ப் பேசவேண்டியதிருந்தது அதனால் பொது ஜனங்கள்பால் அநேகப்பிரயோசன மேற்பட்டது. பொதுவாக ஆங்குள்ள முஸ்லிம்கள் என்னை அன்புடன் வரவேற்று எனக்களித்த உபசாரத்திற்கும் சங்கத்திற்களித்த ஆதரவிற்கும் நன்றி பாராட்டுகின்றேன். குறிப்பாய் கொளும்பில் ஜனாப்களான அல்ஹாஜ் P. S. K. V. பல்லாக்குலெப்பைஆலிம், அல்ஹாஜ் A. M. K. ஆலிம்சாஹிப், K. M. மீரான் ஆலிம் கம்பனி ஓனர் M. S. M. அப்துர்ரவூப்சாஹிபு, ம. கா நா. மு. ஷ. மக்கீஆலிம்சாஹிபு, P. M. K. A. ஜானைத், M. S. அப்துற்றஹீம்லெப்பை, T. M. K. அப்துல்லாசாஹிபு, மர்தானா K. ஷாகுல்ஹமீது, கொளும்பு புகாரி ஹோட்டல் K. M. அப்துல்காதிர் ஹமீதிய்யா பேக்கரீ ஓனர் அல்ஹாஜ் J. E. அஹ்மத்சாஹிபு, A. காதிர்பாக்ஷாசாஹிபு' சையத்ரவூப் பாஷா முதலியோரும், ரேத்னபுரியில் ஜனாப்களான

M.K.M.K.A. முஹம்மது அபூபக்ர்லப்பை, P. M. S. S. நூருத்தீன் அப்துல்காதிர் கம்பெனியார், W.M.K.S. ஷாஹுல்மீதுமுதலியவர்களும் கண்டியில் ஜனுப்களான A. E. A யூசுப்சாஹிப் கம்பெனியார், ஷி கம்பெனி பிரான்சு மானேஜர் அப்துல்கரீம் சாஹிப் கமால் நைனர் கம்பெனியார், ஹனபிப்பள்ளி வாசல் பேஷ் இமாம் கதீப் அப்துல்ஹை ஆலிம் சாஹிப், தைக்காப்பள்ளி கதீப் முஹையத்தீன் ஆலிம் சாஹிப், ரஹ்மானிய்யா பேக்கரியார்கள், ஸல்மா ஸ்டோர் A. R. அப்துற்றஹீம், முஹம்மது ஹுஸேன் ஆலிம் சாஹிப், முதலியவர்களும், கம்பளையில் மஸ்ஜித் முத்தவல்லிகளம் ம. ச. ஜனுப்களான நூர்ஜஹான் கம்பெனியார், E. தாவூத் சாஹிப், மௌலவீ M. A. அப்துல்காதிர் சாஹிப், முஅத்தின் அலாவுதீன் சாஹிப் முதலிய கனவான்கள் செய்த பேருபகாரமானது மறந்துவிடப்பாலதன்று ஈதுப் பெருநாள் கழித்தவுடன் நான் சிலோனின் இதர பகுதிகளுக்கும் விஜயஞ்செய்யப் போவதால் அவ்விடங்களிலுள்ள நண்பர்கள் யாவர்களும் தக்க உதவி புரிவார்களென்று எதிர் பார்க்கின்றேன்.

(மௌலவீ) S. K. முஹம்மது
ஷர்புத்தீன் (சாஹிப்.)

ஆசிரியர் குறிப்பு.

உலக முஸ்லிம் மகாநாடு :— இம் மகாநாடு 6,7-12-31-ல் பைத்துல் முகத்தஸில் சிறப்பாக நடந்தேறிய தென்பது யாவருமறிந்ததே. சர்வ தேச முஸ்லிம் பிரதி நிதிகள் ஒருங்கே சேர்ந்திருந்தனர். இது உலக சரித்திரத்திலேயே முதலாவதாகுமென்பதில் ஐயமின்று. இத்தகைய மகாநாடுகள் உலக முஸ்லிம்களுக்கு எத்தகைய பயனழிக்கத்தக்கதென்பது வெளிப்படை. இம் மகாநாடு விஷயமாய் யூதர்களும் ஹிந்துக்களும் பற்பல தப்பபிப்பிராயங்களைப் பறப்பி வந்தனர். அவைகள் ஒன்றும் பயன்படாது மகாநாடு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. அல்குத்ஸ் பட்டினம், (ஜெருஸலேம்) இரண்டாவது கலீபாவாகிய உமர்கத்தாப் (ரலி.) அவர்களால் கைப்பற்றப்பட்டதாகும். அதிலுள்ள மஸ்ஜித அக்ஸாவானது நபிமார்களின் கிப்லாவாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிஃருஜுக்கேகிய ஸ்தலமாகவும், பற்றபல ஞாபகச் சின்னங்களை அமையப் பெற்றதாகவுமிருந்து வருகிறது. யூதர்கள் மகா யுத்தத்திற்குப் பின்பாலஸ்தீனை தங்கள் சுயபதியாக ஆக்கிக்கொள்ளக்கருதி ஏழை அராபியர்களிடமிருந்து அதிகக்கிரயம் கொடுத்து பூமிகளை வாங்கி தங்கள் வர்க்கத்தினரை அதில் குடியேற்றி பாலஸ்தீனத்தை யூதமய மாக்க முயற்சித்து வருகின்றனர். மஸ்ஜித அக்ஸாவைக் கைப்பற்றி யூதக்கோவிலாக ஆக்குவதற்கும் சூழ்ச்சிசெய்து வருகின்றனர். இதனாலேயே ஒப்பாரிச்சுவர் சம்மந்தமாய் முஸ்லிம்களுக்கும் யூதர்கட்கும் சச்சரவு ஏற்பட்டது. இப் புண்ணிய ஸ்தலங்களைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்கள்மீதும் கடமையாக யிருப்பதால் சர்வதேச முஸ்லிம்களும் இவ்விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதும் இம்மகாநாட்டு நோக்கங்களி லொன்றாகும். மேலும் ஹிஜாஸ் ரயில்வே முஸ்லிம்களின் தர்மச் சொத்தென்று சர்வதேசசங்கம் தீர்மானித்துவிட்டதால் அதனை ஒப்புக்கொண்டு நடத்தவேண்டியதற்குள்ள தீர்க்காலோசனை புரியவேண்டியதாகவுமிருந்தது. இதற்கும் மகாநாட்டில் தனிக்கமிட்டி ஏற்படுத்தப் பெற்று அஃது வேலையை கவனித்து வருகிறது. இக்காங்ரஸின் நோக்கங்களை அறிவிப்பான் வேண்டி உலகமுழுவதிலும் பிரசாரக்கமிட்டி ஏற்படுத்த முடிவுசெய்திருக்கிறார்கள். இதனால் சகல முஸ்லிம்களும் ஒன்றுபட தக்க வசதி ஏற்படுமென எதிர்பார்க்கின்றோம். ஒவ்வொரு முஸ்லிம்களும் இதன் நோக்கத்திற்கு ஆதரவளித்து காரியாதிகள் செவ்வனே நடைபெற முயற்சிப்பார்களாக.

சந்தா நண்பர்களுக்கு

நம் அருப் மாசிகையின் இரண்டாம் ஆண்டு முடிவடைந்து விட்டபடியால் இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். தவிர நடைபெறும் 1932ம் வருஷத்திற்குள்ள சந்தாவையும் முன் பணமாக அனுப்பி மாசிகையை அபிவிர்த்திக்குக் கொண்டுவருமாறு கோருகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணுவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானல் நேயர்களுக்கு 5 அணு வீண்சிலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாயிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாகயிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு, 67, அரப் ஸ்டிரீட், M. M. ஷரீப் இவர்களிடமும்,

பினங் வாசிகள் 119, சோலியா ஸ்டிரீட்,
N. K. முஹம்மது கவ்து சாஹிப், அவர்களிடமும்,

பெட்ரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனப் K. A. பகீர் முஹமமத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கோளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட்டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, மதருஸ், G. T.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லா சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

மெஸர்ஸ் **K. A.** பக்கீர் முஹம்மத் **& Co.,**
P. O. Box. 52.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ஜனுப் **N. K.** முஹம்மத் கவ்து அவர்கள்,
119 ,A. ஷோலியா ஸ்டிரீட்.

ரங்கூன்

ஜனுப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகரசம் & **Co,** 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜீ முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனுப் மவ்லவீ **M.** ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.